# மானுடம்

சமூகவியல் ஏடு

A802
Prof. Y. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Sociological Society
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A802

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

11045.S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம்

# MAANUDAM

## சமூகவியல் ஏடு - 1

ஆலோசக ஆசிரியர் :

என். சண்முகலிங்கன்

ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை

ஆசிரியர் :

பா. விக்னராணி

11045 S.C

Sociological Society
University of Jaffna
1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்த

மானுடத்துள்

ஒளிரும்

உண்மை அறிவு

எங்கள்

சமூகவியல் சமூக

அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினையானது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகவியல் சமூகம் மாணவர்களின் சமூகவியல் ஏட்டினை முதன் முறையாக வெளிக் கொணருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் தமிழ் மொழி மூலம் சமூகவியல் சிறப்புக் கற்கை நெறியை பயிலும் வாய்ப்பு ஒரு பல்கலைக் கழகத்திலும் இருந்ததில்லை. ஒன்றிணைந்த கடும் முயற்சியின் காரணமாக யாழ் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் சிறப்புக்கலை ஐந்து ஆண்டுகட்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்டு, அதன் ஒரு தொகுதி மாணவர்கள் வெளியேறியுள்ளனர். இதனைத் தவிர இக் கற்கை நெறியானது பொதுக்கலை மாணவர்களையும் பெரிதும் ஈர்த்துள்ளது. இந்த வகையில் அண்மையில் முதலாம் வருடத்தில் மிகக் கூடுதலான மாணவர் சமூகவியல் கல்வியை பயில்வதனை குறிப்பிடலாம். எங்கள் கலைப்பீடத்தில் துரிதமாக வளர்ச்சி காணும் கற்கை நெறியாக சமூகவியல் விளங்குகின்றது.

இந்த ஏடு, மாணவர்கள், விரிவுரையாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. இதில் வெளிவரும் கட்டுரைகள் இக்கற்கை நெறி மாணவர்களுக்கும், எமது சமூகத்திற்கும் வழிகாட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இப்பணியை முன் எடுக்கும் சமூகவியல் சமூகத்தினர் பாராட்டுக்குரியவர்கள். இனிவரும் ஆண்டுகளிலும் புதிய புதிய ஆக்கங்களைப் படைப்பார்கள் என்பதும் எனது நம்பிக்கை. இவர்களின் முயற்சிகள் தொடர என்றும் எனது வாழ்த்துக்கள்.

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை

**துணைவேந்தர்**

**யாழ் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சியின் வெளிப்பாடு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகவியல் சமூகத்தினர் மானுடம் என்னும் ஆண்டிதழினை வெளிக்கொணரவுள்ளனர். இவ்விதழுக்கு இந்த ஆசிச்செய்தியினை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சமூகவியல் சமூகம் இப்பொழுது பெரிய சமூகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இவ்வளர்ச்சியினைப் பிரதிபலிப்பதாக இவ்விதழ் அமையுமென நம்புகிறேன். இவ்விதழ் சிறப்புற என் வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
**கலைப்பீடாதிபதி**

## வரலாற்றில் ஓர் ஏடு

சமூகமாற்றங்களின் ஊடாக மானுடம் நிலைத்து நிற்க வேண்டும். இதனையே தமது குறிக்கோளாகக் கொண்டு, பொருளியற்துறையின் சமூகவியல் பிரிவு மாணவர்களின் ஆரம்ப முயற்சியாக சமூகவியல் ஏடு ஒன்றை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். அரசியல், இன, சமய, சமூகப்பூசல்கள் நிறைந்த இலங்கையின் சமூகங்களிடையே இன்று பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவது தவிர்க்க முடியாததொன்றே. இப்பிரச்சனைகளின் மத்தியில் சமூகவியலைக் கற்கும் மாணவர்களின் இந்த வெளியீடு அவர்களின் கடமைகளில் ஒன்றாகவும் உள்ளது. இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வரும், முதலாவது இதழாக இவ்வேடு இருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவும் உள்ளது. மானுடத்துக்கு என் வாழ்த்துக்கள்.

**பசுபதி சிவநாதன்**
**தலைவர், பொருளியல் துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாய் பெரிதுவக்கும் மனது

மானுடத்தின் மேன்மையே
எமது இலக்கும் வாழ்வுமானது
அதுவே எங்கள் சமூகவியல் ஏட்டிற்கு
'மானுடம்' என்று பெயர் சூட்டக் காரணமானது

தமிழில் சமூகவியல், மானுடவியல் அறிவினை எழுதும்
இந்த ஏடு,
ஒரு நீண்டகாலக்கனவு
எண்பதுகளில் தொடங்கிய பயணம்
படிப்படியாய்,
இன்று பயன்கனிகளைக் காணும்
மானுடம் – அவற்றிலே ஒன்று

கனவு மெய்ப்பட,
ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்
தாயாய் என் மனசு

மேலும் மேலும்
எங்கள் சமூகவியல் குடும்ப
ஆற்றல்கள் வளரட்டும்
உறவுகள் வலுப்படட்டும்
சமூக உணர்வு மேம்படட்டும்
வருமிடர் அனைத்தும் தொலைய
எல்லோர்க்கும் வாழ்வு தரும்
நீதியான சமூகத்தை நோக்கிய
எமது பயணம் தொடரட்டும்

என். சண்முகலிங்கன்
**பெருந்தலைவர், சமூகவியல் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் சமூக அறிவியல்

சமூகவியல் சமூகத்தின் கன்னி வெளியீடாக ''மானுடம்'' ஆய்வு ஏடு மலர்வது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எமது பல்கலைக்கழகத்து அண்மைக்கால அபிவிருத்தி முனைப்புக்களுள் ஒன்றாக அமைவது சமூகவியல் பயில் நெறிகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றமாகும். சமூகவியலில் பொதுப்பட்டம், சிறப்புப்பட்டம், முது தத்துவ மாணிப்பட்டம் முதலியவற்றுக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் வேளையில், மாணவர்களது அறிகைசார் புலக்காட்சியினை வளர்க்கும் பொருட்டு உயர்நிலையான ஆய்வுகள் தமிழ் மொழியில் ஆக்கப்பட வேண்டியுள்ளன. அந்தப் பணியை மானுடம் நிறைவேற்றி வைத்தல் பாராட்டுக்குரியது. இந்தப் பணியில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை
பெரும் பொருளாளர், சமூகவியல் சமூகம்.

---

பொன்னுலகின் புதிய கீதங்களே
பூமியின் சௌந்தர்ய கோலங்களே
மின்னிவரும் நாளை மேன்மைகளே
மானுடத்தின் வெற்றி நாதங்களே

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயரா உழைப்பின் கனி

மானுடம் எனும் இப்புதிய ஏடு சமூகவியல் சமூகத்தின ரின் முதல் வெளியீடு என்ற விதத்தில் எம் சமூகம் பெருமை கொள்கிறது. இம் முயற்சி எம் அனைவரினதும் உழைப்பின் பலாபலன்கள் என்றே குறிப்பிடவேண்டும். எம்முடைய மாணவர்கள் தமது அயரா உழைப்பினைத் தந்துள்ளனர். இரண்டு கண்களாகத் திகழும் எம் ஆசிரியப் பெருந்தகைகள் மிகுந்த பெருமைக்குரியவர்கள். மேலும் எமது சமூகவியல் சமூகம் வளர்ந்து பயன்தரு கனிகளைத் தரும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

அ. எ. றிச்சேட்
தலைவர், சமூகவியல் சமூகம்.

## நன்றியில் கனக்கும் இதயம்

எங்களின் 'மானுடம்' சமூகவியல் ஏடு வடிவம் பெற உழைத்த அத்தனை நெஞ்சங்களையும் நன்றியுடன் வாழ்த்து கின்றேன்.

ஆலோசக ஆசிரியர்களாக எங்கள் சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்களின் வழிகாட்டல்; அயராது இந்தப் பணி யில் எங்களை இயக்கிய சமூகவியல் சமூகத்தின் தலைவரின் பேரார்வம்; பதிப்பு வேளை ஒப்புநோக்கலில் துணையான எங்கள் மூத்த உறுப்பினரான ரவிராஜபுத்திரன், மானுடத் தின் அட்டையை அர்த்தத்துடன் அமைத்துத்தந்த நாக லிங்கம் நூலாலயம், பதிப்பின் அழகுவண்ணம் காத்த புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தினர், எங்களுக்கு பொருள் வழி கைகொடுத்த அன்புள்ளங்கள், விளம்பரதாரர், அனைவருக்கும் என்றும் எங்கள் யானிடம் சார்பில் என் நன்றிகள்.

— பா. விக்னராணி
ஆசிரியர், சமூகவியல் ஏடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Sociological Society'

## 1996 - 1997

*Faculty of Arts*
*University of Jaffna.*

### OFFICE BEARERS

PATRON :
N. Shanmugalingan,
*Senior Lecturer in Sociology*
*(Grade I)*

SENIOR TREASURER
G. M. Sebastiampillai
*Senior Lecturer in Sociology*
*(Grade II)*

PRESIDENT
**A. E. Richard**

VICE - PRESIDENT
**M. Sivaharan**

JOINT SECRETARIES
**K. Mugunthan**
**J. Bahirathy**

TREASURER
**J. Ealilarasi**

EDITOR
**B. Vignarani**

REPRESENTATIVES

**N. Bahirathy**
**P. Malini**
**K. Sivachelvi**
**T. Krishnakumar**
**A. Doreen**
**A. Kamalarajah**
**A. Suganya**
**R. Mugunthan**
**K. Narayani**
**M. Pradeepan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'Sociological Society' · Executive Committee · 1996/97



**Seated** (L – R) :- J. Ealilarasi (Treasurer), Prof. N. Balakrishnan, (Rector, Vavuniya campus) Prof. A. Sanmugadas, (Dean Arts) A. E. Richard (President), Prof. P. Balasundarampillai (Vice Chanceller), N. Shanmugalingan (Patron) G. M. Sebastiampillai (Senior - Treasurer), K. Mugunthan (Secretary)

**Standing** (L – R) :- M. Sivaharan (Vice - President), A. Kamalarajah, A. Suganya, K. Sivachelvi, B. Vignarani (Editor), P. malini, N. Bahirathy, A. Doreen, M. Pradeepan, R. Mugunthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


### கோட்பாடுகள்

- O செயற்பாட்டுவாதம் — *அ. எ. றிச்சேட்* — 01
- O மார்க்சிசக் கோட்பாடு — *அனற் வினிபேபி* — 09
- O சமூகமாற்றம் தொடர்பான சுழற்சிக் கோட்பாடுகள் — *சரோஜா திருநாவுக்கரசு* — 11
- O சமூக உளவியற் பின்புலத்தில் சமூக நெருக்கடிகளும், நடத்தைகளும் இசைவாக்கலும் — *கலாநிதி சபா. ஜெயராசா* — 16

### எண்ணக்கருக்கள்

- O முற்சாய்வு — *பா. விக்னராணி* — 24
- O தலைமைத்துவம் — *கு. முகுந்தன்* — 29
- O அந்நியப்படுத்தப்பட்ட உழைப்பு — *கார்ல்ஸ் மாக்ஸ்* — 33
- O ஒழுங்கமைவின்மை என்ற எண்ணக்கரு — *மார்ஷல் பி. கிளினோட்* — 38
- O சுயதிறன் எய்தல் — *அ. றொபின்சன்* — 41

### ஆய்வு முறையியல்

- O சமூக ஆய்வுக்களத்தில் பங்குகொள் அவதானி — *ம. சிவஹரன்* — 46
- O வினாக் கொத்தின் உருவாக்கம் — *அ. டொறின்* — 50

### சமூகப் பிரச்சினைகள்

- O கிராமக் கல்வி விருந்தி மூலம் சமூக மேம்பாடு சாத்தியமா? — *கு. யசிதரன்* — 54
- O தென்னாசியாவில் நகரச்சேரிகள் — *வ. வரதகௌரி* — 60
- O சீதனப் பிரச்சினை — *சுஜாதா. தங்கராசா* — 65
- O விதவைகள் பிரச்சினை — *பி. குயின் ஜெயமேரி* — 69
- O யுத்தத்தின் சமூக விளைவுகள் — *ஆர். எம். ஜே. ரவிராஜபுத்திரன்* — 76
- O தற்கொலை — *க. சிவச்செல்வி* — 82
- O இன்றைய யாழ்ப்பாண மக்களின் சமூக மனம் — *பகீரதி. ஜீவேச்வரா* — 86
- O விலகல் நடத்தை என்ற எண்ணக்கரு பற்றிய மீளாய்வு — *ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை* — 92
- O மானுட மேம்பாட்டின் சமூகவியல் — *என். சண்முகலிங்கன்* — 99


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பாட்டுவாதம் ஓர் அறிமுகம்
# Functionalism An Introduction

அ. எ. றிச்சேட்

சமூகவியல் கோட்பாட்டு வளர்ச்சியில் செயற்பாட்டுவாதம் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. சமூக அமைப்பை (Social Structure) ஆராய்வதற்காக இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது. இக் கோட்பாட்டினை மையப்படுத்தி பல அறிஞர்கள் சமூகவியலை ஆராய்ந்துள்ளனர். இவர்களில் ஸ்பென்சர், எமில்டூர்கைம், மேட்டன், பார்சன்ஸ் ஆகியோர் பிரதானமானவர்கள். இவர்களை விட இக்கோட்பாடு தொடர்பாக மானுடவியலாளர்களான மலினோவஸ்கி, ரட்கிலிவ் பிறவுண் போன்றோரின் கருத்துக்களும் முக்கியத்துவம் பெறும்.

சமுதாயம் என்பது பல கூறுகளினால் ஆக்கப்பட்ட ஓர் ஒன்றியமாகும். அந்த ஒன்றியம் முழுமையாக இயங்கும் பொருட்டு அதனுள் உள்ள கூறுகள் ஒருங்கிணைந்த நிலையில் செயல்படுகின்றன. சமுதாயத்தின் இந்த ஒன்றியத்தன்மையை விளக்குவதே 'செயற்பாட்டியல் கொள்கை' ஆகும். சமூக அமைப்பின் திருப்திகரமான செயற்பாட்டிற்கு சமூக அமைப்பின் பல்வேறுபட்ட கூறுகள் காத்திரமான வகையில் செயற்படவேண்டும். சமூக அமைப்பு சிதறாமல் ஒரே இணைவுள்ள அமைப்பாக இருப்பதற்கு ஒவ்வொரு கூறும் உதவுகின்றது. இவ்வாறு சமூக அமைப்பினை பராமரிப்பதற்கு பல்வேறுபட்ட கூறுகளும் ஆற்றும் பங்களிப்புக்களே செயற்பாடுகள் (Functions) எனக் கூறப்படுகின்றது.

சமூகவியலாளர்கள் தத்தம் பார்வைகளில் செயற்பாட்டை வரையறுக்க முயன்றுள்ளனர். மேட்டன் (Merton) அவர்களின் கருத்துப் பிரகாரம் "நன்கு அவதானிக்கப்பட்ட விளைவுகளே செயற்பாடுகள் என்றும் இவ்விளைவுகளின் மூலம் குறிக்கப்பட்ட சமூக முறைமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளுவதற்கு அல்லது இணங்குவதற்கு பாதை வகுக்கப் படுகின்றது'', என்கின்றார். கிளைட் கின்கோ (Clyde Kinckhoh) ''ஓரளவான பண்பாட்டு நிலையே செயற்பாட்டுவாதம் என்றும், இது சமூகத்துக்கும், தனிநபருக்கும் பொறுப்பை வரையறுத்துக் கொடுக்கின்றது என்றும் இப்பொறுப்பானது சமூகத்தின் பார்வையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் தனிநபரின் பார்வையில் இணங்கத்தக்கதாகவும் அமைகிறது'' என்பார். ''சமூக வாழ்க்கைக்கும், சமூகத்தை உடல் அமைப்பாகக் கருதும் சமூகக் கூறுகளுக்குமிடையே காணப்படும் ஒத்த தன்மையின் அடிப்படையிலேயே செயற்பாட்டுவாத எண்ணக் கரு உருவாகின்றது; குறிப்பிட்ட பயனை ஏற்படுத்தும் செயற்பாட்டின் பங்களிப்பின் மூலம் சமூக முறைமையை அது இயக்கும்'' என்பது ரட்கிளிவ் பிறவுணின் வரையறையாகும்.

எச். எம். ஜோன்சன், (H. M. Johnson) ''முழுமையற்ற சமூக அமைப்பில் விசேட குழு, ஒன்று அல்லது சில சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு துணைபுரியுமானால் அக்குழுவிற்கும் செயற்பாடு உண்டு'' என்பார். இவ்வாறு சமூகத் தேவைகளுடனும், சமூக வாழ்க்கையுடனும் செயற்பாடு தொடர்புபடுத்தப்படுவதைக் காணலாம்.

சமூகவியலில் செயற்பாட்டுவாத எண்ணக் கருத்தினை அறிமுகப் படுத்தியவர் 'ஸ்பென்சர்' (Herbert Spencer) ஆவார். பரிணாமக் கொள்கையும், மனித உடலமைப்புக்கும் சமூக உடலமைப்புக்கும் இடையே காணப்படும் ஒற்றுமையுமே, இவரது கருத்துக்களின் அடிப்படையாகும். மனித உடலமைப்பு ஒத்த தன்மை கொண்டதாக இருக்கின்றது என்றும், வெவ்வேறு உறுப்புக்களை வேறுபடுத்துவது கடினமானது என்றும் 'டார்வின்' கூறிய கருத்துக்களை ஸ்பென்சர் ஏற்றுக் கொள்கின்றார். பரிணாமக் கொள்கையின் அடிப்படையிலேயே இவர் செயற்பாட்டுவாதக் கொள்கையை முன்வைத்தார். மனித உடலமைப்பையும், சமூகவமைப்பையும் ஒப்பீடு செய்து மனித உடலமைப்பும், சமூக அமைப்பும் ஒரே தன்மையின எனவும், நிறுவ முற்பட்டுள்ளார். மேலும் மனித உடலமைப்பும் சமூக அமைப்பும் எளிமையான நிலையிலிருந்து, சிக்கலான அமைப்பு நிலைக்கு மாறுகின்றன. ஆரம்பத்தில் சிக்கலான அமைப்பு இல்லை. ஆனால் படிப் படியாகவும், மெதுவாகவும், முழு அமைப்புமே சிக்கலாகவும், கடினமாகவும் மாற்றம் அடைகின்றது என்கின்றார். இவ்வாறாக மனித உடலமைப்பும், சமூக அமைப்பு ஆகியவற்றுக்கிடையே காணப்படும் பல ஒற்றுமைகளையும் சுட்டிக்காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டு வாதம் தொடர்பாக டூர்கையினுடைய ஆய்வு களும் எமது கவனத்துக்குரியன. இவருடைய முக்கிய படைப்பாக, 'சமுதாயத் தொழிற்பகுப்பு' (The Division of Labour in Society) அமைகின்றது. செயற்பாடு ஒரு நடவடிக்கை அல்ல. மாறாக சில தேவைகளை நிறைவேற்றும் கருவியே எனலாம். சமூக உண்மைகளே (Social Facts) செயற்பாடு என்பது இவரது கருத்தாகும். மேலும் பல்வேறுபட்ட சமூக உண்மைகளின் வெளிப்பாடே சமூக அமைப்பாகும். சமூக உண்மைகளின் செயற்பாட்டுத் தன்மையை விளங்கிக் கொள்ளாமல் செயற்பாடு பற்றி தெளிவான கருத்தினைப் பெற முடியாது என டூர்கைம் ஏனைய அம்சங்களை விட செயற் பாட்டின் மீது கூடுதலான கவனம் செலுத்தியுள்ளமையை காணலாம்.

பண்பாடு, சமுதாயம் ஆகியவற்றின் அமைப்பும், செயல் தன்மையும் பற்றி மலினோவஸ்கியும், ரட்கிளிவ் பிறவுண் போன்ற மானிடவியலாளர்களின் கருத்துக்களும் இக் கோட்பாட்டின் வளர்ச் சிக்கு துணையாகியுள்ளன. மலினோவஸ்கியின் கருத்துப்பிரகாரம்; சமூகத்தைப் பற்றி சரியாக ஆராய வேண்டுமானால் சமூகத்தின் பண்பாடு பற்றி முதலில் விளங்க வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் மக்களின் சமூக வாழ்வு பற்றி பண்பாடு மேலெழுந்த வாரியான நடத்தையைக் காண்பிக்கின்றது. ஒவ்வொரு தனிநபரும் சமூகத்துடன் ஒட்டி வாழ வேண்டுமென்பதற்காக சில இணக்கங்களை மேற்கொள்ளுகின்றான். இதனால் சமூகபண்பாடு மேன்மையடைய உதவுகின்றான். ஒருவனுடைய சிந்தனா சக்தியையும், அறிவையும் மேற்படுத்துவது சமூக பண்பாட்டு முறைமையாகும் பண்பாட்டுக் கூறுக ளின் ஒருங்கிணைப்பும், செயற்பாடும் அந்தந்தப் பண்பாட்டின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதே இவரது செயற்பாட்டியலின் மையக் கருத்தாகும். எனவே பண்பாடு, பல கூறுகள் ஒழுங்கிணைந்த முழுமை எனவும், அந்த முழுமையை அதன் வெளிப்பாடுகளின் மூலம் அலசி ஆராய்வதே மலினோவஸ்கியின் அடிப்படை கொள்கை எனவும் நாம் தெரிந்திட முடியும்.

ரட்கிளிவ் பிறவுண் செயற்பாட்டியற் கொள்கையை விபரிக்கும் போது செயலை விட அமைப்புக்கு முக்கியத்துவம் தருகின்றார். சமூக அமைப்பினைத் தெரிந்து கொண்டாலொழியச் செயற்பாட்டை புரிந்து கொள்ள முடியாது என்பது அவர் நிலைப்பாடு. அமைப்பு பற்றி விளக்குவதற்கு ஓர் உயிரியை (Organism) எடுத்துக் காட்டாகக் கொள்கின்றார், உயிரி என்பது பெரும்திரளான உயிரணுக்களையும் (Cells) அவற்றோடு தொடர்புற்ற உயிர் நீரையும் கொண்ட ஒட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத் தொகுப்பாகும். இவைகள் தமக்குள் முறைப்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட செயலுறவுகளைக் கொண்டுள்ளன. இவையனைத்தும் உயிரியின் வாழ்விற்காக ஒழுங்கிணைத்து செயல்படுகின்றன. இவ்வாறு உடலிலுள்ள அலகுகள் அதன் இயக்கத்துக்கு எவ்வாறான உறவைப் பெறுகின்றது என்பதே அதன் அமைப்பு எனலாம். உயிரியின் வாழ்க்கையைப் போன்றே சமுதாய வாழ்வைக் காணும் 'பிறவுண்' அதனுள் பல்வேறு அலகுகள் இணைத்திருக்கும் படியான அமைப்பைக் காணமுடியும் என்கின்றார். இவ்வாறு அமைப்புக்கு சிறப்பிடம் கொடுத்ததால், இவரது கொள்கை 'அமைப்புச்—செயற்பாட்டியல்' (Structural – Functionalism) எனப்படுகிறது.

மலினோவஸ்கி, ரட்கிளிவ் பிறவுண் ஆகியோரின் கொள்கைகள் சமூக பண்பாட்டு அமைப்புக்களைப் புரிந்து கொள்ளுவதில் பெரும் உள்ளொளியைத் தந்தன. இருப்பினும் இவர்களைத் தொடர்ந்து வந்த அறிஞர்கள், இக் கொள்கைகளில் இருந்த குறைகளைக் களைந்து வலுவடையச் செய்தனர். இவர்களுள் சமூகவியலாளரான றொபட் மேட்டன் (Robert Merton) முக்கியம் பெறுகின்றார். இவருக்கு முன் செயற்பாட்டியலில், ஒரு சமூகக் கூறின் வெளிப்படையான செயலை (Manifest Function) மட்டும் கருத்திற் கொண்டு அதன் செயற்பாட்டை ஆராயும் போக்கு இருந்தது. சமூகத்தில் எந்தக் அக்காரணத்திற்காக, நோக்கத்திற்காக ஒரு சமூகக் கூறு ஏற்பட்டதோ அக்காரணத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்றும் வகையில் அக்கூறு செயற்படுகின்றதா என்பதை ஆராய்ந்து வந்தார்கள். ஆனால் மேட்டன் இவ்வகையான ஆய்வுப் போக்கில், ஒரு திருப்பத்தினை ஏற்படுத்தினார். இவரது சமூகக் கோட்பாடும், சமூகக் கட்டமைப்பும் (Social Theory And Social Structure 1959) நூலில் இது பற்றி விரிவாக எழுதுகின்றார். ஒவ்வொரு சமுதாயக் கூறும் வெளிப்படையான ஒரு செயலையும், உள்ளார்ந்த நிலையில் வேறொரு செயலையும் கொண்டிருக்கும். ஒரு சமுதாயக் கூறு செயல்படும் போது அதன் உள்ளார்ந்த செயல் (Latent Function) வெளிப்படையாகத் தோன்றாமல் அச்செயலின் மறைமுகப் பகுதியில் ஆழ்நிலையில் புதைந்து கிடக்கும். இதனை ஓர் உதாரணம் மூலம் விளக்குவார் மேட்டன்.

ஒரு குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனை ஓர் எதிர் நடவடிக்கையாக, பழிவாங்கும் செயலாக வெளிப்படையாகத் தோன்றினாலும் அதன் உள்ளார்ந்த செயல் வேறொன்றாக உள்ளது. தண்டனை வழங்குவதன் மூலம் சமூகம்போற்றிக் காக்கும் உறுதிப்பாடுள் (Solidarity)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்கள், நெறிமுறைகள் எதிர்பார்ப்புகள் நடத்தை முறைகள் ஒழுக்க முறைகள் போன்றவை நசுக்கப்படாமல் கட்டிக்காக்கப்படுகின்றன. இவ்வாறு சமுதாயக் கூறுகளின் செயல்கள் இருவகைச் செயல்களைப் பெற்றுள்ளமை மேட்டனின் எழுத்துக்களில் துலங்கக் காணலாம்.

செயல்பாட்டியல் கோட்பாட்டினை மேலும் வளர்த்தெடுத்தவர்களில் 'பார்சன்ஸ்' (Parsons) குறிப்பிடத்தக்கவர். இவருடைய 'சமூகச்செயல்களின் கட்டமைவு' (Structure of Social Action) என்ற நூல் முக்கியமானது. இவருடைய கோட்பாட்டின் மையப் பொருள், சமூகச் செயல் அமைப்பின் கூறுகளைப் பற்றி விளங்கிக் கொள்வதாகும். சமூக அமைப்பை விளங்கிக் கொள்ளுவதற்கு சமூகச் செயற்பாடுகளின் கூறுகளைப் பற்றிய தெளிவான விளக்கம் முக்கியமானதாகும் என்பது இவரது கருத்தாகும், சமூகத்தில் உள்ள பெரும் பான்மையான மக்களின் தேவைகளை செயற்பாட்டுக் கூறுகள் ஓரளவுக்கு நிறைவேற்றுகின்றன. ஆகவே இவ்வறிஞர் செயற்பாட்டுக் கூறுகளை அமைப்புடன் இணைத்துப்பார்க்கிறார். சமூக அமைப்பின் வெற்றியானது கூறுகள் தத்தமக்கென்று ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை பயன் உறுதி வாய்ந்த முறையில் செயற்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. சமூக அமைப்பும், அதன் கூறுகளும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றது என்பது இவருடைய கருத்தாகும்.

சமூகவியல் அறிஞர்களான பரற்ரோ, டூர்கைம், மலினோவஸ்கி போன்றவர்களுடைய கருத்துக்களினால் கவரப்பட்ட பார்சனின் 'சமூக முறைமைகள்' (Social Systems) என்னும் நூலில் இவரது கருத்தியல் பின்வருமாறு விரிவாக விளக்கப்படும்.

1. சமூக அமைப்பை பல சட்டங்கள் தாங்கிப் பிடித்து பராமரிக்கின்றன.

2. அமைப்புக் கூறுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு செயற்பாடுகளைச் செய்ய வேண்டி உள்ளன.

3. இந்த அமைப்பில் ஒன்றில் ஒன்று தாங்கி நிற்கும் கூறுகளும் உண்டு.

இக் கூறுகளே அமைப்புக்கு தனித்துவத்தை வழங்குகின்றன எனும் பார்சன், கூறுகளை பல வகைகளாகப் பிரித்து நோக்கினார். இவ்வாறு வகைப்படுத்துவதன் மூலம் முழுச் சமூக அமைப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்தார். சமூக அமைப்பில் நிலையானதும், இயங்குவதுமான (Static and Dynamic) கூறுகளைப் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறுவது அவசியமானதாகும் என்பார்.

மேலும் சமூக அமைப்பை பேணுவதற்கான செயல்பாட்டு தேவைப்பாடுகளையும் (Functional Requisites) இவர் முன் வைத்துள்ளார். இத் தேவைப்பாடுகள் தனி நபருடனும், சமூக அமைப்புடனும் தொடர்புள்ளவை. ஆகவே தனிமனித முன்னேற்றத்துக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் இத்தேவைப்பாடுகள் அவசியமானதாகும் என்பது இவரது கருத்தாகும். இவ்வாறு சமூகப் பண்பாட்டு பின்னணியிலேயே தனிநபரும், சமூகமும் முன்னேற முடியும் என்கின்றார். வேறு வார்த்தையிலே கூறினால் சமூக அமைப்பின் முன்னேற்றத்துக்கு ஒட்டுமொத்தமாக சமூக அபிவிருத்திக்கும் தனிநபர் பிரதான பங்காற்றுகின்றார்.

எனவே தனிமனிதனின் உதவி ஒத்தாசையுடன் சமூக அமைப்பின் செயற்பாட்டுத் தேவைப்பாடுகளை எதிர் கொள்ள முடியும். ஆகவே ஒவ்வொரு தனிமனிதனும் சமூக மனிதர்களாக தம்மைத் தாமே அபிவிருத்தி செய்வதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம். சமூக அமைப்பு தானாகவே சிறப்பாக இயங்க வேண்டுமானால், சமுதாய அங்கத்தவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். சமூக அமைப்பானது, சமூக மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வழிவகைகளை காணும் பொழுதே, சமூக அமைப்பு தனது கடப்பாடுகளை செய்ய முடியும். சமூக அமைப்பினை பேணுவதற்கு, குறிக்கப்பட்ட முகவர்களும், பணிப்புரைகளும் இருக்க வேண்டும். இவற்றின் மூலமே சிறுவர்கள் பொறுப்புள்ள மனிதர்களாக உருவாக முடியும். சமூக அமைப்புக்கு குறிப்பிட்ட அடிப்படை விழுமியங்கள் இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் தனிநபர் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ள முடியும்.

பல்வேறு காரணங்களுக்காக இக்கொள்கையானது விமர்சிக்கப்படுகின்றது. 'இங்கு செயற்பாடு முதலிடத்தையும், 'கூறு' இரண்டாம் இடத்தையும் பெறுகின்றது; உண்மையில் சமூகக் கூறுகளின் வெளிப்பாடே செயற்பாடாகின்றது.' என்பது ஒரு விமர்சனம். மேலும் சகல சமூகங்களிலும் குறிப்பிட்ட கூறு ஒன்றின் செயற்பாடுகள் ஒரே விதமானவை என்கின்ற ஏடுகோளின் அடிப்படையிலேயே செயற்பாட்டுவாதக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது என்பது மற்றொரு விமர்சனமாகும். உண்மையில் ஒரு கூறின் செயற்பாடு இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் அதே கூறினால் செயற்படுத்தப்பட வேண்டுமென்றில்லை இவ்வாறே சமூக ஓட்டத்தை ஆராய வேண்டுமென்றால் நோக்கங்கள், வழிமுறைகள் என்பனவற்றுக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும்; என்கின்ற நேர்மையினுடைய கருத்தும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுகின்றது. மேலும் ஒரு கூறு ஒரு செயற்பாட்டை மட்டும் மேற்கொள்ளுவதாக செயற்பாட்டுவாதிகள் கருதுகின்றார்கள். உண்மையில் ஒரு கூறு ஒன்றுக்கு மேற்பட்ட செயற்பாடுகளையும், மேற்கொள்ள முடியும் என்கின்றனர் விமர்சகர்கள். மனித உடலமைப்பும், சமூக அமைப்பும் கூடியளவிற்கு ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன. ஒத்த இயல்பு உள்ளன என்கின்ற எடுகோள்களின் அடிப்படையிலேயே ஸ்பென்சர், பிறவுண் போன்றோர் கருத்துக்களை வழங்கியுள்ளனர். ஆனால் இவ் ஒத்த தன்மைக் கொள்கையில் பல குறைபாடுகள் உண்டு. சில கூறுகள் சாதகமான செயற்பாட்டை மேற்கொள்ளுகின்றனவென்றும் ஏனையவை 'செயற்பாடின்மைக் கூறுகள்' என்றும் கூறுகின்றனர். ஆனால் பல கூறுகள் செயற்பாடுகள் எதைனையுமே மேற்கொள்ள வில்லை; என்கின்ற உண்மையை அலட்சியப்படுத்தி விட்டனர். சமூக அமைப்பில் செயற்பாட்டைக் கொண்டிராத கூறுகளின் முக்கியத்துவத்தை அல்லது வடிவத்தை அவர்கள் கருதில் கொள்ளவில்லை. மேலும், மேலும் சமூக அமைப்பு, சமூக முறைமைகள் ஆகியவற்றுக்கிடையிலான வேற்றுமையை விளங்கப்படுத்தவும் தவறிவிட்டார்கள் என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், இவ்வாறான விமர்சனங்களுக்கிடையேயும் செயற்பாட்டுவாதமானது தனது முக்கியத்துவத்தினை இழந்துவிடவில்லை என்றே கூறலாம். அதாவது சமூகவியலின் வளர்ச்சிக்கு இக் கோட்பாடானது பெரும் பங்காற்றியுள்ளது. இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே, ஏனைய கோட்பாடுகள் வளரவும், சமூகவியல் துறையானது அபிவிருத்தி காணவும் வழிசமைத்தது எனலாம். சமூகத்தை முழுமையாக ஆய்வுக்குட்படுத்தி அதன் பிரகாரம் சமுதாயத்தின் இயங்கு நிலையை விரிவாகவும், தெளிவாகவும் அறிய உதவுகின்றது இக் கோட்பாடு எனலாம். சமூக அமைப்புக்களில் உள்ள வெவ்வேறு சமூகக் கூறுகள், அவற்றிற்கிடையேயான உறவுகள் மற்றும் பரஸ்பரத் தொடர்புகளை அறியவும், ஏனைய பண்பாடுகளுடன் ஒப்பீடு செய்து கொள்ளவும் இக்கோட்பாடு பெருமளவு உதவும். இவ்வாறு சமூக அமைப்பில் செயற்பட்டுவாதக் கூறுகள், செயற்பாட்டின்மைக் கூறுகள் ஆகியவற்றின் பங்களிப்புக்களை வலியுறுத்துவதன் மூலம் செயற்பட்டுவாதிகள் சமூகவியல் துறைக்கு பெரும் சேவை ஆற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சமுதாயத்தினுடைய தோற்றம், (Origin) அதனுடைய ஒழுங்கு, (Order), உறுதிப்பாட்டை (Solidarity) விளங்குவதாக செயற்பாட்டு வாதக் கொள்கை அமைந்துள்ளதெனலாம்.


**உசாத்துணைகள்.**

1. Turner. H. Jonathan — 'The Structure of Sociological Theory'; The porsey, Illinosis, 1974.

2. Tom Bottomore and Robert Nisbit — 'A History of Sociological Analysis', Heinemann, London, 1979.

3. Dr. G. Das — Advanced Sociological Theories. Manu Enterprises, Educational Publishers 1992, 1993.

4. சீ. பக்தவதிசல பாரதி — 'பண்பாட்டு' மானிடவியல். புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், 1990.


---

## மானுட இதயம் உதவிக்கு அழுது, குரல் கொடுக்கிறது

மனித ஆன்மா விடுதலைக்கு மன்றாடுகிறது - ஆனால்
நாம் அந்த அழுகுரல்களை காதில் போட்டுக் கொள்வதில்லை
நாம் கேட்பதும் இல்லை. அவற்றை புரிந்து கொள்வதுமில்லை
ஆனால் அவற்றைப் புரிந்து கொள்ளும் மனிதரைப்
பைத்தியக்காரன் என்று சொல்லி அவரை விட்டு
விலகி ஓடி விடுகின்றோம்.

— கலீல் ஜிப்ரான்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிசக் கோட்பாடு — ஓர் அறிமுகம்
# Marxian Theory — An Introduction

வினிபேபி B. A. (Hons)

முரண்பாடுகளின் அடிப்படையில் தான் மனித குல வளர்ச்சி உருவாகின்றது என்பது, சமூகவியலாளர்களின் கருத்தாகும். மானிடத்தின் வளர்ச்சிக்கு இம் முரண்பாடு அத்திவாரமாக இருக்கின்றது. இம் முரண்பாடுகள், பல சமூக மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றது. இம்மாற்றங்கள், நேரான மாற்றங்களாகவோ அன்றி எதிரான மாற்றங்களாகவோ அமையும், என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். இம் முரண்பாடுகள் தனிப்பட்ட ரீதியாகவும் குழு ரீதியாகவும் ஏற்பட்டு, சமூகத்தில் பாரிய மாற்றங்கள் உருவாக்கக் காரணமாகின்றது.

காரல் மாக்ஸ் (Karl Marx – 1860 – 1883) முரண்பாட்டின் அடியாகத் தனது கருத்துக்களை விளக்க முயல்கின்றார். இவரது கருத்துக்கள் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அதிகாரத்தை (Power), பொருளாதாரக் காரணிகளுடன் இணைத்து, அதனை மையமாகக் கொண்டு மாக்ஸ் தனது கருத்துக்களை முன்வைக்கிறார். இவரது கருத்தின்படி, பூர்வீகப் பொதுவுடமைச் சமூகத்தில் வர்க்க பேதம் இருக்கவில்லை. எல்லோருக்கும் எல்லாம் சமம் என்ற நிலை காணப்பட்டது. நாளடைவில் சனத்தொகை அதிகரிக்க, மக்களது தேவைகளும் அதிகரிக்கின்றது. பற்றாக்குறை நிலவுகின்றது. இந்நிலையில், பூர்வீகப் பொதுவுடமைச் சமூகம் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. நிலவுடமைச் சமூகம் உருவாகின்றது. உள்ளவர்கள் (Haves) – இல்லாதவர்கள் (Have Nots) என்ற நிலமை ஏற்பட்டு, காலப்போக்கில் முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க வேறுபாட்டை உருவாக்குகின்றது. இதனால் இரு வேறுபட்ட சமூகங்கள் உருவாகின்றன. முதலாளிவர்க்கம், உபரிப்பெறுமானம் என்பதையே நோக்காகக் கொண்டு தொழிலாளரைச் சுரண்டுகின்றது. காலப்போக்கில், தொழிலாளரிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்படுகின்றது. வர்க்கப்பாகுபாட்டை உணர்ந்த தொழிலாளர் வர்க்கம், முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் புரட்சி ஏற்படுத்துகின்றது. தொழிலாள வர்க்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புரட்சி (Revolution by the Proletariat), ஓர் புரட்சிகர மீள் அமைப்பிற்கு (Revolutionary Reconstruction) இட்டுச் செல்கின்றது. இப்புதிய சமூக அமைப்பில், தனிமைப்படுத்தவோ (Isolation) அல்லது அந்நியமாதலோ (alienation) இல்லை. இந்நிலையில் சமவுடமைச் சமூகம் உருவாகின்றது. இங்கு சமத்துவம் பேணப்படும். இதுவே மாக்சின் சமவுடமைச் சமூகமாகும்.

மேற்குறிப்பிட்ட மாக்சின் கருத்துக்களின் மூலம் நாம் இன்றைய சமூகங்களை நோக்க முடியும். இன்று, நாடுகளுக்கிடையே இடம் பெறும் யுத்தங்கள், கருத்து முரண்பாடுகள் யாவும், அதிகாரத்தை மையமாகக் கொண்டே காணப்படுகின்றன. இதற்கு எமது நாடும் விதிவிலக்கு அல்ல. இலங்கை இனத்துவப் பிரச்சனையின் பரிமாணத்தை ஆராய்வதன் மூலம் இதனை விளக்க முடியும். இலங்கையில் தற்போது நிலவும் யுத்தம், சிறுபான்மை — பெரும்பான்மை இனங்களுக்கு இடையே, அதிகாரத்தை மையமாகக் கொண்டு எழுந்த முரண்பாடுகளின் அடிப்படையில் உருவானது. இரு இனங்களுக்கு இடையே இடம் பெற்று வருகின்ற பாரிய யுத்தம், பல சமூகப் பிரச்சனைகளின் தோற்றுவாயாக உள்ளது. இவையாவும் முரண்பாடுகளின் அடிப்படையிலேயே ஏற்படுகின்றது. இவ்வாறு பல சமூகப் பிரச்சனைகளின் உருவாக்கத்துக்கு, முரண்பாடுகள் அடிப்படையாக அமைகின்றன.

முரண்பாடுகள் ஏற்படும் போது, தனியனை விட குழுதான் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. இருப்பினும், தனிப்பட்ட ரீதியாக, குடும்ப ரீதியாக, குழு ரீதியாக, பிரதேச ரீதியாக, இன ரீதியாக இம் முரண்பாடுகள் பரந்து படுகின்றன. முரண்பாட்டுக் குழுக்களிடையே அதிகாரத்தைச் சமன் செய்யும் போது, சமூகம் பல பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்கின்றது. அதிகாரம் சமனற்றுக் காணப்படும் போது, வல்லமை பொருந்திய குழு, ஏனையவற்றின் இயலாமையினைச் சாதகமாகக் கொண்டு பயனடைகின்றது. இதன் அடிப்படையிலேயே இலங்கை இனத்துவப் பிரச்சனை காணப்படுகின்றது. பல்வேறுபட்ட குழுக்களினால் ஏற்படும் முரண்பாடுகள், பல சமூகப் பிரச்சனைகளுக்கும் காரணமாக அமைவதுடன், இவை சமூகப் பிரச்சனைக்கான தீர்வு வழிகளையும் அடைத்து விடுகின்றன.

## உசாத்துணை

Seidman, Edward and Rappaort Julian, — Redefining Social Problems; Plenum Press New York and London, 1978.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமாற்றம் தொடர்பான சுழற்சிக் கோட்பாடுகள் ஒரு மீள்பார்வை

# Cyclical Theories On Social Change An Over View

சரோஜா திருநாவுக்கரசு, B. A.

சமூகமாற்றம் தொடர்பான சுழற்சிக் கோட்பாட்டினை பல சமூகவியலாளர்கள் முன்வைத்துள்ளனர். ஸ்பின்கிலர் (Spengler), ரொயின்பீ (Toynbee), சொரொக்கின் (Sarokin) ஆகிய மூவரும் முக்கியமாக இக் கோட்பாட்டினுடைய சூத்திரதாரிகள். அவர்களிடையே வித்தியசமான பார்வையும் விமர்சனமும் நிலவியதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்று கூட சமூகமாற்றம் தொடர்பான சுழற்சிக் கோட்பாட்டைப் பற்றிய மீள்பார்வை அவசியம் போலத் தெரிகின்றது. இந்த வகையில் இக் கட்டுரை அமைகின்றது.

"சமூகமாற்றத்தினுடைய சுழற்சிக் கோட்பாடானது நாகரிகங்களின் எழுச்சியினதும் வீழ்ச்சியினதும் வளர்ச்சியையும் சிதைவையும் பற்றியும், அதன் போக்கு பற்றியும் உற்று நோக்குகின்றது." என்கின்றார் அயன் ரொபேட்சன் (Ian - Robertson).

ஸ்பின்கிலர், "நாகரிகத்தின் தலை விதி" என்றார். Oswald-Spengler என்ற ஜேர்மன் நாட்டு பாடசாலை ஆசிரியருடைய "The-Decline of the west" - 1978 என்ற நூலில் நாகரிகத்தினுடைய தலைவிதியானது, ஒரு உயிரினத்தின் வாழ்க்கை வட்டத்துடன் ஒப்பிடக் கூடியது. பிறப்பு, முதிர்ச்சி முதுமை, இறப்பு போன்ற ஒழுங்கை ஒவ்வொரு நாகரிகமும் ஒத்துக்காணப்படுகின்றன. 8 பிரதான நாகரிகம் பற்றிய ஓர் ஆய்வின் பின்னர், குறிப்பாக "மேற்கத்திய நாகரிகம்" உட்பட ஸ்பென்கிலரினுடைய அவதானிப்பின் படி, நவீன மேற்கத்தைய சமூகத்தின் போக்கு அல்லது நாகரிகமானது இறுதிக்கட்டத்தில் காணப்படுகின்றது. அதாவது முதுமை அல்லது இறப்பதற்கு முன்னுள்ள நிலை முடிவாக மேற்கத்தைய சமூகமானது, ஒரு சிதைவுக்குரிய காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குள் புகுகின்றது என்பதனை, யுத்தம், முரண்பாடு சமூகசீர்குலைவு போன்றவற்றின் மூலம் வீழ்ச்சியைக் காணலாம். ஆனால் இந்தக் கோட்பாடு தற்பொழுது ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. தலைவிதி பற்றிய இவரின் சிந்தனை அல்லது எண்ணம் சமூகமாற்றம் பற்றிய போதிய விளக்கத்தைத்தரவில்லை. உயிரினத்துடனான இவர் ஒப்பீடு உண்மைக்கு முரணானதாயும் அதிகளவு ஊகமாயும் உள்ளது.

அடுத்ததாக ரொயின்பீயினது ஆய்வை நோக்குவோம். இவரது கோட்பாட்டுக்குப் பெயர் "Challenge and Response" ஆகும். அதாவது எதிர்கொள்ளுதலும் விளைவு காட்டுதலும் "அல்லது" சந்திக்கத்தயாராகுதலும் விளைவு காட்டுதலும் என்று கூறலாம். பிரித்தானிய வரலாற்றாய்வாளரான ஆனால்ட் ரொயின்பீ என்பார், சமூகமாற்றம் பற்றி சமூகத்தின் உள்ளுணர்வை வெளிக்கொணரும் வகையில் கொடுக்கப்பட்ட கோட்பாடானது கூடியளவு பொருத்த முடையதெனலாம். அவருடைய பிரசித்தி பெற்ற நூல்களில் ஒன்றான "A Study of History" 1946 ல் எழுதப்பட்டது. இதில் 24 நாகரிகங்களைப்பற்றிய விடயங்களைச் சேர்த்துள்ளார். "ஒவ்வொரு சமூகமும் சவால்களைச் சந்திக்கின்றது. முதலிலே சூழலினாலேயும் பின்னர் உள்ளும் வெளியிலும் உள்ள எதிரிகளினாலும் தோற்றுவிக்கப்படுகின்றது. சமூகத்தின் விளைவு காட்டும் தன்மையைப் பொறுத்து அதன் விதி தீர்மானிக்கப்படுகின்றது. சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டும் நாகரிகங்கள் சாதனை படைக்கின்றன. அல்லாதவை அழிகின்றன" என்பார் ரொபேட்சன்.

ரொயின்பீயினுடைய நாகரிகம் பற்றிய பார்வை ஸ்பெங்கிலரின் கருத்தியலை விடவும் பொருத்தமானது எனலாம். ஏனெனில் ரொயின்பீ எல்லா நாகரிகங்களும் தவிர்க்க முடியாத விதத்தில் சிதைவுக்குட்படும் என்பதை மறுத்தார். அதாவது அதனை அவர் நம்பவில்லை. அத்துடன் சரித்திரம் என்பது ஒரு தொடரான சிதைவும் வளர்ச்சியுமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் ஒவ்வொரு புதிய நாகரிகமும் தவறுகளின் மூலமும் ஏனைய கலாசாரங்களைப் பின்பற்றுவதன் மூலமும் கற்றுக்கொள்கின்றன. எனவே ஒவ்வொரு புதிய வட்டமும் அதாவது சுழற்சியும் உயர்ந்த அடைவைப் பெறும் விதத்தில் வளர்ச்சி பெற்றுக் கொள்ளும் என்றார். எனினும் சில சமூகங்கள் வினைத்திறன் உடைய விளைவுகளைக் காட்டுகின்ற பொழுதிலும், ஏனையவை அவ்வாறு ஏன் காட்டவில்லை என்பதனை அவர் விளக்கவில்லை. அத்துடன் ஒரு குறிப்பிட்ட சவாலை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் சமாளித்துக்கொள்ளும் வகையில் இருக்கும் பொழுதே வேறொரு அச் சமூகம் இதற்கு இரையாவது ஏன், என்பதையும் இவர் விளக்கவில்லை.

இனி சொரொக்கினுடைய ஆய்வைப் பார்ப்போம். உணர்ச்சி மிக்கதும் நோக்குடையதுமான பண்பாடு ('Sensate' and 'Ideational' Culture) ரஷ்ய அமெரிக்க சமூகவியலாளரான சொரொக்கின் தனது 'Social and Culture Dynamics' - 1938 (சமூகமும் பண்பாட்டு இயக்கமும்) என்ற நூலில் சமூகமாற்றம் பற்றிய அடிப்படையான விளக்கத்தை தெரிவித்துள்ளார். சமூகவியல் பற்றிய எண்ணத்தில் உருவான ஒரு தாக்கத்தை உண்டுபண்ணக் கூடியதாக அவருடைய ஆய்வு காணப்படுகின்றது. நாகரிகங்களை அவற்றினது வளர்ச்சியும் வீழ்ச்சியும் என்ற வகையில் நோக்குவதற்குப் பதிலாக நாகரிகமானது ஒன்றில் இருந்து வேறொன்றிற்கு அல்லது இரண்டு பண்பாட்டுத் துருவங்களுக்கிடையில் கூடிக்குறைகின்ற ஒன்று என நாகரிகத்தைக் கருதினார். உணர்ச்சி மிக்க பண்பாடானது புலன்களினால் நேரடியாக அனுபவிக்கக் கூடிய விடயங்கள் பற்றி வலியுறுத்துகின்றது. இதுவே யதார்த்தமானது உணர்ச்சி பூர்வமானது, அத்துடன் பொருள் சார்ந்தது. குறிக்கோள் உள்ள அல்லது இலக்குள்ள அல்லது நோக்குள்ள பண்பாடானது சிந்தனையினால், அனுபவிக்கின்ற அல்லது பெறுகின்ற விடயங்களை மட்டும் வலியுறுத்துகின்றது. இது உள்ளுணர்வு, (abstract) சிந்தனையில் மட்டுமே வரக்கூடியது. பண்புரீதியானது: சமய சம்பந்தமானது, நம்பிக்கையுடன் கூடியது. ஈற்றில் உண்மைப் பொருளாகவும் காணக்கூடியது. இது புலன்ரீதியான பண்பாட்டிற்கு எதிரானது. இவை இரண்டும் தூய பண்பாட்டினைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்றது. ஆகவேஎந்த ஒரு சமூகமும் புலன்ரீதியான நிலையையோ அல்லது அறிவியல் ரீதியான நோக்கு சார்ந்த பண்பாட்டையோ சாருவதில்லை. ஒரு சமூகத்தினுடைய பண்பாடானது ஒரு குறிப்பிட்ட தூய வகையை நோக்கி வளர்ச்சி அடைந்து செல்லும். ஒன்றை ஒன்று எதிர்க்கின்ற பண்பாட்டு விசை காரணமாக, பண்பாட்டு வளர்ச்சி அல்லது அபிவிருத்தியானது. ஒரு திசையில் முன்னேறி மீண்டும் மற்றைய பண்பாட்டுத் திசையை நோக்கி மீறுகின்றது. இதற்குரிய காரணத்தை அவர் கூறவில்லை. சுருக்கமாகக் கூறுவதாயின் ஒரு குறித்த பண்பாட்டின் கூடிய அழுத்தமானது மற்றைய பண்பாட்டை நோக்கிய நகர்வுக்கான தாக்கமுமாகின்றது. எல்லா சமூகங்களும் இத்தகைய இருவகையான பண்பாட்டுப் போக்குகளை, வேறுபட்ட அளவுகளில் கொண்டுள்ளன. இதனால் இவற்றிற்கிடையி

11045.S.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான இடைத்தாக்கம், நீண்டகால சமநிலையின்மையைத் தோற்றுவிக்கின்றது. இந்த இரு வகைகளுக்கும் இடையே உண்மையில் ஒரு மூன்றாவது வகைப்பண்பாடு காணப்படுகின்றது. ஒரு கலவை அல்லது கூட்டு அல்லது சேர்க்கை ஆகும். ஆனால் இதுவரையில் எந்த ஒரு சமூகமாவது இத்தகைய ஒரு ஸ்திரமான அல்லது உறுதியான நிலையை எய்தியதாகக் காணப்படவில்லை.

சொரொக்கின் கோட்பாடானது பல சமூகவியலாளரினால் ஏற்கப்படவில்லை. நவீன சமூகம் பற்றி அவரிடம் காணப்பட்ட அலுத்துக்கொள்ளும் அல்லது வெறுத்துக்கொள்ளும் தன்மை இவ்வாறான ஒரு கருதுகோளைத் தந்திருக்கலாம் என்பது இவர்கள் விமர்சனம். இந்தக் கோட்பாடும் ஊகமும் விளக்கமும் தேவைப்படுகின்ற ஒன்றாக உள்ளது. ஏன் சமூகமாற்றமானது இவ்வாறு நிகழவேண்டும் என்பதற்குரிய விளக்கமும் இதிலே கொடுக்கப்படவில்லை. எனவே முடிவாகப் பொதுவாகப் பார்த்தால் சுழற்சிக் கோட்பாடாக முன்வைக்கப்பட்டவை திருப்தியற்றவை என்பார் சங்கர் ராவ் (Shankar Rao) என்ற இந்திய சமூகவியலாளர்.

ஆயினும் பொதுவாக உலக நோக்கில் உலக வரலாற்றிலே எந்தச் சமூகமும் ஒரே மாதிரி இருக்கவில்லை. மேலுக்கு இருந்தது கீழுக்கும், கீழுக்கு இருந்தது மேலுக்கும் ஆக மாறிமாறி வருகின்றது. முன்பு மேன்நிலையில் இருந்த கிரேக்க உரோம சமூகங்கள் இன்று கீழ்நிலையை அடைந்துள்ளன. ஜப்பான், அமெரிக்கா போன்றன மேன்நிலைக்கு வந்துள்ளன. அமெரிக்கா முதலான பல நாடுகளை தன் கீழ் வைத்திருந்த இங்கிலாந்து இன்று ஆட்டம் கண்டுள்ளது.

இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? ஒரு கஷ்டமான பகுதியில் இருப்பவர் தங்களது முயற்சியால் முன்னுக்கு வருகிறார்கள். அப்படி வருகின்ற பொழுது அவர்கள் ஏனைய நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் பொருளாதார விருத்தி உடையவராகி விடுகிறார்கள். அப்பொழுது அவர்கள் சொகுசான வாழ்க்கையை வாழத்தொடங்கி விடுகின்றார்கள். அந்த வாழ்க்கையே அவர்களுக்கு முன்பு இருந்த வீரத்தை இழக்கச் செய்து விடுகின்றது. இந்தப் பொருளாதார வாழ்க்கை சிந்தித்து வேலை செய்வதையும் தடை செய்துவிடுகின்றது. அதனால் அந்நாட்டு மக்களில் பலர் குடிவகை, புகைத்தல், மது முதலான கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகின்றார்கள். அதனால் அவர்கள் நோயாளராகவும் மாற இடமிருக்கின்றது. அந்தத் தன்மையினாலே அவர்கள் கீழ்நோக்கிப் போகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நார்கள். கீழ்நோக்கிப் போகின்றவர்கள் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. அது அவர்களை விழிக்கச் செய்கின்றது. மீண்டும் போராட்ட வீரர்களாகின்றார்கள். கஷ்டங்களுக்குப் பின்னில்லாமல் போராடும் மனப்பான்மை அவர்களிடையே வளர்கின்றது. அவர்கள் பெரும்பாலும் சுகபோகிகளுக்கு எதிராகவே போராடுகின்றார்கள். அதனால் சுகபோகிகள் வறியவர் ஆகின்றார்கள். இப்படியே ஒரு சுழற்சியை உலகத்திலே தனிமனிதன், சமயம், சமூகம், அரசியல் முதலான ஒவ்வொரு துறைகளிலும் காணத்தக்கதாக இருக்கின்றது.

ஐன்ஸ்ரீன் அவர்கள் "மூன்றாவது உலக யுத்தம் வருமானால் அதற்கு என்ன ஆயுதங்கள் பாவிக்கப்படும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதனை அடுத்து வரும் யுத்தத்திற்கு பாவிக்கப்படும் ஆயுதம் நிச்சயம் அம்பும் வில்லுமாகவே இருக்கும்" என்றார். இது சுழற்சிக் கோட்பாட்டின் தாற்பரியத்தைச் சுட்டும் வாக்கியம் என்று சொல்லலாமா ?

## உசாத்துணை நூல்

SHANKAR RAO. C. N, (1993) Sociology (Primary Principles of Sociology with an Introduction to Social Thought), S. Chand & Company LTD Ramnagar, New Delhi - 110055

---

## சிறுமை கண்டு பொங்குவாய்

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா,
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

— பாரதி

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக உளவியற் பின்புலத்தில் சமூக நெருக்கடிகளும், நடத்தைகளும், இசைவாக்கலும்

கலாநிதி சபா ஜெயராசா

இந்நூற்றாண்டின் விசைகொண்ட சமூக அசைவியக்கங்களின் மத்தியில் ஒரு குழந்தை பிறந்து ஐம்பது வயதை அடைவதற்குள் அறிவு வளர்ச்சியானது முப்பத்து இரண்டு மடங்கிலும் மேலாகப் பெருக்கெடுத்துவிடும் நிலையில்[1], அறிவுக்கு இசைவாக்கம் செய்யும் நடத்தைகள் ஒருபுறத்தே இயங்க, நகரங்களின் வளர்ச்சி, யுத்தங்கள், வேகமாக நிகழ்ந்து வரும் தூய்மைக் கேடுகள், துரிதமாகச் சுரண்டப் பட்டு வரும் இயற்கை வளங்கள், பொருளாதாரச் சுரண்டல்களை உள்ளடக்கமாகக் கொண்ட இலாப நோக்கு உற்பத்திக் கோலங்கள், சமூக உராய்வுகள், முரண்பாடுகள் முதலியவற்றின் மத்தியில் மறுபு றம் மனித இசைவாக்கம் எவ்வாறு நிகழ்கின்றது என்பதைப் பகுப் பாய்வு செய்தல் சமூக உளவியலிலே பல தளங்களில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

''இசைவாக்கம்'' என்ற எண்ணக்கருவானது டார்வின் கோட் பாட்டிலே உள்ளமைந்து காணப்பட்ட உயிரியல் சார்ந்த விளக்கமாக அமைந்தது. அது பின்னர் சமூக உளவியல் ஆய்வுகளிலே பயன்படுத் தப்படும் கருத்தாழம் மிக்க தொடராக மலர்ச்சி கொண்டது. சமூக உளவியலில் ''இசைவாக்கம்'' என்பது பல பரிமாணங்களை உள்ளடக் கிய ஓர் எண்ணக்கருவாகும். சமூக நிரலமைப்புக்கும், பண்பாட்டுக் கோலங்களுக்கும், இடைவினைத் தொகுதிகளுக்கும் ஏற்றவாறு இசை வாக்கம் பற்றிய புலக்காட்சியானது வேறுபடுகின்றது.

தன்னைத்தான் விளங்கிக் கொள்ளலும், இசைவாக்கமும் அறிகை மானிடவியலின் (Cognitive Anthropology) ஆய்வு உள்ளடக்கங்க ளாக இருந்து வந்துள்ளன. வானத்து விண்மீன்களையும், கோள்க ளையும் அவதானித்தல் இயற்கையைப் பகுத்தாராய்தல் முதலிய வற்றால் தம்மைத் தேடிக் கொள்ளுதலும், தம்மைப் பற்றிய விளக்கமும் (Search for Self Understanding) இயலாததாயிற்று. தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பியல் உலக நிலவரங்களையும், விஞ்ஞான, தொழில்நுட்ப செயற்பாடுகளையும் தேடிய பொழுதும் தன்விளக்கம் மனிதருக்கு அசாத்தியமாயிற்று[2].

பி. எப். ஸ்கின்னர், எபிரகாம் எச் மாஸ்லோ, கார்ல் ஆர். ரொஜர்ஸ் முதலியோர் முற்றிலும் உளவியல் தளத்தில் நின்று நடத்தைகளையும். சுய இசைவாக்கத்தையும், தன்னியல் நிறைவையும் (Self Actualization) விளக்கியமையால், நடத்தையும் இசைவாக்கலும் பற்றிய அணுகுமுறைமை முழுமை அடையாமற் போய்விட்டது. இதனை வேறுவிதமாகக் கூறுவதானால், சமூக இயக்கங்களுடனும், முரண்பாடுகளுடனும் இசைவாக்கல் பற்றிய ஆய்வு ஒன்றிணைக்கப் படாதவிடத்து, மட்டுப்பாடுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. நடத்தைகளும், இசைவாக்கமும் பற்றி விளங்கிக் கொள்வதற்கு "பிறழ்வு" பற்றி அறிந்து கொள்ளல் அடிப்படையானது என்று கூறுவோரும் உளர். அவர்கள் "எதிர் நிலை நோக்கில்" நடத்தையையும் அதற்குரிய வகைப்படுத்தலையும் தொடர்புபடுத்திப் பார்ப்பர். ஓர் எடுத்துக்காட்டு வருமாறு.

| வகைப்படுத்தல் | பிறழ்வு நடத்தை |
|---|---|
| 1. உளவிருத்திப் பின்னடைவு ⟶ | தாழ்ந்த நுண்மதிச் செயற்பாடுகள் |
| 2. உளக் குலைவு ⟶ | விகாரமாகிய எண்ணங்களும், துருவப்படும் மன உணர்வுகளும். |
| 3. ஆளுமைக் குலைவு ⟶ | நீண்டகாலம் தரித்திருக்கும் பிறழ்வு நடத்தைக் கோலங்கள். |
| 4. உள-உடல் ஒழுங்கீனம் ⟶ | மனவெழுச்சித் தளம்பல்களால் உடல் சார்ந்த தொழிற்பாடுகள் பாதிக்கப்படுதல். |

இந்த அணுகு முறையும், சமூக இயங்கியலைத் தொடர்புபடுத்தாது தனித்து உளவியற் காரணிகளை நடுநாயகமாகக் கொண்ட அணுகுமுறையாகின்றது.

சிக்கல் பொருந்தியதும், ஒன்றிணைந்ததுமான சமூக இயக்கங்கள் தனிமனித அலகு ஒவ்வொன்றின் மூலம் தாக்கங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளன. இந்நிலையில் இசைவாக்கற் செயற்பாடுகளை சமூகப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிடவைக்கும் எதிர்காலம் அல்லது எதிர்காலத் திடுக்கிடுகை (Future Shock) பண்பாட்டுத் திடுக்கிடுகை (Culture Shock) அறிகை ஒவ்வாமை (Cognitive Dissonance) முதலிய தொடர்களை சமூக உளவியலாளர் பயன் படுத்தி இசைவாக்கச் செயல் முறைகளை வேறு பட்ட பரிமாணங்களிலே விளக்குதல் உண்டு.

சமூக முரண்பாடுகள் சிறியனவாயும், பெரியனவாயும், பலதரப் பட்டும் இருக்கும் நிலையில் மனித நடத்தைக் கோலங்களும் இசை வாக்கற் செயற்பாடுகளும் எண்ணில் அடங்காத முடிவிலிகளாய்ப் பெருக்கெடுத்துச் செல்லும். அந்நிலையில் இசைவாக்கத்தின் பொழுது எழும் உராய்வுகளும், பிறழ்வுகளும், சமூகச்சுமைகளாக மாறும்பொழுது அவை கூடுதலான கவன ஈர்ப்பைப் பெறுகின்றன.

வறுமை, பசி முதலிய சமூகப்பிரச்சினைகளையும் அவற்றுக்குரிய இசைவாக்கச் செயல் முறைகளையும் ஆராயும் பொழுது, சூழல் மாசுபடுதல் என்ற பிரச்சினை பற்றி இன்று பலராலும் முன்னெடுக் கப்படும் கருத்து ஆடம்பரமானது (Luxury) என்பதை புற்றேறிக் கோவில் நிகழும் இசைவாக்கப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்த அடம்ஸ் மிகுந்த கருத்துச் செறிவோடும் உணர்ச்சியோடும் குறிப்பிட்டார்.

இசைவாக்கல் தொடர்பான சமூக உராய்வுகள் பொதுவாக சுரண்டலுக்கு உள்ளாகும் மக்களிடத்தும் இளைஞர்களிடத்தும், இலகுவாக மேற்கிளம்புதல் கண்டறியப் படுகின்றது. இவ்வகை இளை ஞர்கள் வினையிகளாய் (Activists) மாறுகின்றனர். பெரும் பண்பாட் டிலிருந்து பிரிந்து இனம்காணத்தக்க தனித்துவமான நடத்தைகள் அவர்களிடத்துக் காணப்படுவதால் அவர்களின் பண்பாடு ''துணைப் பண்பாடு'' (Subculture) என விளக்கப்படுதலும் உண்டு. பொது வான தாக்கங்களை அனுபவிப்பவர்கள் மத்தியில் அந்தத் தாக்கங் களுக்குரிய பொதுவான நடத்தைத் தளங்கள் தோன்றுதல் தவிர்க்க முடியாததாகும்.

பணவருமானம் அதிகரிக்கும் பொழுது தனிநபர் நடத்தைகளிலே மாற்றங்கள் ஏற்படுமாயினும், மகிழ்ச்சி அதிகரிக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. ஐ அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக ளில் பணவருமானம் அதிகரித்தவேளை மகிழ்ச்சி அனுபவங்கள் வீழ்ச்சியடைந்து செல்லல் ஆய்வுகளிலிருந்து தெரியவருகின்றது[5]. ஆனால் இந்தப் புள்ளி விபரங்களைப் பொதுமையாக்கி பொருளா தாரச் சுரண்டலை நியாயப்படுத்திவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி உள்ளிட்ட பன்முகப்பட்ட சமூக இயக்கப்பாடுகள் சமூக அசைவியக்கங்களை (Social Mobility) உருவாக்கிவரும் என்று குறிப்பிட்டாலும், சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள அனைவரும் மேல் நோக்கிய அசைவியக்கத்தை அனுபவித்துவிட முடியாது. சமூக அசைவியக்கங்கள் நடத்தைக் கோலங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தும். சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்துவதில் கல்விச் செயற்பாடு விசை கொண்ட சாதனமாக இருப்பதால் அசைவியக்கத்தை நாடுவோரும், சமூக அந்தஸ்தைத் தக்க வைக்க முனைவோரும் கல்விசார் நடத்தைகளில் கூடுதலான நாட்டத்தைக் காட்டுவர்.

இனத்துவம் சார்ந்த பன்முகத் தன்மைகளும், தனித்துவமும் அங்கிகரிக்கப் படாதிருப்பதுடன் அவை சுரண்டலுக்கு உள்ளாகும் பொழுது மூகிழ்த்தெழும் நடத்தைகளும், தீவிரப்பண்புகளை உள்ளடக்கியிருத்தலும், விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன[6]. தொழில் வாய்ப்பு, நிலைக்குத்து முன்னேற்றம், அந்தஸ்து முதலியவற்றுடன் இனத்துவக் காரணிகள் இணைந்திருக்கும் பொழுது இனத்துவச் சுரண்டலுக்கு உள்ளாவோர் தீவிரநடத்தைகள், தளம் மாற்று நடத்தைகள் (Radical Behaviour) வன் நடத்தைகள் முதலியவற்றில் ஈடுபட்டு இசைவாக்கம் செய்தல் உண்டு.

சமூக உளவியலாளர் திரண் சமூக நடத்தை (Mass Behaviour) பற்றிய ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளனர். தனிநபர்களினாலே தெரிவு செய்யப்படும் நடத்தையானது ஒழுங்கமைக்கப்படாமலும், நெறிப்படுத்தப்படாமலும், ஒருங்கிணைக்கப்படாமலும் இருக்கும் பட்சத்தில் அது திரள் சமூக நடத்தை எனப்படும். இது கூட்டமாகிய நடத்தை (Crowd Behaviour) யிலும் வேறுபட்டது. கூட்டத்தில் இயங்குவோரின் திரண்ட செயற்பாடுகளின் தொகுப்புடன் கூட்டமாகிய நடத்தை இணைந்திருக்கும். ஆனால் திரள் சமூக நடத்தையானது சகமனிதருடன் ஒன்றிணைந்த செயற்பாடாக அமையாது, தனித்தனியாக நிகழும் தனிமனித மேலோங்கல் வெளிப்பாடாக இடம்பெறும். கூட்டமாகிய நடத்தையில் தனிமனிதர் பொறுப்புக் கொடுத்தலுக்கு இடமில்லாதிருக்கும் நிலை காணப்படும். இந்நிலையில் உருவாகும் நடத்தைகள் ''முழங்கும் நடத்தைகள்'' அல்லது ''வீசல் நடத்தைகள்'' என்று குறிப்பிடப்படும்.

வதந்தி பரப்புதல், ஆடை அலங்கார வெளிப்பாடு, நுகர்வுக் கோலங்கள், பகுத்தறிவுகுன்றிய உளநெருக்குவாரங்கள் (Mass Hysteria) முதலியவை திரள் சமூக நடத்தைகளுக்கும் இசைவாக்கலுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டுகளாகக் குறிப்பிடப்படுகின்றன. பகுத்தறிவுடன் மேற்கொள்ளப்படாத திரள் சமூக நடத்தைகள் அநர்த்த நடத்தைகள் (Disaster Behaviour) என்ற தொடராலும் அழைக்கப்படுகின்றது[7].

இந் நூற்றாண்டில், மனிதரின் நுகர்ச்சிக் கோலங்களிலும், அசைவியக்கங்களிலும் (Mobility) விரைந்த மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. நவீன அங்காடிகளில் காணப்படும் நுகர்வுப் பொருள்களுள் 55 சதவீதமானவை பத்து வருடங்களுக்கு முன்னர் காணப்படாதவை என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன[8]. இதுவும் ஒருவகைச் சமூக நெருக்கடியை உருவாக்கியுள்ளது. நுகர்ச்சிக் கோலங்கள் மட்டுமல்ல, மனிதர் பிரயாணம் செய்யும் அசைவுத் தூரங்களும், இடப்பெயர்ச்சியும், தொடர்பாடல் முறைப்புக்களும், விசை கொண்டு செயற்படத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் மனித இசைவாக்கம் என்பது "தொடர்பாடல் நிலைப்பட்ட இசைவாக்கம்" (Communication Adjustment) என்ற எண்ணக்கருவினாலும் விளக்கப்படுகின்றது. சமூக மாற்றங்களைத் தொடர்பாடற் சாதனங்களின் தனிநபருக்குரிய நுகர்வுச் சுட்டிகளினாலும் குறிப்பிட்டு விளக்குவர். மனித இசைவாக்கத்தைத் தொடர்பாடற் சாதனங்கள் ஒருபுறம் வளமாக்கி வருகின்ற வேளை, மறுபுறம் இசைவாக்க உராய்வுகளையும் அவை ஏற்படுத்தி விடுகின்றன. இலங்கையில் இனத்துவ வன்முறைகளை வளர்ப்பதில் கொழும்பிலிருந்து வெளிவரும் சில நாள் ஏடுகள் கணிசமாகப் பங்கெடுத்து வருவதை ஆய்வாளர் அறிவர்.

சமூகநடிபங்குகள் அல்லது சமூகப் பாத்திரமேற்றல், தொடர்பான இசைவாக்கச் செயல்முறைகளும் சமூக உளவியலில் ஆழ்ந்து நோக்கப்படுகின்றன. ஆண்கள் பாரம்பரியமான ஆண் அல்லாத (Nonmale) பாத்திரங்களை ஏற்றலும் பெண்கள் பாரம்பரியமான பெண் அல்லாத (Nonfemale) பாத்திரங்களை ஏற்றலும் இன்றைய சமூக நெருக்கடிகளின் பிறிதொரு வெளிப்பாடாகும். பாரம்பரியமற்ற அல்லது அன்மரபுநிலைப்பட்ட சமூகப் பாத்திரங்களை ஏற்கும் பொழுது இடர்கள் எதிர்கொள்ளப் படின் இசைவாக்கம் பாதிக்கப்படுதல் உண்டு. இந்நிலையில் இசைவாக்கத்துக்குக் கல்வியும், சீர்மியமும், (Counselling) துணைசெய்யவேண்டியுள்ளன.

பாரம் பரிய உளவியலாளர்கள் இசைவாக்க நுண் செயல் முறைகளை "எதிர்த்தல் வகை" என்றும் "பின்வாங்குதல் வகை" அல்லது "தப்புதல் வகை" என்றும் குறிப்பிட்டனர். வன்நடத்தை, காரணங்காணல், எறிவு செய்து காணல், அடக்குதல், எதிர்க் கருத்துருவாக்கல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளப்பாங்கு வடிவமைத்தல், முதலியவற்றை எதிர்த்தல் நிலை இசைவாக்கல் வகைகளாகக் குறிப்பிட்டனர். தனிமை நாட்டம், பின் நோக்கிய தாழ்வு, பகற்கனவு, வாழ்வியலிலிருந்து விடுபட்டுச் செல் லும் கற்பனைகள், பின்வாங்கும் தளர்ச்சி, போதை நாட்டம், உடல், உளநோய்கள் என்றவாறு பின்வாங்கும் இசைவாக்கச் செயல் முறை களைக் குறித்துரைத்தனர். சில உளவியலாளர் பிரதியீட்டு உபாயங் கள் அல்லது பெயர்ச்சி நிலை (Shift) இசைவாக்கல் என்ற இன் னொரு வகையியலையும் சுட்டிக் காட்டினர். கவனஈர்ப்பில் ஈடுபடல், ஒன்றுக்குப் பிரதியீடாக வேறொன்றை நாடுதல், ஒன்றித்துவிடல், போன்ற நுண்முறைகளை இந்த வகையியலில் உள்ளடக்குவர்.

நவீன சமூக உளவியல், ''இசைவாக்கல்'' என்பதை எளிமை பொருந்திய ஒரு செயல்முறையாகக் கருதாது, சிக்கல் பொருந்திய தாகவும் சமூக அலைகளால் விசைப்படுத்தப்படும் செயல்முறையாக வும் கருதுகின்றது. நவீன சமூக உளவியலில் ''உளவியல் நெருக்கீடு'', ''சமூக நெருக்கீடு'' (Social Stress) போன்றவை ஆழ்ந்து நோக்கப் படுகின்றன. சமூகத்தின் அடிப்படை அலகாக குடும்பம் விளங்குவ தால், அனைத்து நெருக்கீடுகளுக்கும் குடும்பமே அடிப்படையாக விளங் குவதுடன் குடும்பமே நெருக்கீடு என்ற கருத்துக்களும் முன்னர் முன் வைக்கப்பட்டன.[9] ஆனால் நவீன சமூகக் கட்டுமானம் குடும்பத்துடன் மட்டும் கட்டுப்பட்டிருக்கவில்லை. தொழில் நிறுவனங்களிலும் பல தளங்களிலே நெருக்கீடுகள் உருவாக்கப்படுகின்றன.

சமூக நெருக்கடிகளுக்கும் சமூகப் பிணியியலுக்கு (Social - Pathology) மிடையே உள்ள இணைப்புக்குணகத்தில் நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுதல் பண்பாட்டு இயக்கத்துக்கும், இசைவாக் கத்துக்குமுள்ள தொடர்புகளை வெளிப்படுத்துகின்றது.

நெருக்கடிக்காலத்து மனித இசைவாக்கம் தொடர்பான பின் வரும் கருத்துக்களைக் கொண்ட காட்டுருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. விருப்பமற்ற துலங்கலை மிகையாக வெளியிடல்.
2. அதீத மனவெழுச்சித் தாக்கங்களுக்கு உள்ளாகி நிற்றல்.
3. தம்மைப் பாதுகாப்பதற்குரிய எதிர்வினைக் கோலங்களை உருவாக்குதல்.
4. நம்பிக்கை வரட்சியும் அந்நியமாதலும்.
5. அறைகூவல்களை ஏற்றலும் நம்பிக்கைகளைக் கட்டி எழுப்பலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலக நிலவரங்களை ஆராயும் பொழுது, போர்களும், தீவிர சுரண்டல் கோலங்களும், அநர்த்தங்களும், தவறான அறிக்கைகளுமே சமூக நெருக்கடிகளைப் பெருமளவிலே தூண்டும் வலுக்களாக இருக்கின்றன. மனித இசைவாக்கம் பற்றி விளக்க வந்த மேற்கூறிய வகைப்பாடுகள் ''மனிதரின் துலங்கற் கோலங்கள்'' என்ற ஒருபக்கப் பரிமாணங்களை வைத்தே விளக்கப்படுகின்றன. சமூக நெருக்கடிகளை உண்டாக்கும் பன்முகமான காரணிகளையும் நுணுகி ஆராய்ந்து காட்டுருக்களை அமைக்கும் பொழுது ''நிறைவான'' அல்லது சமூக உளவியல் நோக்கிலே பொருத்தமான காட்டுருவை அமைக்க முடியும். காட்டுரு அமைப்பிலே பயன்படுத்த வேண்டிய காரணிகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. நெருக்கடிகளை உண்டாக்கும் விசைகளை இனங்காணல்.
2. சமூகபொருளாதார அரசியற் கட்டுமானங்களையும், தொழிற்பாடுகளையும் பகுப்பாய்வு செய்தல்,
3. நடத்தைகளின் உருவாக்கத்தை இனங்காணல்.
4. அறிக்கைத் தொழிற்பாடுகளையும் நடத்தைகளின் மீள் உருவாக்கத்தையும் மதிப்பீடு செய்தல்

மேற்கூறியவற்றைத் தொகுத்து அதன் அடிப்படையில் இசைவாக்கத்தை விளக்கும் பொழுது, சீராக்க நடத்தை என்பது பல்வேறு சிறு சிறு இசைவாக்கல் நடத்தைகளால் ஆக்கப் பெறுகின்றது என்பதனை மனங்கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு சிறு சிறு இசைவாக்கலும், தத்தமக்குரிய தளங்களையும் விதிகளையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு இசைவாக்கத்துக்கும் தனித்துவமான தன்மைகள் உண்டு. பல்வேறு இசைவாக்கத் தனிமங்களை ஒன்றிணைப்பது ஒருவரது ''நடத்தை'' என்ற அமைப்பைப் பெறுகின்றது. ஓர் இசைவாக்கத்தின் விசையானது இன்னோர் இசைவாக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தலும் காணப்படும். இசைவாகச் செயல் முறைகள் ஒன்றிணையும் பொழுது அது பெரும் சமூக விசையாக உருவெடுக்கும். இது ''விசை நிலை இசைவாக்கல்'' என்று குறிப்பிடப்படும். சமூகப் புரட்சிகள் ''விசை நிலை'' இசைவாக்கருடன் இணைந்திருக்கும். சமூக வரலாறு என்பது தனிமனித இசைவாக்கலின் தொகுப்பாக அமையும்.

சமூக நெருக்கடிகளின் போது நிகழும் நடத்தைகளையும், இசைவாக்கங்களையும், பகுப்பாய்வு செய்து, மீள் கட்டுமான நடவடிக்கைகள் அல்லது மீள் நிர்மாண நடவடிக்கைகளை அபிவிருத்தித்துறை

களில் மேற்கொள்ளல் நடப்பியல் தழுவியதாய் அமையும் என்று சமூகப் பொறியியலில் (Social Engineering) ஆய்வுகளில் வற்புறுத்தப் படுகின்றது.

## Foot Notes

1. James. F. Adams,
   Human Behaviour in a Changing Society,
   Holbrook Press, INC
   Boston, 1973, p. 01.
2. Alexander and Selesnick,
   History of Psychiatry,
   Harper and Row,
   New York, 1966.
3. James F Adams, op. cit, p. 02.
4. Ibid; p. 17.
5. Baul B Horton and Chester L Munt,
   Sociology,
   Nograw – Hill kogakusha Ltd.,
   Sydney, 1980, pp324 – 25
6. Ibid., pp 351 – 367.
7. Ibid., p. 388.
8. James F Adams, op. cit., p 16.
9. Sollevine, and Norman Ascotch – Social Stress,
   Aldine Publishing Company
   Chicago, 1976, pp. 19 – 53.

* Social Crisis, Behaviour and Adjustments – A Social Psychological Point of View.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்சாய்வு Prejudice

பா. விக்னராணி

முற்சாய்வு என்பது ஒருவகை மனப்பாங்கு ஆகும். இது தொடர்பாக உளவியலாளர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர். சமூகவியலாளரும், குழுக்களுக்கிடையிலான தனியன்களுக்கிடையிலான, முரண்பாடுகளை விளங்கிக் கொள்வதில் இந்த எண்ணக் கருவை பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

முற்சாய்வின் அடிப்படையில் இனங்கள் பற்றியவை, சமயங்கள் பற்றியவை வகுப்புக்கள் பற்றியவை, அரசியல் கட்சிகள் சார்ந்தவை, அறிவியல் சார்ந்தவை, தனியன்களுக்கிடையிலானவை என வகைப் படுத்தி நோக்க முடியும். எமது நாட்டின் இன முரண்பாட்டினை விளங்கிக் கொள்வதிலும் இந்த எண்ணக்கரு பெரிதும் துணையாகின்றது. முற்சாய்வு தொடர்பான சமூக – உளவியல் தரிசனமாக இந்தக் கட்டுரை அமைகிறது.

1. முற்சாய்வு எனக் கருதப்படுவது யாது?

i) பிறரைப் பற்றியோ, பிற குழுக்களைப் பற்றியோ உண்மை நிலையை அறியாமல், அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவதால் ஏற்படும் மனப்பாங்கு முற்சாய்வு எனப்படும். இது பொதுவாக பிறருக்கு எதிரான மனப்போக்காகும். 'பிறருக்கு எதிரான முறையில் சிந்திக்கவும், செயற்படவும், இவை நம்மைக் கட்டுப்படுத்தும் மன நிலையாகும்' என்று நியூகோம்ப் [Newcomb] எனபவர் விளக்கம் தருகின்றார்.

ii) 'Prejudice' எனும் சொல்லானது 'Pre-judge' என்ற சொல் மூலத்திலிருந்து பெறப்பட்டது. அதாவது ஒரு உண்மையினை ஆரய்ந்து அறிவதற்கு முன்னமே, அவ்வுண்மை தொடர்பான தீர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுகின்றது. இது நேர்மையற்ற அவசரமான தீர்ப்பு ஆகும். 'எங்கட ஆள் செய்தது என்றால் சரிதான்'' என அமைவதுடன், புறக்குழு நடத்தை எல்லாமே பிழை எனக்காணவும் வழிவகுக்கும். இவற்றிற்கு ஆதாரமாக வலுவுள்ள மனவெழுச்சிகளும், விருப்பு, வெறுப்புகளும் காணப்படும்.

iii) வெறுப்பினால் உண்டான முற்சாய்வு எண்ணம் குழுக்களுக்கிடையில் பகையுணர்வை உண்டாக்கி, ஒன்றிலிருந்து மற்றையதை பிரித்தொதுக்கும். இதனால் குறுங்காலத்தில் முடிவெடுக்கும் நிலை காணப்படும். மீள ஆராயும் தன்மை மட்டுப்படுத்தப்படும். முற்சாய்வின் விளைவாகவே பாரபட்ச உணர்வு ஏற்படுகின்றது.

iv) முற்சாய்வு என்பது நேரானதாகவும், எதிரானதாகவும் அமையலாம். ஒரு குழுவுக்கு அல்லது ஒருவருக்கு ஆதரவானதாக அமையும் போது நேரானதாகவும், ஒரு குழுவுக்கு அல்லது தனியனுக்கு விரோதமானதாக அமையும் போது எதிரானதாகவும் காணப்படும்.

2. முற்சாய்வு எவ்வாறு தோன்றலாம்?

i) முற்சய்வு எண்ணம் பிறப்பினால் அமையும் ஒன்றல்ல. இது வாழ்க்கை அனுபவங்களுக்கூடாகவும், சமூகமயமாக்கற் கருவிகளுடனான இடைவினையூடாகவுமே கற்கப்படுகின்றது. குழந்தைகளிடம் சில இயற்கை வெறுப்புகள் [ Natural Antipathies ] காணப்படும். நிறத்தில், மொழியில், உடல் அமைப்பில் தன்னிலும் மாறுபட்டவர்களிடமிருந்து குழந்தை ஒதுங்கிக் கொள்ளக் கூடும். இவ்வாறான நடத்தைகளை கவனிக்காமல் விட்டால் தானாக வெகுவிரைவில் மறையலாம். ஆனால் சமுதாயத்திலுள்ள வயது முதிர்ந்தவர்களால் அல்லது பெற்றோரினால் சமூகமயமாக்கலின் போது இத்தகைய வெறுப்புகள், தப்பெண்ணங்கள், தூண்டியும் வளர்த்தும் வரப்படலாம்.

ii) தங்கள் குடும்பம், சுற்றம் ஆகியவைகளிடமிருந்து தவறான முற்சாய்வு எண்ணங்களை குழந்தை கற்கும். பிறரைப் பற்றி ஒரு குடும்பத்தார் என்ன நினைக்கிறார்களோ, அதனையே அவ்வீட்டுக் குழந்தையும் எண்ண முற்படும். 'அவனைத் தொடாதே' 'இவனுடன் சேராதே' என்று பயமுறுத்துதல், திட்டுதல், தண்டித்தல் என்பவற்றால் குழந்தையின் மனதில் முற்சாய்வு எண்ணம் விதைக்கப்படுகிறது.

11045.S.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) புரொயிட் [Freud], இட் [Id]; அகம் [Ego]; அதியகம் [Super ego] என்ற மூன்று ஆளுமைக் கட்டமைப்புக்கு இடையிலான முரண்பாடுகளினால் தான் முற்சாய்வு மனப்பாங்கு தூண்டப்படுகின்றது எனக் கூறுகிறார்.

iv) டொலார்ட் [Dollard] எனும் அறிஞர், பகைமையுணர்வு விரக்தியினால் மேலெழும்பும் என்கிறார். எனவே முற்சாய்வெண்ணம் இதற்கு வடிகாலாக அமையும்போது அதனை ஏற்றுக் கொள்வர்.

v) பிரச்சாரம் அல்லது கொள்கை பரப்புதல் மூலமும் முற்சாய்வு எண்ணங்கள் பெறப்படுகின்றன. சுயநல நோக்கத்துடன் செய்தி பரப்பப்படுவதுதான் பிரச்சாரம் எனப்படும். பிரச்சாரத்தில் உண்மைச் செய்திகளின் பெரும்பகுதியை மறைத்து, ஒரு சிறு பகுதியை மட்டும் வலியுறுத்தி, உண்மை திரித்துக் கூறப்படும். மேடைப் பேச்சுகள், வானொலி, திரைப்படங்கள், கட்சிப் பத்திரிகைகள் போன்றன சிறுவர்கள், இளைஞர்கள், மத்தியில் முற்சாய்வு எண்ணத்தை பரப்பும் கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

vi) பிறரைப்பற்றிய உண்மை அறிவினை பெற்றிராமை முற்சாய்வு தோன்ற காரணமாகலாம் எனக் கூறப்படுகின்றது.

vii) குழுத்தலைவர்கள் தமது சொந்த மனமுறிவு, ஏமாற்றங்களைப் போக்க, அதற்கு காரணமானவர்களை வெறுக்கும்படியாக தம்மைப் பின்பற்றுபவர்களைத் தூண்டும் நிலையிலும், இவர்களைச் சார்ந்தவர்கள் முற்சாய்வு எண்ணங்களை ஏற்று வளர்க்கலாம்.

viii) சிலசமயங்களில் கல்வியினூடாகவும் முற்சாய்வு எண்ணங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. பாடசாலைகளில் கட்சி, கொள்கை, சமயம், இனப்பற்று மிகுந்த ஆசிரியர்களாலும் முற்சாய்வு எண்ணங்கள் முன்வைக்கப்படலாம். அரசாங்கமே கல்வியின் முழுப்பொறுப்பையும் ஏற்றிருக்கும் நாடுகளில், தமக்குச் சார்பான கல்வித்திட்டங்களை மேற்கொண்டு, முற்சாய்வான கருத்துக்களை வலியுறுத்தலாம்.

ix) ஒவ்வொரு மனிதனும் தன் குழுவில் பரவியுள்ள முற்சாய்வு எண்ணங்களை அப்படியே தன்னுடையவையாக ஏற்றுக் கொள்கின்றான். சிந்திக்கும் ஆற்றல், அனுபவமில்லாத சிறு குழந்தைகளின் மனதில் ஊன்றிய முற்சாய்வு எண்ணக்கருக்களை களைவது கடினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சமூக அழுத்தங்கள், தனிப்பட்ட அழுத்தங்கள் எல்லாம் ஒரு மனிதனில் வன்மையான முற்சாய்வெண்ணத்தை வளர்க்கும்.

4. முற்சாய்வினை எப்படி அளக்கலாம்?

முற்சாய்வென்பது ஒருவகை மனப்பாங்காகவே கொள்ளப்படுவதால், மனப்பாங்கை அளவிடுவதற்கான நுட்பங்களை முற்சாய்வை அளவிடவும் பயன்படுத்தலாம் என கருதப்படுகின்றது. அதிகமாக சுய அறிக்கை நுட்பமே [Self Report Techniques] பயன்படுத்தப்படுகின்றது. மற்றும் உட்குழுவிற்கும், ஏனைய வெளிக்குழுவிற்கும் இடையிலான தொடர்பின் தன்மையை பொகார்டஸின் சமூக ஏற்பு– சமூக தூரம் [Social Acceptance - Social Distance] முறையின் மூலமும், ஒஸ்கூட்டின் [Osgood] வேறுபாட்டு நுட்பம் என்பவற்றின் மூலமும் அளவிடலாம்.

5. என்ன செய்யலாம்?

i) தனியனின் மனநிலை முரண்பாடுகளால் முற்சாய்வுணர்வு ஏற்படுகின்றமையால் அதனை உளவியல் சிகிச்சை முறை, சுய உள்ளார்ந்த பயிற்சி, பிள்ளை வளர்ப்புமுறையை மாற்றல் போன்ற சில முறைகளைப் பயன்படுத்தி ஆளுமைக்கிடையிலான முரண்பாட்டைக் குறைக்கலாம் என்பது ஆளுமை முரண்பாட்டுக் கோட்பாட்டாளர் தரும் தீர்வு.

மனமுறிவு அனுபவங்களை தமது வாழ்க்கையில் அதிகம் பெற்றவர்கள் மத்தியில் வெறுப்புணர்வு அதிகமாக காணப்படும். இவ்வுணர்ச்சியை வெளிப்படுத்த வெறுப்பு முற்சாய்வெண்ணங்கள் துணை புரிகின்றன. ஆகையால் குழந்தைகளுக்கு வீட்டிலும், வகுப்பிலும் மனமுறிவு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வது பெற்றோர், ஆசிரியர் ஆகியோரது கடமையாகும்.

ii) கல்வியின் முக்கிய நோக்கம் மாணவர்களிடையே ஆராய்ச்சி மனப்பான்மையினையும், சிந்தனையாற்றலையும் தோற்றுவித்து, உண்மைக் கருத்துக்களைப் பெற பயிற்றுவித்தலாகும். இப்பயிற்சியினை வழங்குவதன் மூலம் முற்சாய்வினை குறைப்பதில் கல்வி மிகச் சிறந்த பங்காற்ற முடியும்.

உண்மையான, ஆராய்ச்சி மனப்பான்மை கொண்ட கல்வியறிவு பெற்றவர்களிடத்தில், ஏனையவரை விட முற்சாய்வெண்ணம் குறைவு என கூறப்படுவதையும் மனதில் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) குழுக்களுக்கிடையிலான இடைவினை வடிவத்தை மாற்றுதல்– வெவ்வேறு குழுக்களிலுள்ளவர்கள் ஒன்றாக வாழும்போது, அவர்கள் இதுவரை அசையா நம்பிக்கையாக பற்றிக் கொண்டிருந்த தவறான கருத்துக்களை விட்டு அனேக முரணில்லாத ஒத்த மனப்பாங்குகளை பிறகுழுக்களுடன் வைத்திருப்பர்.

அமெரிக்காவிலே வெள்ளையருக்கென உருவாக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளில் [Segregated Schools] கல்வி பயிலும் மாணவர்களில் கறுப்பின மக்கள் பற்றிய முற்சாய்வு அதிகமாக காணப்பட்டது. ஆனாலும் கறுப்பின மாணவர்களும் வெள்ளையின மாணவர்களும் இணைந்து பயிலும் பாடசாலையிலே [desegregated Schools] மாணவர்களிடையே நட்புணர்வே அதிகமாக காணப்பட்டது என 1967 ல் அமெரிக்க குடிஉரிமை ஆணைக்குழுவின் [American Civil Rights Commission] அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

முடிவாக முற்சாய்வு தொடர்பான சமூக–பண்பாட்டு விளக்கங்கள், குழுக்களுக்கிடையிலான உறவு முறை மாற்றங்களே மிகவும் பிரயோஜனமுள்ளது எனவலியுறுத்கின்ற போதும், முன்கூறியது போன்று முதலாம், இரண்டாம் நிலைக்குழுவுடனான சமூகமயமாக்கலிலேயே அதிக அழுத்தம் கொடுக்கவேண்டியுள்ளது.

## உசாத்துணை நூல்கள்

1. Kupuswamy, B – Intergroup Prejudice,
Elements of Social Psychology, Konark Publishers, Pvt, Ltd,–1991

2. சண்முகலிங்கன், என் – மனப்பாங்கும் மாற்றங்களும்,
நான் உளவியல் சஞ்சிகை, யாழ்ப்பாணம் — 1995.

3. சந்தானம், எஸ் – சமூகப் போராட்டங்களின் அடிப்படைக் காரணங்கள் – கல்வியின் மூல அடிப்படைத் தத்துவங்கள், அமுத நிலையம் லிமிடெட் – 1968.

உயர் இலட்சியத்துக்காக உயிர் துறப்பவர்
ஒருநாளும் தோற்பதில்லை

— பைரன் பிரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY ... JAFFNA

# தலைமைத்துவம் Leadership

கு. முகுந்தன்

எந்தவொரு குழுவென்றாலும் அதற்கென்று கட்டமைப்பு உண்டு. மனித வாழ்வைப் பின்நோக்கிப் பார்த்தால் ஆதியிலிருந்தே தலைமைத்துவம் ஏதோ ஓர் வகையில் இருந்துள்ளது. ''ஓர் பொதுவான நோக்கத்தினை நோக்கிச் செயற்பட வைப்பதன் பொருட்டு தனிநபர் அல்லது குழு செல்வாக்குச் செலுத்தி அவர்களை வழிநடத்தும் ஆற்றலே தலைமைத்துவம் எனலாம்'' இது ஓர் இயங்கும் செயன் முறையாகும்.

ஓர் குழுவையோ அமைப்பையோ வெற்றியடையச் செய்வதில் தலைமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஓர் குழு வாழ்க்கைக்கு தலைமைத்துவம் அவசியமானதாகும். இது மாற்றமடைந்தும் செல்லலாம். செல்வம் யாரிடம் உள்ளதோ அங்கு அதிகாரம் இருக்கும். அங்கு அபிலாசைகள் (Aspirations) ஏற்படுவதால் உறவு முறை ஏற்படும். அதிகாரம் தலைமைத்துவம் என்பன தவிர்க்க முடியாத ஒன்றாகும். இது நிரந்தரமாகவும் வரலாம். தற்காலிகமாகவும் இருக்கலாம். ஓர் குழுவாகப் பலர் தம்மை உருவாக்கிக் கொள்ளும் போது; அக்குழுவைக் கட்டுப்படுத்தி, இயங்கவைக்கத் தலைவர்கள் தோன்றுவார்கள். பின் செல்வோர் இல்லையேல் தலைவன் என்றொருவனும் இருக்க முடியாது. குழுக்களில் காணப்படும் பின்செல்வோர் மூவகைப்படுவர் என்று சில சமூகவியலாளர்கள் கூறுவர்.

1. இயல்பாகப் பின் செல்வோர். (Routine Followers) இவர்களிற்கு தாமே செயற்படும் ஆற்றல் மிகக் குறைவு.
2. ஆக்கப்பண்புமிக்க பின் செல்வோர். (Constructive Followers) இவர்களிடம் தலைமை தாங்குவதற்கான பண்புகள் இருப்பினும் தாமே முன்னின்று பொறுப்பேற்கத் தயங்குவர்.
3. உணர்ச்சி வெளிப்பாடு காரணமாக பின் செல்வோர். (Impulsive-Followers) இவர்கள் தமக்கு தலைவனைப் பிடித்திருப்பதாலோ அல்லது அவரைப் பின்பற்றுவது தமக்கு சில அனுகூலங்களை அளிக்கக்கூடும் என்பதால் பின்செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் பல்வேறு வழிகளில் தோற்றம் பெறுகின்றார்கள். சிலர் இயற்கையாகவே ஆளப்பிறந்தவர்கள் எனப்படுவார்கள். வேறு சிலர் உழைப்பால் அந்நிலைக்கு உயர்கின்றார்கள். பண்டைய சமூகங்களில் சாதி, மரபு, செல்வம் போன்றவற்றினின்றும் எழும் மதிப்பால் தலைவர்கள் தோன்றினார்கள். ஆனால் இன்றைய முற்போக்கு சமுதாயங்களில் ஆற்றல், அரும் பெரும் பணிகள் கொண்ட தலைவனே தலைவனாகின்றான். தம் அறிவுத் திறமையாலும் சிலர் தலைமைப்பதவி பெறுகின்றனர். இதை அறிவுத் தலைமை எனலாம். தோற்றம், சொல்வன்மை ஆகியவற்றால் தலைமையடைந்தோரும் உளர். இத்தகைய தலைமை அபிமானத் தலைமை எனப்படும். தலைவர்களில் தன்னிச்சைத் தலைவர்களும் உளர். அத்துடன் குடியாட்சித் தலைவர்களும் உள்ளனர். தன்னிசைத் தலைவர்கள் பிறரை வெருட்டி, மிரட்டி தம் நிலையைக் காத்துக் கொள்கின்றனர். ஆனால் குடியாட்சித் தலைவர்கள் தம்மவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். குடியாட்சித் தலைமையே சாலச் சிறந்தது என்று கேர்ட்லுவின் (Kurt Lewin), அன்டேர்சன் (Anderson) போன்றோரின் ஆராய்ச்சிகள் தெளிவாக்குகின்றன. மேலும் இவர்கள் தன்னிச்சைத்தலைவர்களது ஆதிக்கப்போக்கு பிற உறுப்பினரிடையே எதிர்ப்பு மனப்பான்மையையும், புரட்சி மனப்பான்மையையும் தோற்றுவிக்கும் என்றும் கூறுகின்றார்கள். எதேச்சதிகாரத் தலைவனும் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனாகவே தனது தலைமையைத் தொடங்குகின்றான். ஆனால் காலம் செல்லச் செல்ல தன்சக்தி போதையில் ஏதேச்சதிகாரியாகின்றான். இவற்றைவிட நிருவாகத்தலைமை கிளர்ச்சித் தலைமை எனவும் இருவகையுண்டு. மேலும் ஒருவரிடம் காணப்படும் கவர்ச்சித் தன்மையால் (Charismatic Leadership) உருவாகின்றது. இதில் இவர்களின் நடத்தைகள், செயற்பாடுகள் மற்றவர்களைக் கவர்வதால் உருவாகின்றது. அத்துடன் சமூக அளவை (Socio Metric) முறையாலும் தலைமைத்துவம் உருவாக்கின்றது.

இனிநாம் தலைவர்களிடம் காணப்படும் இன்றியமையாப் பண்புகள் பற்றி நோக்குவோம். தற்காலச் சமூகவியலறிஞர்கள் பண்புக் கோணத்திலிருந்து (Trait Approch) தலைமையை நோக்காமல் நிலைக்களக்கோணத்திலிருந்து அறியமுற்படுகின்றனர். ஆதிக்க மனப்போக்கு, துணிந்து துரிதமாகச் செயலாற்றும் திறன், எடுத்த செயலை முடிக்கும் ஆற்றல், மனவெழிச்சிப் பெருக்கம், பிறரிடம் பரிவு, பிறருடன் சேர்ந்து செயலாற்றும் திறன், பிறரைச் செயற்படவைக்கும் திறன், அடக்கம் என்பவை உண்மைத் தலைவனிடம் காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகள் என்று அல்பேட் (Albort) எனும் அறிஞர் கூறுகின்றார். மேலும் நுண்ணறிவு, தற்பெருமையின்மை, துணிவு, சூழ்நிலைக்குத் தக்கவாறு செயலாற்றும் மதிநுட்பம், சுதந்திரத்துடன் சிந்தித்து செயலாற்றும் திறன், போதிய உடல்வலு, மனவுறுதி, தன்னைப் பின்பற்றுவோரின் மனப்போக்குகளை அறிந்து அவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களின் தேவைகளுக்கேற்ப செயற்படும் தன்மை என்பன ஓர் சிறந்த தலைவனிடம் காணப்படும் இன்றியமையாப் பண்புகளாகும்.

தலைவர், அங்கத்தவர்களின் செயற்பாடுளை இணைக்கக் கூடியவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்தவர்களுக்குமுரிய பொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இலக்குகளும், இலக்கை அடையும் வழிமுறைகளும் அங்கத்தவர்களிற்கு தெரிய வேண்டும். இவர்கள் மூலம் அவருக்கு தகவல்கள் வந்து கொண்டிருத்தல் வேண்டும். எல்லாத் தகவல்களும் தலைவரை வந்தடைந்து, அவருடாகவே செல்லல் வேண்டும். குழுக்களுக்குள்ளே ஒவ்வொருவருக்குமுள்ள தொடர்பும் தலைவரால் கட்டுப்படுத்தப்படும். மேலும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எல்லாம் தலைவருடாகவே தான் நடைபெறும்.

தலைமைப்பதவி எப்படி ஒருவனிற்கு வாய்க்கிறது என்பது பற்றிப் பல கொள்கைகள் சமூகவியலில் காணப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை வருமாறு

1. தலைவனிடம் பல்வேறு சிறப்பான ஆளுமைப்பண்புகள் இணைந்து சமநிலையில் காணப்படுகின்றன. இச்சமநிலையே அவனைத் தலைமை தாங்கத் தகுதியுள்ளவனாக்குகின்றது (Balance Theory of Leadership)

2. தன்னிடமுள்ள உளச் சக்திகளனைத்தையும் திரட்டிக் குவித்துச் செயற்படும் ஆற்றல் மிகுந்திருத்தலால் ஒருவன் தலைவனாகின்றான். (Theory of Focalization of Psychic Energy)

3. பின்பற்றுவோரிடத்தில் காணப்படாத சில பண்புகளை அதிக அளவில் ஒருவன் பெற்றிருத்தலே தலைமைப்பதவியை அவன் அடையக் காரணமாகின்றது. (Uniqueness Theory of Leader-ship)

4. குழுவை எதிர் நோக்கியுள்ள பல்வேறு புதுப் பிரச்சினைகளை எளிதில் தீர்க்க வல்லவனே தலைவனாகின்றான். (Insight Theory of Leadership)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தன்னிடமுள்ள ஓர் குறைபாட்டிற்கு ஈடுகட்ட வேறொருதுறையில் ஆர்வமுடன் செயற்படுவதன்மூலம் ஒருவன் அத்துறையில் தலைமையடைகின்றான். (The ability – disability Theory of Leadership)

6. தமது தந்தையின் நிலையில் (Father Surrogate) வைத்து தலைவன் பிறரால் பின்பற்றப்படுகின்றான் என்று பிராய்ட் கருதுகின்றார். தலைவன்பால் பின்செல்வோரிடம் இருமுனைப் போக்குக் காணப்படுமென்றும் அவனோடு ஒன்றி பணிந்து போதலோடு தனது மனமுறிவுகள் ஏமாற்றங்கள் போன்றவற்றினின்றும் எழும் வலுவத்த நடத்தையின் இலக்காகவும் தலைவன் பின்செல்வோரால் பயன்படுத்தப்படுகின்றான் என்பது இவரது கருத்தாகும்.

இவ்வாறாகத் தலைமைத்துவம் என்பது சமூகத்தை வழிநடத்துவதற்கு இன்றியமையாதொன்றாகும். பின்பற்றுபவர் என்ற வர்க்கம் இருக்கும்வரை தலைமையும் இருந்தே தீரும். எந்தவொரு நடவடிக்கையையும் ஓர் தலைமையின் கீழ் செய்யும் போதுதான் அது சிறந்த பலனை அளிக்கும். எனவே தலைமைத்துவம் என்பது எமது வாழ்விற்கு இன்றியமையாத ஒன்றாகும்.

## உசாத்துணைகள்


1. சந்தானம். எஸ். – கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள், அமுத நிலையம் லிமிட்டெட், 1968.
2. Kupuswamy, – 'Elements of Social Psychology', Konark Publishers - Pvt, Ltd – 1991)


---

## தமிழில் புது நூல்கள்

பிறர் நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

— பாரதி

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

மொழிபெயர்ப்பு

# அந்நியப்படுத்தப்பட்ட உழைப்பு - கார்ல் மாக்ஸ்
# Alienated Labour - Karl Marx

தொழிலாளியின் உழைப்பினால் முதலாளியின் செல்வம் அதிகரிக்கின்றது, அதேநேரம் தொழிலாளி மென்மேலும் தரித்திர நிலையை அடைகின்றான். அதுமட்டுமல்ல முதலாளியின் செல்வம் அதிகரிக்கும் போது, முதலாளியின் அதிகாரமும், அதிகார எல்லையும் அதிகரிக்கின்றது. தொழிலாளி மென்மேலும் பண்டங்களை உற்பத்தி செய்யும் போது, அவனது உழைப்பு மலிவானதோர் பண்டமாகின்றது. அவனது உற்பத்தியின் மதிப்பு எந்தளவு உயர்கின்றதோ அந்தளவுக்கு மனிதனின் உழைப்பு மதிப்பு வீழ்ச்சி அடைகின்றது. உழைப்பு பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்யவில்லை, தொழிலாளியின் உழைப்பும் ஒரு பண்டமாகின்றது. பண்டங்கள் எந்தளவிற்கு உற்பத்தி செய்கின்றதோ, அதேவிகிதத்தில் தொழிலாளியின் உழைப்பு எனும் பண்டமும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதிலிருந்து ஒரு உண்மை புலப்படுகின்றது. தொழிலாளியின் உழைப்பினால் பண்டம் உருவாகிறது, ஆனால் அப்பண்டத்தின் மீது அவனுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அது உற்பத்தி உடமையாளனின் ஏகபோகப் பண்டமாகும். அப்பண்டத்தின் மீது உழைப்பின் உற்பத்தி நிறையவே உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒருபண்டத்தின் மீது பிரயோகிக்கப்படும் உழைப்பின் உற்பத்தியே பிரதான நோக்கமுமாகும். இதனையே உழைப்பின் புறவயத் தோற்றம் எனக் கூறுகின்றார். இந்த நோக்கத்தை எய்துவதே "உழைப்பின் பரிமாற்றமாகும்" அரசியல் பொருளாதார கோட்பாட்டின் அடிப்படையில் கூறினால்; உழைப்பின் பரிமாற்றம் எனும்போது தொழிலாளியின் அந்தஸ்த்து கீழ்நிலையை அடைகிறது எனக் கூறலாம். தொழிலாளி தன் உற்பத்திக்கேற்பவும் பண்டத்துக்கு அடிமையாகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு பரிமாற்றம் செய்யப்படுகின்றது. தொழிலாளியின் அந்தஸ்த்து குறைகிறது. அவ்வாறாக தொழிலாளியின் அந்தஸ்து குறைந்து பட்டினியை எதிர் நோக்கும் நிலைக்கு உள்ளாகின்றான். தொழிலாளி தான் உற்பத்தி செய்யும் பண்டங்களின் மீது எவ்வித உரிமையும் இல்லாத நிலைக்கு தள்ளப்படுகிறான். தனது ஜீவாதாரத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாதவனாகிறான். அதுமட்டுமல்ல உழைப்பதற்கான சக்தியைப் பெறும் தேவைகளையும் நிறைவேற்ற முடியாதவனாகின்றான். உண்மையில் உழைப்பதே பெரும்பாடாகின்றது. அவனது சொந்தப் பிரயத்தனங்களாலேயே உழைக்க முடிகின்றது. எதிர்பார்க்காத பல இடர்பாடுகளும் உழைப்பை தடைசெய்கின்றன. தொழிலாளியின் பண்ட உற்பத்தி அதிகரிக்க அவன் உற்பத்தி செய்யும் பண்டங்களிலிருந்து உரிமை எதுவும் அற்றவனாகின்றான். உற்பத்தி அதிகரிப்பினால், மூலதனத்துக்கு அடிமையாகின்றான். இவ்வாறான விளைவுகள் எவ்வாறு நிகழ்ந்தன? உண்மையைப், பார்ப்போம் அவனின் உழைப்பால் உருவாகிய பண்டம் அவனிலிருந்து அன்னியப் படுகின்றது என்பதே அவ்வுண்மையாகும். இக் கருதுகோளின்படி தொழிலாளி தன்னை மென்மேலும் வருத்தி உழைப்பை அதிகரிக்கும் போது;

1. அவன் உற்பத்தியினால் உருவாகிய பண்டம் அந்நியமாகின்றது.
2. அவனே அவனுக்கெதிரான நிலைக்கு துணைபோகும் நிலை ஏற்படுகின்றது.
3. அவன் மென்மேலும் தரித்திர நிலைக்கு உள்ளாகின்றான்.
4. அவன் உரிமை பாராட்டக்கூடிய உடமைகளின் அளவு குறைவடைகின்றது.

மதமும் இவ்வாறான தன்மை உடையதே. மனிதன் ஆண்டவனிடம் சகலவற்றையும் ஒப்படைத்து விடுகிறான். அவனுக்கென்று மிகவும் குறைந்தவையே எஞ்சுகின்றன. தொழிலாளி தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து பண்டத்தை உருவாக்குகின்றான், அனால் அப்பலமோ, உழைப்போ அவனுக்குரியதல்ல அப்பண்டத்திற்கே உரியதாகின்றது. அவனின் பங்களிப்பு மென்மேலும் அதிகரிக்கும் போது அவன்மேலும் தரித்திர நிலையை அடைகின்றான். அவனுக்கு, அவனால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்திற்கும் தொடர்பு அற்றுப் போகின்றது. உற்பத்தி மென்மேலும் குவிய அவனின் நிலையோ தாழ்கிறது. பண்டத்துடன் தொடர்பு இல்லாது தொழிலாளி வேறுபட்டு நிற்கின்றான். அதுமட்டுமல்ல அவனின் உழைப்பும் ஒரு பொருளாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது. அவனது உழைப்பு எனும் பண்டமும் / பொருளும்/ ஏனைய பொருட்கள் /பண்டங்களைப்போல் அவனிலிருந்து வேறுபட்டே நிற்கின்றது. அவனிலிருந்து பிரிந்து சுதந்திரமான சக்தியாகவே அவனுக்கு எதிராகவே நிற்கின்றது. அவனால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டம் அவனுக்கு விரோதமாகவும் பிரிந்தும் இருக்கின்றது.

தொழிலாளியின் அன்னியமாதல் வேறுபடுதல் அவனின் உழைப்பின் உற்பத்திகளுடனான தொடர்புகளின் அடிப்படையில் பார்த்தோம். ஆனால் அந்நியமாதல் உற்பத்தி எனும் இறுதி விளைவு கிடைக்கும்போது மட்டும் நிகழ்வதில்லை. உற்பத்தி படிமுறை நிகழும் போதே நிகழ ஆரம்பிக்கின்றது. அப்படியானால் ஒரு வினாவொன்று எழுகின்றது. உற்பத்தி நடவடிக்கையின் போது தொழிலாளி தன்னிலிருந்து அந்நியப்படாமல் பொருளிலிருந்து அந்நியமாதல் எவ்வாறானதாகும்? என்பதே அவ்வினாவாகும். உண்மையில் உற்பத்தி நடவடிக்கை தொடர் நிகழ்வாக அமையும்போதே பொருள் கிடைக்கின்றது. அப்படியானால் பொருள் / பண்டம் அவனிலிருந்து வேறுபடுமானால், உற்பத்தி தொடர் நிகழ்வும் அவனிலிருந்து தீவிரமாக வேறுபட வேண்டும். அந்நியமாதல் உழைப்பு நடவடிக்கையின் வேறுபடுதல் ஆகியவை உழைப்பு எனும் பண்டத்திலிருந்து அந்நியமாதல் தொடர்பாக சுருக்கித் தரப்படுகிறது.

உழைப்பு வேறுபடல் - உள்ளடக்கங்கள் :

முதலாவதாக உழைப்பு தொழிலாளியில் இருந்து வேறுபட்டு நிற்கிறது. அது நிலையானதல்ல. தனது வேலையின் மேல் விசுவாசத்தைக் காட்டமுடியவில்லை, வெறுப்பு நோக்கே வளர்கின்றது. துன்பமும் நிம்மதியீனமும் அதிகரிக்கின்றன. அவனின் உடல்வலுவோ உளவலுவோ விருத்தியடையவில்லை. உடற்தேவைகளை அலட்சியம் செய்கின்றான். உளவலு பாதிப்படைகிறது. வேலைத்தலத்துக்கு வெளியேதான் சற்று நிம்மதியை உணர்கின்றான். வேலைத்தளத்தில் தன்னையே இழந்த நிலையில் காணப்படுகின்றான். வேலை செய்யும் போது நிம்மதியை இழக்கின்றான். வேலை செய்யாதிருக்கும்போது சற்றுநிம்மதி பெறுகிறான். எனவே அவனது வேலை அவனின் மன விருப்பப்படி, சித்தத்தின்படி நிகழவில்லை. அது வலிந்து திணிக்கப்பட்டதே. எனவே அவனின் வேலையானது அவனது தேவையொன்றை திருப்திப்படுத்துவதாக அமையவில்லை. மாறாக வேறுபல தேவைகளை திருப்திபடுத்தும் காரணிகளாகவே அமைகின்றது. இதிலிருந்து உழைப்பு அன்னியமாதல் தெளிவாகின்றது. அதாவது வேலை செய்யும் உடற்தகுதியை வலுவை இழக்கும்போது உழைப்பு தவிர்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேக்நோயைப் போல் தொழிலாளி உழைப்பில் வேறுபட்டு நிற்கின்றான். அவனது உழைப்பு தன்னைத்தானே பலி கொடுப்பது போன்றது. தனக்குத்தானே தண்டனை விதிப்பது போன்றதாகின்றது. இறுதியாக வேலையில் இருந்து வேறுபடும்தன்மை என்பது அவனது உழைப்பு அவனுக்கு சொந்தமானதல்ல, இன்னொருவர்க்கு சொந்தமானது எனப் பொருள்படுகிறது. வேலையின்போது அவன் இன்னொருவனின் உடமையாகின்றான். மதங்களின் அணுகுமுறையும் இவ்வாறுதான் அமைகின்றது. மனிதனின்கற்பனை, மனிதமூளையின் இயல்பான சிந்தனையாற்றல் மனத்தின் செயற்பாடு மனிதனிலிருந்து அந்நியப்பட்டே நிற்கின்றது. தெய்வீகத்தன்மை எனக் கூறப்படுவது மனிதனை அந்நியப்படுத்துகின்றது இவ்வாறாகவே மனிதனின் உழைப்பும் செயற்பாடும் தன்முனைப்பான இயல்பானதாக செயற்படவில்லை என்பது நோக்கற்பாலதாகும். உழைப்பு இன்னொருவரின் உடமையாகிறது. ஒருவன் தனது உழைப்பின்மேல் எந்தக்கட்டுப்பாடும் இல்லாதவன் ஆகின்றான்.

இதன் பெறுபேறு ;

மனிதனால் தனது விலங்கியல் கருமங்களை சுதந்திரமாக இயக்குவதற்கே முடிகின்றதாக உணர்கின்றான். உண்ணல், குடித்தல் சந்ததி விருத்தி செய்தல், இல்லிடத்தில் வாழ்தல், தன்னை அலங்கரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தனது மனித செயற்பாடுகளில் விலங்குகளைப் போலவே வாழ்வதாக உணர்கின்றான். விலங்கியல் நடத்தைகள் மனித நடத்தைகளாகவும், மனித நடத்தைகள் விலங்கியல் நடத்தைகளாகவும் காணப்படுகின்றன.

உண்மையில் உண்ணல் குடித்தல் ஆகியவை நிச்சயமாக மனித செயற்பாடுகள்தாம். ஆனால் மனிதனின் ஏனைய சில செயற்பாடுகளை புறக்கணித்து உண்ணல், குடித்தல் போன்றவற்றை ஆராயின் அவை இறுதியில் விலங்கியல் செயற்பாடுகளாகவே தோன்றுகின்றன.

நாம் உழைப்பினை ஆராய்ந்தோம். செயல்ரீதியான மனித செயற்பாடுதான் உழைப்பு எனப்படுகிறது. இந்த உழைப்பு, மனிதனின் அந்நியப்பட்ட செயற்பாடு இரண்டுவழிகளில் இதனைப்ப பார்க்கமுடியும்.

1. உழைப்பின் உற்பத்திக்கு தொழிலாளியுடனான தொடர்பு அது அவனிலிருந்து அந்நியப்பட்டது மாத்திரமல்லாமல், அவன் மீது ஆட்சிசெலுத்துகின்றது. இது இவ்வாறானதெனில் தொழிலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பொறுத்தமட்டில் இவ்வுலகத்தின் கண்காணப்படும் ஏனைய பொருட்கள் இயற்கைப்பண்டங்கள் எவ்வாறு அவனிலிருந்து அந்நியப்படுகிறதோ அதேபோன்றுதான் உழைப்பு அந்நியமாகிறது என்பது விளக்கப்படுகிறது.

2. உழைப்பின் உற்பத்தியை உருவாக்கும் செயற்பாட்டுக்கும், தொழிலாளிக்குமிடையான தொடர்பு. இங்கும் தனது செயற்பாடு தன்னிலிருந்து அந்நியப்பட்டதாகவே உணர்கிறான். அச்செயற்பாடு அவனின் உடைமையல்ல செயற்பாடுகள் மந்த நிலை அடைகின்றன; பலம் பலவீனமாகிறது. சந்ததி விருத்தி நடவடிக்கை உடல்சக்தியை வீணடிக்கிறது. ஆண்மீகசக்தியை சிதறடிக்கின்றது என்பதாக உணர்கிறான். அப்படியானால் வாழ்க்கையில் அவனுக்கென்று வேறுஎதுதான் உள்ளது. செயற்பாடுகளே அவனுக்கு எதிராகக் கிளம்புகின்றன. அன்னிலிருந்து வேறுபட்டு நிற்கின்றான். அவனுக்கு உடமையானவை அல்ல அந்நியமாதல் சுயதன்மை வாய்ந்ததாகின்றது. எவ்வாறு உற்பத்திப் பொருள் அந்நியமாகின்றதோ அதேபோன்றுதான்

மனிதன்— தான் உற்பத்தி செய்யும் பண்டத்திலிருந்து அந்நியமாகின்றான். வாழ்க்கை செயற்பாடுகளினின்று அந்நியப்பகிறான். விலங்கியல் (மனித) செயற்பாடுகளினின்று அந்நியப்படுகிறான்; இதனை மனிதன் மனிதனிலிருந்து அந்நியப்படுகிறான் என இறுதியாக கூறமுடியும்.மனிதன் தன்னையே விரோதித்து எதிர்கொள்கிறான்; மனிதர்களை விரோதித்து எதிர் கொள்கிறான்; எவ்வாறு மனிதனின் தொடர்பு / உறவு; அவன் செய்யும் வேலையுடன், அவன்உற்பத்தி செய்யும் பண்டத்துடன். எப்படி அமைகிறதோ; அதேபோன்றுதான் மனித தொடர்பு/உறவு ஏனைய மனிதர்களுடனும், உழைப்புடனும் (ஏனைய மனிதர்களின்) அவர்களின் உற்பத்தி பண்டங்களுடனும் காணப்படுகின்றது எனக் கூறலாம்.

தமிழ் வடிவம்: பி. றஞ்சித் றூஸ்வோல்ட்

மூலம்;

Lewis A. Coser. – 'The Pleasures of Sociology'; New American Library, 1980.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கமைவின்மை என்ற எண்ணக்கரு

—மார்ஷல் பி. கிளினோட்

# The Concept of Disorganisation

— Marshall B. Clinard

---

சமூக ஒழுங்கமைவின்மையானது சமூகவியல் அறிஞர்களின் சிந்தனையைத் தூண்டும் ஒரு எண்ணக்கருவாக ஆரம்பித்தது. முதலாவது தலைமுறையைச் சேர்ந்த சிந்தனையாளர்கள், மாறி வரும் சமூதாயத்தை புரிந்து, விளங்கிக் கொள்ளுவதற்கு இவ் எண்ணக்கருவின் கூறுகள் துணையாயின. ஆனால் அடுத்த தலைமுறையைச் சார்ந்த சமூகவியலாளர்களோ, இந்த எண்ணக்கருவை ஆதாரமற்றவை, குழப்பமானவை என விவாதித்துள்ளனர். அறிஞர் கிளினோட் இந்த எண்ணக்கரு தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்கின்றார். இந்த எண்ணக்கருவை பிரயோகிக்கும்போது அவை அகவயரீதியாக (Subjectively) தெளிவற்றவை, ஏதோ ஒரு கருத்தின் மேல் 'கவர்ச்சி' உள்ளதாகவும், பக்கம் சார்ந்ததாகவும் காணப்படுவதாக விவாதிக்கின்றார். புறவயரீதியாக (Oljectively) பார்க்கும் போது சமூக ஒழுங்கமைவின்மை தொடர்பான மாற்றம் விலகல் நடத்தை, உபபண்பாடுகள், மனித மாறுபாடுகள் தொடர்பாக தெளிவற்றுக் காணப்படுகின்றது என்கிறார்.

ஒழுங்கமைவின்மை நிலைபற்றி முன்வைக்கப்படும் கருத்துக்கள்:

1. தனி நபரின் நடத்தையின் மேல் சமூக கட்டுப்பாடுகள் தளர்ச்சியுறல்.

2. அவர் சார்ந்த குழுவின் ஒற்றுமையில் தாழ்வு ஏற்படல்; இக் கருத்துக்களுக்கான காரணங்களாக முன் வைக்கப்படுபவை:

1. முன்னைய நடத்தைப் பாங்குகள் தற்போது எவ்வித தாக்கத்தையும் பிரயோகிக்கவில்லை (Contemporary use of the concept 'Social Disorganization' comes largely from W. I, Thoma and Florian Znaniecki', The polish peasant in Europe and America).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முன்னைய சமூகக் கட்டுப்பாடுகள் எவ்வித தாக்கத்தையும் பிரயோகிக்கவில்லை.

ஆனால் முற்கூறப்பட்ட எண்ணக் கருத்துக்களுக்கு சில மறுப்புக் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. பொதுவாக சமூகத்தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு ஒழுங்கமைவின்மை எண்ணக்கரு கூடியளவு அகவயத் தன்மையுள்ளதாகவும், தெளிவற்றதாகவும் காணப்படுகிறது. ஆனால் சில சிறப்புக் குழுக்கள், நிறுவனங்கள் தொடர்பாக ஆராயும்போது, இந்த எண்ணக்கருவினை பயனுறுதி வாய்ந்த வகையில் பிரயோகிக்கலாம்.

2. முன்னர் காணப்பட்ட ஒழுங்கமைவில் ஏற்படும் குழப்பநிலையொன்றையே சமூக ஒழுங்கமைவின்மை எண்ணக்கரு மறைமுகமாகச் சுட்டி நிற்கிறது. ஆனால் இந்நிலையினை நிரூபிக்க முடியாது. அதே நேரம் சமுதாய மாற்றத்தினை, சமுதாய ஒழுங்கமைவின்மையாகக் கருதும் போக்கும் கணப்படுகிறது. இங்கே சில சமூக மாற்றங்கள் ஏன் சமூக ஒழுங்கமைவின்மையாகவும்; சில மாற்றங்கள் அவ்வாறாக அமையவில்லையென்பதையும் விளக்கத் தவறுகிறார்கள்.

3. பொதுவாக சமுதாய ஒழுங்கமைவின்மையை 'தீயது' எனக் கருதும் நிலை காணப்படுகிறது. ஆனால் ஒருவர் சார்ந்த சமூகக் குழுவின் அல்லது வேறு சமூகக் குழுவின் பார்வையில் சரியெனப்பட்டது இன்னொருவரின் பார்வைக்குத் ''தீயதாக'' தெரிகிறது.

உதாரணமாக; சூதாடும் பழக்கம், மதுபானம் அருந்துதல், பாலியல் தொடர்புகளில் கூடிய சுதந்திரம் போன்றவை பொதுவாக 'தீயவை' யெனவோ அல்லது 'ஒழுங்கமைவின்மை' யெனவோ கருதப் படவேண்டியவை அல்ல.

4. சமுதாயத்தின் பிரதான விழுமியங்களுக்கு அச்சுறுத்தலாக விலகல் நடத்தைப் பண்புகள் அமைவதாக கொள்ள முடியாது. வேறுவிழுமியங்களைப் பெற்றுவிட்டால் தற்கொலை, குற்றச் செயல், மதுபாவனை போன்றவை பாரதூரமான பிரச்சனைகளாக அமையாது. அமெரிக்க சமூதாயத்தைப் பொறுத்த மட்டில், விலகல் நடத்தை கூடியளவில் காணப்பட்டாலும், ஐக்கியமும் ஒருமைப் பாடும் நிலவுகின்றது. இங்கே தேசியவாதம், உயர் கைத்தொழில் உற்பத்தி, பொருட்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்றன பிரதான விழுமியங்களாக காணப்படுகின்றன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒழுங்கமைக்கப்பட்ட நெறிகளுக்கு சவால் விடும் நிலை ஒழுங்கமைவின்மையாகத் தோன்றுகின்றது. அவ்வாறு சவால்விடும் ஒழுங்கமைக்கப்பட்ட விலகல் நடத்தையின் உபபண்பாடுகளாகப்;

அ— தவறிழைக்கும் குழுக்கள் (Delinquent Gangs)

ஆ— ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் (Organized Crime)

இ— தன்னினச் சேர்க்கை. (Homosexuality)

ஈ— விபச்சாரம். (Prostitution)

உ— உயர் மட்ட அரச பதவியினரின் குற்றச் செயல்கள், (White Collar Crime) ஆகியவற்றை குறிப்பிடலாம்

சேரிப்பகுதிகளில் காணப்படும் பாலியல் தொடர்புகள் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒருமுறையாகும். அத்துடன் திருமணத்திற்கு முன்னர் பாலியல் தொடர்பு கொள்வதற்கான ஒரு ஊடகமாகிறது. இதேபோன்று, மத்தியதரவர்க்க மக்களுக்கிடையில் காணப்படும் பாலியல் தொடர்பு முறை இன்னொருவகையைச் சேர்ந்ததாகும். (William F Whyte, A 'Slum, Sex Code') சேரிப்புறங்களில் காணப்படும் இவ்வகையான நெறிகளும் விழுமியங்களும் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என அறிஞர் வைற் (Whyte) அவர்கள் "Street Corner Society" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக பெரும்பாலான சமூகவியல் அறிஞர்கள் கூறியது போன்று; உபபண்பாடுகள், (அவை வேறுபட்டவையாக கணப்பட்டாலும்) சமூதாயத்தின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பங்களிப்பு செய்கின்றன.

உபபண்பாடுகள் சமூக ஒழுங்கமைவின்மையை ஏற்படுத்தும் நிலைமையை தோற்றுவித்து சமூதாயத்தை பலவீனப்படுத்துவதை விட ஒற்றுமை/ ஒருமைப்பாட்டுக்கே கூடுதலாக பங்களிப்புச் செய்கின்றன.

தமிழ் வடிவம்: ப எட்வேட் கென்றி

மூலம்;

Rubington, Earl — The Study of Social Problems, Oxford University Press, 1981.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதிறன் எய்தல்
# Self Actualization

அ. றொபின்சன் B. A. (Hons)

உலக ஜீவ ராசிகளின் இலட்சியம் கொண்ட ஒரே ஒரு பிராணி மனிதன். மனித வாழ்வுக்கு அர்த்தம் உண்டு, நோக்கம் உண்டு, குறிக்கோள் உண்டு. மனித நடத்தைகளை இலகுவில் அறிந்து கொள்ள முடியாது. இத்தகைய மனித நடத்தைக் கோலங்களை மையமாய் வைத்து, ஆய்வுகளை மேற்கொண்ட அறிவியலாளர்கள் பலர். இதில் உளவியலாளர்களின் பங்கு முக்கியமானது.

மனித நடத்தைகளை நீண்ட காலமாக ஆய்வு செய்த உளவியலாளர் ஆபிரகாம் மஸ்லோ, (Abraham Maslow) மனிதனின் வளர்ச்சி நோக்கிய நடத்தைகள் பற்றி சிறப்பான கருத்துக்களை கூறியுள்ளார். 'சுயதிறன் அடைதல்', (Self Actualization) இது தான் மனித வாழ்வின் நோக்கு; யார், எங்கு, எப்போது, எப்படி, இதனை அடைந்து கொள்ளுவது என்பது மிகவும் சிக்கலான அம்சம். மஸ்லோவின் வார்த்தைகளில் 'சுயதிறன் அடைதல்' என்பது, ஒருவன் தன்னில் உள்ள ஆற்றல்களையும், திறமைகளையும் முற்றுமுழுதுமாகப் பயன்படுத்தலாகும்.

சுயதிறன் அடையும் மனிதன் ஒரு சாதாரண மனிதனாக இருக்க முடியாது. அவனிடம் உள்ள ஆற்றல்கள், திறமைகள் எதையுமே விரயம் செய்யாத ஒரு வீறு கொண்ட மனிதனாக இருக்கின்றான். செயற்படுத்தக்கூடிய, பொருத்தப்பாடு மிக்க சிந்தனைப் போக்கு; தன்னை, பிறரை, இயற்கையை, ஏற்கும் தன்மை; தூண்டுதலின்றி செயற்படும் தன்மை; எளிமை, இயற்கையோடு ஒன்றுபட்ட இயல்பு; தன்னுணர்வுக்கு இடம் கொடாமை, தனித்துவத்தை நாடல், பண்பாட்டிலும், சூழல் தன்மையிலும் இருந்து விடுபட்டு செயற்படல், உயர் அனுபவங்கள்; சகோதரத்துவ உணர்வு, ஜனநாயக உளப்பாங்கு; நடு நிலைத் தன்மை; சுயதிறனடைவினை நோக்கிய செயற்பாடுகள்; இவையாவும் சுயதிறன் அடையும் மனிதன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் என மஸ்லோ குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயதிறன் அடைதல் என்பது, பிரச்சனைகள் அற்ற நிலை அல்ல. மாறாக பல புதிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையினை இது சுட்டி நிற்கின்றது. சுயதிறன் அடைபவர்கள் யாவரும் குறைகளற்ற பூரணத்துவமான மனிதர்கள் அல்ல. இவர்கள் யாவரும் தாம் தேர்ந்தெடுத்த இலக்கின் மீது செலுத்திய தீவிர அக்கறையும், அர்ப்பணமும், செயற்பாடும் அவர்கள் இலக்குக்கு இவர்களைக் கூட்டிச் செல்கின்றது.

மஸ்லோ தன்னுடைய இறுதி நூலான 'The Father Reaches of Human Nature என்பதில் சுயதிறன் அடைதலுக்கான எட்டு வழி முறைகளைக் கூறுகின்றார்.

1. முழுமையான அனுபவம், பூரணமான அவதானம், முழுமையான உட்கிரகித்தல்.

2. சுயதிறன் அடைதலை வாழ்வின் ஒரு தெரிவுப் போக்கு (Process of Choices) என்று கருதினால் ஒவ்வோர் தீர்மானமும் வளர்ச்சிக்கான தெரிவாக இருக்க வேண்டும். தெரிவுகள் ஒவ்வொன்றும் சாதக பாதக இயல்புகளைக் கொண்டிருந்தாலும், துணிந்த மனத்தோடு, சவாலாக எண்ணிச் செயற்பட வேண்டும்.

3. "தான்" (Self) என்பது ஒருவனின் இயல்புத்தன்மையின் சாரம்; அவனின் தனித்துவம்; அவனின் சிந்தனைப் போக்கு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. எனவே இவை யாவற்றையும் தன் உள்ளார்ந்த இயல் நிலையோடு (Inner Nature) பொருத்தப்பாடு' காண்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்.

4. தேர்ந்தெடுத்த செயற்பாட்டின் மீது பொறுப்புணர்வும், நேர்மையும் கொண்டிருத்தல்.

5. ஒருவன் தன் உணர்வின் மீது, அவனது தீர்மானம் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். தான் தன்னை நம்ப வேண்டும். இவை யாவும், ஓர் சிறப்பான தெரிவினை மேற்கொள்ள துணை புரியும்.

6. தன்னிடம் உள்ள இயல் தன்மைகளை தொடர்ச்சியாக வளர்த்தெடுத்தல். உயர் திறமைகளோடும், ஆற்றல்களோடும் இருப்பது சுயதிறன் அடைதலுக்கு இட்டுச் செல்லாது. ஆற்றல் மிக்கோர் அவற்றை கிரயம் செய்வதாயும், குறைவான ஆற்றல் கொண்டோர் அதீத வளர்ச்சி அடைவதையும் மனித வாழ்வின் அனுபவம் சொல்லும்.

7. உயர்வான அனுபவங்கள் உயர்வுக்கு இட்டுச் செல்லும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இறுதியாக ஒருவன் "Ego Defence Mechanism" என்பதினை அறிந்து, உணர்ந்து, அதனை களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவை யாவும் ஒன்றிணையும் போது சுயதிறன் அடைதல் என்பது மிகவும் இலகுவாக எய்தப்படலாம்.

சுயதிறன் அடைதலை மஸ்லோ ஓர் அடுக்கமைவு ஒழுங்கு முறை மூலம் (Hierarchical Order) விளக்குகின்றார். அடி நிலையில் இருந்து மேல் நிலை வரையாக (Hierarchy of needs) தேவைகளை ஒழுங்காக அடுக்கியுள்ளார். உலக சமூகங்கள் அனைத்திலும் அடிப்படைத் தேவைகள் (Basic Needs) உண்டு. இந்த அடிப்படைத் தேவைகளின் திருப்தி அளவு (Amount of Satisfaction) வேறுபடுகின்றதே அன்றி; தேவைகளற்ற சமூகம் உலகில் இல்லை. உடலின் நிலைப்பிற்கும், அதன் நலத்திற்கும், 'உடலியற் தேவைகள்' (Physiological needs) இன்றியமையாதவை. (உதாரணமாக, பசி, தாகம், உறக்கம், பாலுணர்வு போன்றவை) பாதுகாப்பு, அன்பு, மரியாதை இவை நான்கையும் மஸ்லோ அடிப்படைத்தேவைகள் என வகுக்கின்றார் இதனோடு இணைந்ததாகவே சுயதிறன் எய்தல் என்பது காணப்படுகின்றது. அதாவது ஒருவனது உள்ளார்ந்த ஆற்றல்களையும், இயல் தன்மைகளையும் வளர்த்தல், இதனையே மாஸ்லோ 'உயர் தேவை' என்கிறார். (Growth-needs)

மஸ்லோவின் தேவைகள் தொடர்பான ஏறுநிரையமைப்பு




உயர் ஒழுங்கில் அமைக்கப்பட்ட இத் தேவை ஒழுங்கமைப்பில் மிகவும் அடியில் உள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்படும் போதுதான், ஏனைய உயர் தேவைகள் மேல் எழுகின்றன. ஒரு தேவையின் நிறைவில் இருந்து இன்னொரு தேவை பிறக்கிறது. வேறு வார்த்தையில் கூறின் மனிதனின் உயர் இயல்பு (Higher Nature) அவனது தாழ் இயல்பில் (Lower nature) தங்கியுள்ளது. இத் தாழ் தேவைகள் தான் அத்திவாரம். இது நிலைகுலையும்போது ஏனையவை நிலைபெற வழி அற்

றுப் போகின்றது. அடிப்படைத்தேவைகள் என்னும் கட்டுக்களில் இருந்து விடுபட்ட மனிதனால் மட்டுமே உயர் தேவைகள் பற்றிச் சிந்தனை செய்ய முடியும். மனிதனின் ஆரம்ப தேவைகள் பூர்த்தி தொடர்பாக மனித மனம் சீர் குலையும் போது இது ஏனைய இயக்க நிலைகளையும் பாதிக்கும். வளர்ச்சி என்பது சுயதிறன் எய்தல். இதற்கு நீண்டகால அர்ப்பணம் தேவை. இயல் தன்மைகளும், ஆற்றல்களும் நீண்டகாலத்தில் வளர்த்தெடுக்கப்படும் போது அது சுயதிறன் அடைதலுக்கு இட்டுச்செல்லும். சோம்பலின்மை, தன்னம்பிகை' இவை இரண்டும் சுயதிறன் எய்தலுக்கு இன்றியமையாதவை. ஆக்கத் திறன் மிக்க விடாமுயற்சியே சுயதிறன் எய்தலுக்கு வழி.

மஸ்லோவின் கருத்துப்படி ஒப்பீட்டளவில் குறை தேவைகள் உயர் தேவைகளிலும் பார்க்க பலம் கொண்டவை. குறை தேவைகள் மேலெழுந்து உயர் தேவைகளை கீழ் தள்ளலாம்.

1. கடந்த கால அனுபவங்கள் தவறான முடிவுகளைக் கொடுக்கும் போது அவற்றால் தனியன் நிலை குலையும் போது;

2. சமூகத்தின் செல்வாக்கும், குழு அழுத்தமும் தனியனின் தீர்வுக்கும், விருப்புக்கும் மாறாக இருக்கும்போது;

3. தான் தன்னில் நம்பிக்கையற்றுக் காணப்படும் போது சுயதிறன் அடைதல் தடைப்படலாம். மேலும் தாழ்வான பழக்க வழக்கங்களாலும் ( உ+ம் மது, போதைவஸ்துப்பாவனை ) உடல் உள நலன்கள் பாதிக்கப்பட்டு சுயதிறன் எய்வு மறைந்து போகலாம். மஸ்லோ தனது கருத்தை மேலும் அழுத்தும் போது ஏதொரு வாழ்வின் அம்சத்தையும் குறைவாக மதிப்பிட்டால் அது அவர் உயர்விற்கு தடையாக அமையும். இதனை மஸ்லோ 'Desacralizing' என்றார். இதோடு தொடர்பு பட்டதாகவே ''யோனா சிக்கல்'' (Jonah complex); அதாவது ஒருவன் தன்னிடமுள்ள ஆற்றல்களையும், திறமைகளையும் ஏற்க மறுத்தல் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

சுருங்கச் சொல்வதானால் 'சுயதிறன் எய்தல்' என்பது ஒருவரிடம் உண்டு அல்லது இல்லை என்று சொல்லும் ஒரு பொருளல்ல. அது ஒரு முடிவற்ற செயல் முறை. வளர்ச்சி என்பதும் எப்பொழுதும் குறித்தளவு துன்பங்களையும், பிரச்சனைகளையும் கொண்டதாகவே இருக்கும். ஒருவனது இயல் தன்மைதான் அவன்தேவைகளை தீர்மானிக்கிறது. இதேகருத்தையே சமூக உளவியலாளரான கோல்ட்ஸ் ஸ்ரயினும் (Gold Stein) கூறினார். ஆற்றல் என்பது எல்லோரிடமும் உண்டு. அவரவர் தன் தன் ஆற்றலுக்கு ஏற்ப இலக்கினை வகுத்து அதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ற செயல் முறைகள் மூலம் அதனை அடைதலுக்கு முயற்சி செய்தல் வேண்டும். ஒருவன் தன் ஆற்றலுக்கு மேலான இலக்கினை கொண்டிருப்பானேயானால், அவன் இயல்பான வாழ்வு பாதிக்கப்படுவதோடு, அவன் இயக்கமும் கேள்விக்கு இடமாக வழியுண்டு. இவ்வாறே ஒருவன் தன் ஆற்றலுக்கும், குறைவான இலக்கினை கொண்டிருப்பானேயானால், அவன் தன் சக்தியை விரயம் செய்வதோடு தன் திறமைக்கு ஏற்ப அவனால் அடைந்து கொள்ளக் கூடிய உயர் நிலையைக் கூட அவனால் அடைய முடியாமல் போகிறது. ஆகவே ஆற்றலை இனம் காணல், இலக்கினை வகுத்தல் என்பன மிகவும் முக்கியமான அம்சங்கள். சாதகமான உணர்வுகள் சுய திறன் எய்தலை தூண்டும். ஒருவன் தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அது பற்றி தன்னைத் தான் கேட்க வேண்டும். எனவே ஒருவன் தன்னை அறிந்து தன்னில் நம்பிக்கை வைத்து தளராத மனத்தோடும், தைரியத்தோடும் செயற்படும்போது உயர்வு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

## உசாத்துணைகள்


1. Coleman, C. James; — "Abnormal Psychology and Modern Life"; D. B. Taraporevala Sons and Co. Private Ltd, Bombay, 1964.

2. Fadiman, James; Frager, Robert; "Personality and Personal Growth"; Harper and Row Publishers New York; 1976, P. P; 324 — 350.


---

பகுத்தறிவு படைத்த மிருகம் என்று மனித ஜாதியைக் குறிப்பிடுவார்கள். அத்துடன் சுய அனுபவ சக்தி வாய்ந்த மிருகம் என்றும் மனித ஜாதியை வர்ணிப்பார்கள். ஆனால் இந்த சுய அனுபவ சக்தியே மனித ஜாதியினுடைய கெட்ட குணமாகும். சொந்த கௌரவம் சுயநலம், எல்லாவற்றுக்கும் மனிதன் தலை வணங்குவது போல், எந்த மிருகமும் அடிபணிவதில்லை, ஆசைப்படுவதில்லை. மிருகங்களை விட மனித ஜாதி உயர்ந்தது என எப்படிச் சொல்ல முடியும்?

- பீதியஸ்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுமுறையியல்

# சமூக ஆய்வுக்களத்தில் பங்குகொள் அவதானி
# Participant Observer in Social Research Field

ம. சிவஹரன்

சமூகவியலின் ஆய்வுப் பொருளாக மனிதனும் அவனுடைய செயற்பாடுகளும் அமைகின்றன. இதன் ஆய்வு கூடமாக மக்கள் வாழும் சூழல் அமைகின்றது. இங்கு மனித நடத்தை, அவனின் வாழ்க்கை முறைகள் போன்றன ஆராயப்படுகின்றன. இவ் ஆய்வுத் துறையானது தனக்குரிய பல ஆய்வு நுட்பங்களைக் கொண்டுள்ளது. இதில் அடிப்படையானதும், முக்கியமானதுமாக ''அவதானம்'' அமைகின்றது, இது இரு வழிகளில் நிகழ்கின்றது.

i) பங்குகொள் அவதானம் (Participant Observation)

ii) பங்குபற்றா அவதானம் (Non Participant Observation)

பங்குகொள் அவதானம் எனும்போது ஆய்வுப்புலத்து மக்களின் செயற்பாடுகளில் ஆய்வாளன் நேரடியாக பங்கு கொண்டு, தானும் ஒரு அங்கத்தினனாக இருந்து அங்கு நிகழ்பவற்றை அனுபவவாயிலாக திரட்டும் தன்மை கொண்டது. ஆனால் பங்குபற்றா அவதானம் எனும் போது, ஆய்வாளன் புலத்து மக்களுடன் பங்கு பற்றாது வேறு நுட்பங்களை கையாண்டு தனக்கு வேண்டிய தகவல்களைத் திரட்டும் முறையாகும். இங்கு நாம் பங்குபற்றும் அவதானம் பற்றிக் குறிப்பிடுவோம்.

பங்குகொள் அவதானத்தின் முதற்படியாக கள நுழைவு அமைகின்றது. இது சாதகமாக அமையும் பட்சத்தில் தான் ஆய்வாளன் தனது ஆய்வினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். புலத்து மக்கள் இவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். இவனால் எமக்கு ஆபத்து இல்லை, நம்பிக்கைக்கு உரியவன் என்ற ஏற்பு நிலை உருவாக வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். ஆரம்பத்தில் அவனை ஏற்றுப் பின்னர் புறக்கணிக்கவும் கூடும். அவை ஆய்வாளனின் திறமையினால் சமாளிக்கப்பட வேண்டியவை. "என்னை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என நான் உணரும் வரையும் இத்தொழில் ஒரு நரம்புடைக்கும் வேலை தான்" என கேறபேட் ஜே. காண்ஸ் (Herbert. J. Gans) என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

ஆய்வாளனும் ஒரு மனித உயிரி என்ற வகையில் அவனுக்கும் பந்த பாசப் பிணைப்புகள், மன உழைச்சல்கள், சலிப்புகள் ஏற்படும். அத்துடன் இந்நிலை ஆய்வாளனில் பெரும் தாகத்தினையும் உண்டு பண்ணும். அவற்றிற்கு ஈடுகொடுத்து நின்றால்தான் அவன் நல்லதொரு ஆய்வை உலகுக்கு வழங்க முடியும். பங்குகொள் அவதானம் என்பது ஏனைய நுட்பங்களுடன் ஒப்பிடுகையில் கடினமான ஒன்று. களத்து நடவடிக்கை ஆய்வாளனையும், ஆய்வாளனின் நடவடிக்கை களத்தை யும் பாதிப்படையா வண்ணம் ஆய்வாளன் பயிற்சி பெறுகிறான்.

பங்குகொள் அவதானிக்கும் முன்னோடியாக விளங்கிய மலினோ வஸ்கி (Malinowski) என்ற ஆய்வாளர் "பங்குகொள் அவதானியின் நிபுணத்துவமே அவரின் களப்பணியை வெற்றியுடன் நிறைவு செய்ய உதவுகின்றது" என்கிறார். மேலும் அவர் தனது ரொபியலாந்து (Trobriand) கள ஆய்வு அனுபவத்தை விளக்குகையில், "ஒரு ஆய்வுக் களத்துள் நுழைய முன்னர் அந்த ஆய்வுக்களம் பற்றிய அனுபவம் வேண்டும். அப்போதுதான் நிபுணத்துவமான வியூகங்களை எடுக்க முடியும். மேலும் ஆய்வுக்குட்படும் மக்களிடம் ஆய்வாளர் என்ற வகையில் நாம் கேட்கும் கேள்விகளை விட அந்த மக்கள் கேட்கும் கேள்விகளை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அதில் நிறைய அம்சங்கள் இருக்கும். அதை வைத்து அவர்களின் பண்பாட்டுப் பின் புலம், பழக்க வழக்கம் என்பவற்றை அறியக் கூடியதாக இருக்கும்".

பங்குகொள் அவதானிகள் தமது சொந்த பண்பாட்டு சூழலில் இருந்து வேறுபட்ட சூழலில், நிலைகளில் ஈடுபட்டு ஆய்வினை மேற் கொள்கின்றனர். இதற்காக "ஆய்வுப் புலத்துள் வாழ்தல்" முக்கிய அம்சமாக காணப்படுகிறது. ஆய்வுப்புலத்துள் வாழ்தல் மூலம் நுணுக் கமான ஆய்வுகளை, அவதானிப்புகளை செய்ய வசதி ஏற்படுகிறது. ஒரு சமூகத்தையோ, குழுவையோ எடுத்துக் கொண்டால் அதன் ஒவ் வொரு அங்கத்தவரும் அந்த சமூக பழக்கவழக்கங்களை கற்றுக் கொண் டிருப்பார்கள். அவதானியாக செல்பவர் முதலில் அந்த சமூகத்தைப் பற்றி, குழுவைப் பற்றி வெளியில் கற்றுக் கொண்ட முன் அறிவுடன் நிகழ்கள அனுபவவாயிலாக அதைக் கற்றுக் கொள்கிறார். அக்குழு, சமூ கத்திற்குரிய பண்பாடுகள், நடத்தைகள் என்பவற்றை இவரும் கற்றலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி எடுத்து பதிந்து கொள்கிறார். தானாகவே முன்வந்து தனது தொழிலை துணிந்து தௌிவாக மேற்கொள்வதோடு அனுபவத்தைப் பகுத்தாராய்ந்து மற்றவர்களுக்கும் உதவும்படி செய்கின்றார்.

ஆய்வுக்களத்து மக்களின் நம்பிக்கைக்கு உரிய நம்பிக்கைகளை ஆய்வாளர் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். பங்குபற்றும் அவதானியானவன் களத்திற்கு புதியவன் / அன்னியன் என்ற நிலை, பல அமிழ்ந்து போன உண்மைகளை வெளிக் கொண்டுவரும் ஊக்கியாகின்றான். இந்நிலை புதியவன் ஒருவனை நம்பி ஏற்றுக் கொள்கின்ற சூழ்நிலையில் சாத்தியமாகும். முரண்பாடுகள், வெறுப்பு, காழ்ப்புணர்வு என்பவற்றை வெளிக் கொண்டுவரும் ஊக்கியாக அமைகின்றார். இதற்கு காரணம் என்னவென்றால் இவர்கள் அக்காலத்திற்கு புதியவர்கள், களத்து மக்கள் போல தமது சம்பிரதாய பூர்வ பண்பாட்டு விழுமியம் தொடர்பான அபிப்பிராயம், செயற்பாடுகளுக்கு உடனே உணர்ச்சி வசப்பட்டு அடிமையாகமாட்டார்கள். அவற்றை அவதானித்து அனுபவமாக்கிக் கொள்வார்கள்.

ஆய்வாளர் தனது ஆய்வுப் பார்வையால் அல்லது அன்னியன் என்ற வகையில் அந்தக் களச் சூழ்நிலையை சிலசமயம் மாற்றி அமைத்துவிடலாம் என சிலர் விமர்சித்தனர். இதனை றொனால்ட் பிராங்கின் பேர்க் (Ronarld Franken Berg) என்ற ஆய்வாளர் மறுக்கிறார். "பல நூற்றாண்டுகளாக ஸ்தாபிக்கப்பட்ட பழக்கவழக்கங்கள், விழுமிய செயற்பாடுகளை பங்குகொள்பவன் என்பவன் மாற்றி அமைத்துவிட்டான் என்பதை நம்ப முடியாதுள்ளது. அப்படியான சூழ்நிலைகள் பகுப்பாய்வுக்குட்படுத்த வேண்டிய ஒன்று. உண்மையில் அங்கு ஆய்வாளர் என்பவர் களத்தில் நிகழும் செயற்பாடுகளுக்கு ஒரு தூண்டியாகின்றார். துரித மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு அலகாக அவர் இருக்கலாம்" எனக் கொள்கின்றார்.

பங்குகொள் அவதானத்தின் மூலம் ஒரு நேரத்தில் ஒரு சிறு குழுவை மட்டுமே ஆய்வு செய்ய முடியும். இது ஒரு குறைபாடு என சுட்டிக்காட்டப்படுகிறது. சிறு குழுவில் திரட்டிய தகவல்களைக் கொண்டு அதை அந்தக் குழு அங்கம் வகிக்கும் பெரிய சமூகத்திற்கு பொதுமையாக்கவோ சான்றாகக் காட்டவோ முடியாது எனக் கூறப்படுகிறது. இதற்கு றொனாட் பிராங்கின் பேர்க் (Ronarld Franken Berg) கருத்துத் தருகையில் "சிறு குழுக்களை ஆராய்வது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இந்தச் சிறிய குழுக்களின் வழியாகத்தான் மக்கள் சமூகங்களில் பங்கு கொள்கின்றனர். எனவே சிறிய குழுக்களின் தாக்கம் அல்லது செயற்பாடு சமூகத்திலும் சமூகத்தின் தாக்கம் இக் குழுக்களிலும் காண முடியும். எனவே இவற்றை ஆராய்வது பிழையில்லை'' என்கிறார்.

பல பங்குகொள் அவதானங்களைச் செய்து தேர்ச்சிபெற்ற அறிஞர்கள் ஆய்வுத்துறைக்கு மட்டுமல்ல புதிய ஆய்வாளர்களை பயிற்றுவிக்கவும் உதவியாக உள்ளனர். குழுக்களின் தொடர்புகள், இடைவினைகள் போன்ற நுணுக்கமான தகவல்களை வெளிக்கொண்டு வர இம்முறையியல் உதவுகின்றது. ஏனைய ஆய்வு நுட்பங்களினால் வெளிக்கொண்டுவர முடியாத பல நுணுக்க தகவல்களை பங்குகொள் அவதான மூலம் பெறலாம். ஏனைய நுட்பங்கள் மூலம் திரட்டப்படும் தகவல்களைச் சரி பார்க்கவும் இந்தக் கள அனுபவம் வழிசெய்கின்றது. பங்குகொள் அவதானிகள் சமூகவியற்துறைக்கும், அதன் வளர்ச்சிக்கும் என்றும் பின்னணியாக உள்ளனர்.

## உசாத்துணைகள் :


1. Robert G. Burgess — Field Research; A Source Book and Field Manual Editorial Selection and Compilation, 1982.

2. Bernard S. Phillips — Social Research Strategy and Tactics, Macmillan Publishing Co, Inc, 1976.


---

### சமூகப் பிரச்சனையா!

உலகிலேயே கூடுதலான குடிப்பழக்கத்தை கொண்டுள்ளவர்களின் பெரும் குடி மக்களின் நாடாக இலங்கை திகழ்கின்றது. 1997 க்கு முன்பு 3 கிராமங்களுக்கு ஒரு கசிப்பு விற்பனை நிலையமும், ஆனால் இன்று. 10 - 15 கசிப்பு நிலையங்களாக அதிகரித்துள்ளது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாக்கொத்தின் உருவாக்கம்
# Formation of Questionnaire

அ. டொறின்

வினாக்கொத்து என்ற பதமானது வினாக்களின் தொகுதியை குறித்து நிற்கின்றது எனலாம். ஒரு ஆய்வு முறையின் முக்கிய அம்சமாக இது விளங்குகிறது. ஆய்வின் முதுகெலும்பு என்றுகூட இதைச் சொல்லலாம். இவை பொதுவாக கள ஆய்வுகளிலேயே பயன்படுத்தப்படுகின்றன. நாம் ஆய்வு செய்யும் எண்ணக்கருவானது வினாக்களினூடாக வெளிக்கொணரப்படுகிறது. அதாவது வினாக்கொத்தினூடாக எமக்கு கிடைக்கும் தகவல்களானவை – ஓர் ஆய்வாளனால் அவதானிக்கப்பட்டு, ஆராயப்பட்டு பெறப்பட்டவை ஆகும். ஆயினும் நடை முறையில் இவ்வினாக்கொத்துக்கள் தெளிவற்றதாகவும், அதிலிருந்து கிடைக்கும் தகவல்கள் உறுதியற்றவையாகவும் போய்விடுவதை காண்கிறோம். வினாக்கொத்துக்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்ற அறிவும், பயிற்சியும் ஆய்வாளர் அனைவருக்கும் அவசியமானதொன்றாகும்.

ஓர் ஆய்வாளன் வினாக்களை தொடுக்கும்போது இரண்டு வகைப்பாடுகளை கையாளலாம்.

i) மூடிய வினாக்கள்
(Closed – Ended Questions)

ii) திறந்த வினாக்கள்
(Open – Ended Questions)

ஆய்வாளனால் கேட்கப்படும் வினாக்கள் விடையளிப்பவருக்கு நேரடியாக விடையளிக்கக்கூடிய வினாக்களாக இருப்பின் அவை திறந்த வினாக்கள் என கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக; 'தற்போது யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை எதுவாக இருக்கும் என நீர் கருதுகிறீர்?' எனும் ஓர் வினா கேட்கப்படுமிடத்து, விடையளிப்பவர் ( Respondent ) பொருளாதார பிரச்சினையாக இருக்கும் என்றோ அல்லது சமூகப்பிரச்சினையாக இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் என்றோ சுதந்திரமாக விடையளிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் மூடிய வினாக்கள் திறந்த வினாக்களுக்கு முற்றிலும் மாறு படும். அதாவது ஆய்வாளரால் கொடுக்கப்படும் விடைகளிலிருந்து மிகப் பொருத்தமானதை தேர்ந்தெடுக்குமாறு கேட்கப்படுவார். உதா ரணம்;, இன்று யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சனை என நீர் கருதுவது —

i) பொருளாதார பிரச்சினையை

ii) போக்குவரத்து பிரச்சினையை

iii) போர் நெருக்கடியை ......…,

இவை போன்ற ஒரு கட்டமைப்பிற்குட்பட்ட வினாக்களாக மூடிய வினாக்கள் காணப்படுகின்றன.

மேலும் இரட்டைத்தன்மையுடைத்தான வினாக்கள் (Double Barreled Questions) வினவப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். சில ஆய்வாளர் குறிப்பிட்ட ஒரு விடையினைப் பெறுவதற்காக பல வினாக்களைத்தொகுப்பார். இது ஆய்வாளரது ஆய்வுத்தெளிவற்ற தன்மையை குறிப்பதோடு விடையளிப்பவருக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும். உதாரணமாக; ''இலங்கை உள்நாட்டுப்போருக்கான ஆயுத செலவை விடுத்து அதற்கு செலவாகும் பணத்தினை நாட்டின் அபிவிருத்திக்குபப்யன்படுத்தலாம். இது பற்றி நீங்கள் கருதுவது என்ன?'' — இவ்வாறு கேட்கப்படும் வினாவினை முழுமையாக ஏற்பதில் சிலர் குழப்பமடையலாம். ஆயுத செலவை நிறுத்தும் முதல் பகுதியை ஆதரித்து அதனை அபிவிருத்திக்குப்பதில் மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கலாமே என்ற கருத்து ஒருவரிடம் இருக்கலாம். அன்றி, போரை நிறுத்திவிடக்கூடாது என முதல் பகுதிக்கு பதில் கொண்டவரிடம் அபிவிருத்தி அக்கறை காணப்படலாம். இந்நிலையில் இரட்டை வினாக்கள் நல்ல தரவுகளை தரமுடியாது. எனவே தான் இத்தகு வினாக்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனப்படுகிறது.

மாற்று வினாக்களுக்கு விடையளிப்போன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் நிலையில் இருக்க வேண்டும். உதாரணம்: குழந்தை வளர்ச்சிபற்றிய ஓர் ஆய்வை எடுத்துக்கொண்டால்; இவ்வாய்வாளர் குறிப்பிட்ட பெற்றோர்களிடம் குழந்தையின் வளர்ச்சிக் கால அட்டவணையை — அதாவது 'குழந்தை எத்தனை வயதில் நடக்கத்தொடங்கியது அல்லது கதைக்கத்தொடங்கியது?' எனும் திறந்த வினாவை கேட்கும் போது அப்பெற்றோர் குறிப்பிட்ட காலத்தினை மிகச்சரியாக சொல்லக்கூடிய தகுதியினை பெற்றிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இல்லாவிடின் ஆய்வாளனின் அளவீடுகள் பயனற்றுப் போய்விடும். இன்னும் இந்த வினாக்கொத்தானது கேட்கும் விடயத்தில் முன்னறிவு உள்ளவரிடம் இருந்தே தகவல்களை பெற உதவும். அதாவது; 'நாசா விண்வெளி ஆய்வுபற்றி நீங்கள் கருதுவது யாது?'' எனும் வினாவினை ஒருவரிடம் கேட்க்கும் போது, அவர் ''எந்த நாச விண்வெளி ஆய்வு?'' என மீண்டும் ஒரு வினாவினை தொடுப்பாராயின் என்ன பயன்?

இவ்வாறே கேட்கப்படும் வினாக்களும் பொருத்தமானவையாக இருக்க வேண்டும். இல்லாவிடில் தகவல் தருவோர் பொய்யான தகவல்களையும் தரக்கூடும். குறிப்பாக, அமெரிக்காவில் மேற்கொள்ளப் பட்ட ஓர் ஆய்வில் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு பிரபல அரசியல் வாதி பற்றிய குறிப்புகள் சேகரிக்கப்பட்டன. அதாவது அந்த அரசியல்வாதியுடன் நேரடித்தொடர்புடையவர்கள் என்ற ரீதியில் தான் இவர்களை நாட வேண்டி வந்தது. ஆனால் பின்பு கிடைத்த தகவல் களின்படி, இவர்களில் 9% வீதமானோரே அரசியல்வாதியை நேரடியாக சந்தித்தவர்கள் என்றும் ஏனையோர் வானொலியிலும் தொலைக் காட்சியிலும் மட்டுமே சந்தித்தவர்கள் என்றும் தெரிய வந்தது.

மேலும் சுருங்கிய வடிவில் கேள்விகளைக் கேட்பதும், சுருங்கிய வடிவில் விடைகளைப் பெறுவதும் ஆய்வாளன் கையாளும் மிகச் சிறந்த வழிவகைகளுள் ஒன்றாகும். இம் முறையின் மூலம் ஆய்வாளன் காலத்தை சிக்கனப் படுத்துவதுடன் போதியளவு தகவல்களையும் பெறக்கூடியதாக உள்ளது. அத்துடன் தேவையற்ற கருத்துக்களை தவிர்க்கவும் துணையாகும்.

அடுத்ததாக வினாக்கொத்தால் எதிர்நிலை வினாக்கள் (Negative items) தவிர்க்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக; 'யாழ்ப்பாணத் தில் திருமண முறையில் சாதி முறை இன்னமும் பேணப்படுவது தவறு. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?' எனக் கேட் கும் போது விடையளிப்பவர் மாறுபட்ட கருத்தினை கொண்டவராக இருக்குமிடத்து, ஆய்வாளன் விடையளிப்பவரது ஒத்துழைப்பை இழக்க நேரிடலாம்.

இன்னும் வினா தொடுப்போன் ஒரு முற்சாய்வான வினாக் களையோ அல்லது பதங்களையோ பிரயோகிக்கக்கூடாது. உதாரணமாக; 'யாழ்ப்பாணத்தில் இராணுவச் சோதனை சாவடிகளில் மக்கள் நடாத்தப்படும் முறைமை பற்றி நீர் யாது கூறுவீர்?' என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினவும் போது; பதில் ஒரு புறம் சார்ந்தே காணப்படும். இதனால் விடையளிப்போன் விடை கூறத் தயங்குவார். மேலும் சில பிரச்சி னைக்குரிய பதங்களை உபயோகிப்பதிலும் ஆய்வாளர் கவனமாக இருத்தல் வேண்டும். அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் 'Mainland China' க்குப்பதிலாக 'Communist China' என்ற பதம் பயன்படுத்தப்பட்ட போது, கம்யூனிசம் தொடர்பான முற் சாய்வு அவர்கள் விடைகளில் பிரதிபலித்தமை அவதானிக்கப்பட்ட மையை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

வினாக்கொத்தினை அறிமுகம் செய்யும் தொடர்பியல் மொழி, மிகவும் நெருக்கமானதாக, ஆய்வாளரை ஏற்று நம்பகமான பதிலைத் தர தூண்டுவதாக அமைவதும் மிக மிக இன்றியமையாதது. மேலும் ஆய்வுகளுட்படுத்தப்பட்டவர் அல்லது உட்படுத்தப்படுபவர் எந்நிலையி லும் அடையாளம் காட்டப்படமாட்டார் என ஆய்வாளரால் உறுதி யும் தரப்பட வேண்டும்.

இவையனைத்தும் வினாக்கொத்தொன்றினை அமைப்பதற்குரிய அடிப்படை விடயங்களாகும். இவ்விடயங்களை கடைப்பிடிப்பதனால் நாம் அனுபவ ஞானத்தைப் பெறுவதுடன், நல்ல வினாக்கொத்தினை அமைக்கும் திறனையும், கூர்மையினையும் பெறுகிறோம்.

**உசாத்துணை :**

Babbie, Earl. R – Practice of Social Research; Wordsworths; 1975.

---

ஓ, தெய்வமே! நான் பிறரை நசுக்கி ஆளும் சக்கரங்களில் ஒன்றாய்ப் பிறவாமல், நசுக்கப்படும் ஒரு ஜந்துவாய் தான் பிறந்த தைப் பற்றி நினைத்து நினைத்து உனக்கு நன்றி செலுத்துகிறேன்.

- தாகூர்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமக் கல்வி விருத்திமூலம் சமூகமேம்பாடுசாத்தியமா? -சமூகவியல் நோக்கு

| பிரச்சனைகள் |

# Possibility of Social Upliftment Through Rural Education — A Sociological Perspective

கு. யசிதரன் B. A. (Hons)

மக்கள் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமாவது போல சுக நலமும் அவசியமாகும். கிராம மேம்பாட்டிற்கு கல்வியும், உடல் நலமும், உளநலமும் உறுதுணையாய் அமைகின்றது.

கிராம மக்களிற்கு முறைமை, முறைமையற்ற கல்வியூடாக நலக் கல்வியை ஊட்டலாம். மக்களையும் கிராமத்தையும் சுக நலன் கட்டிக் காக்கிறது. நலம் பற்றிய அறிவை கிராம மக்கள் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். முறைமைக் கல்வி (Formal) மூலம் நலம் பற்றிய அறிவைக் கொண்டிராத மக்கட்கு நலம் பற்றிய அறிவு கிராமக் கல்வி களம் மூலம் அளிக்கப்பட வேண்டும். ''நலம்'' என்பது பிணி இல்லாது மக்கள் வாழ்வதாகும். பிணியின்றி வளரும் வாழும் அறிவைக் கல்வியூடாக கிராம மக்கட்கு ஊட்ட வேண்டும்.

"சமுதாய நன்னிலை'' இதனை கல்வி, தொழில், சமுதாய உயர்வு நிர்ணயிக்கின்றன. கல்வியூடாகக் கற்றவர்கள் நன்மை தீமையை நன்கு பகுத்தாராய்ந்து சமுதாய நன்மைக்கு வேண்டிய அம்சங்களை அறிந்து, வாழக் கற்றுக் கொள்கின்றனர். எவ்வொருவன் நல்ல கல்வியைக் கற்றுக் கொள்கிறாரோ அவன் தன்னுடைய தரத்தையும், வாழ்க்கை முறையையும் மேம்படுத்திக் கொள்வான். அவன் தன்னுடைய ஆளுமையை மேம்படுத்தி தான் பெற்றுக்கொண்ட அறிவின் உச்சப்பயன்பாட்டை பெற்று, தன் அடைவையும் காட்டிக் கொண்டு கற்றபடி நடந்து கொள்ள முடியும். கல்வியே வாழ்வதற்கு வேண்டிய தொழிலையும் தேடிக்கொடுக்கும்.

தொழிலுக்கு அடிப்படையாக அமைவது கல்வியே. தற்காலத்தில் தொழிலை மையமாகக் கொண்டகல்வியையே மனிதன் நாடுகின்றான். தொழில் நுட்பம், மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், கணனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

முறைக்குட்பட்ட, மற்றும் முறைக்காரணக் (Non Formal) கல்வியை கற்க்க வழிகாட்டுவது மட்டுமன்றி உயர் தொழிலையும் வருவாயுடன் கூடிய தொழிலையும் அளித்துவிடுகிறது. கல்வியும், தொழிலும் சேர்ந்து சமுதாய உயர்வை அளித்து விடுகின்றது. நல்ல கல்வியும், நல்ல தொழிலையும் உடையவன் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தை பெறுகிறான். மனிதனுக்கு கல்வியும் தொழிலும் தற்றுணிவை கொடுக்கின்றது. தன்னிலேயே அவன் தனித்து நிற்கும் நிலையை அளிக்கின்றது. வளமாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ள கல்வியும் செல்வமும் உதவுகின்றன.

மனிதன் தன் வாழ்க்கையில் தேட முடியாத சொத்து உடல் உள நலன். கிராமத்தின் நலன் அமைந்துவிட்டால் அவர்களது அமைதியான பண்பாடான வாழ்க்கைக்கு நலன் ஒளியூட்டும். இத்தகைய நலத்தை வாழ்வில் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டும். மாணவன் இளமையில் நலத்துடன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியன் வாழும் வழியைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

கிராமத் தொழிலாளி வாழ்க்கையில் பலதரப்பட்ட நலச் சிக்கல்களை மக்கள் எதிர் நோக்குவது வழக்கம். இது மாணவர்களை கருத்தூன்றிக் கற்று மனப் பதிவு கொண்டு கற்க முடியாத நிலையை தோற்றுவிக்கும். அத்துடன் நிச்சயமற்ற தன்மை, சூழல், அச்சமூட்டும் மனவெளிச்சி, மலேரியா, வயிற்றோட்டம், சொறி, சிரங்கு போன்ற தொற்று நோய்களை ஏற்படுத்திவிடும். அத்துடன் பல் சம்பத்தமான நோய்களையும் ஊட்டச்சத்து, உணவின்மையும் கிராம மாணவர்களின் கருக்தொன்றிய கல்வியைப் பாதித்து விடுகின்றது. இச் சிக்கல்கள் கிராமியக் கல்வியில் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

நாட்டின் மக்கள் தொகையில் 25% ஆரம்பப்பள்ளி மாணவர்கள். கிராம ஆரம்பப் பள்ளியில் 50% பள்ளிகளில் மலசல கூடம், நல்ல குடி நீர் வசதி இல்லை. 30% மாணவர்கள் சத்துணவு இன்றிப் பாதிக்கப்படுகின்றார்கள். 65% மாணவர்கள் பல்முரசு, தோற்பிணிக் கையால்பாதிக்கப்படுகின்றனர். இது இன்றைய இலங்கைக் கல்வி முறையில் காணப்படுகின்றது. இது கிராமத் தொழிலாளர் வர்க்கத்திடையே மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

ஆகவே கிராமப் பாடசாலைகளில் நலத்தை பேணப் பொறுப் பேற்கப்பட வேண்டும். இப்பாடசாலைகள் சூழலுக்கேற்ப நலத்தைப் பேணக்கூடியதாக செயற்பட வேண்டும். சூழலை உருவாக்க கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பாடசாலைகள் முக்கிய கவனத்தை எடுக்கவேண்டும். பாடசாலை நலம் என்பது ஒரு கூட்டு முயற்சியாகும். மாணவர்களை மையமாக வைத்து ஆசிரியர்கள், பெற்றோர்கள், சுகாதாரப் பகுதியினர் ஒத்துழைக்க வேண்டும். மாணவர்க்கு சுகாதாரத்தை ஏற்படுத்தலில், வழங்குதலில் யாவரும் சமாந்திர நிலையில் கூட்டாகப் பொறுப்பேற்றுச் செயற்பட வேண்டும்.

கிராமப் பள்ளிகளில் அடிப்படையிலேயே நலம் பற்றிய விழிப்புணர்ச்சி குறைவாகவே உள்ளது. உதாரணமாக வயிற்றோட்டம் ஏற்படும் போது இளநீர், ஜீவனி போன்ற நீராகாரம் கொடுக்காதோர் பலர். விசர்நாய் கடித்தால் காயத்திற்கு சவர்க்காரம் போட்டு கழுவாதோர் பலர். (இது 50% நோய்தடையை ஏற்படுத்தும்.) இந்த முதலுதவி தெரியாதோர் பலர். இதே போலவே விசக்கடியும். எனவே இவற்றை கிராமப் பாடசாலை மூலம் முதலுதவி வகுப்புக்கள் நடத்தப்பட்டு மாணவர்கட்கும் பெற்றோருக்கும் அறிவூட்டப்பட வேண்டும்.

சத்துணவு பற்றிய அறியாமை, உணவுப்பழக்க வழக்கம், கௌரவம் என்ற காரணிகளால் ஏற்படுகிறது. வறிய கிராமக் கூலிகள் ஊட்டச்சத்துள்ள இலை, உணவு, தாவரம் காய்கறிகள், பழங்கள் எவையென கண்டறிய முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர். சத்துள்ள பழம், பால், முட்டை என்பவற்றை விற்றுப் பாண் வாங்கி உண்கின்றனர். உடலுக்கு ஊட்டச்சத்தையும், வலுவையும் கொடுக்கும் உணவுகளை பெரும்பாலும் உண்பதில்லை.

கல்வி கற்பது நலமாக வாழ்வதற்கே. இக் கல்வியை முறைமைக் (Formal) கல்வி, ஊட்டம் நிலுவைகளால் மட்டுமன்றி முறைசாரா (Non Formal) கல்வியை கிராம மக்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பை உருவாக்க வேண்டும். நல்ல பழக்க வழக்கங்கள், நடை, உடை பாவனைகளைப் பெற்றுக் கொள்வதாக பாடசாலைச் சூழல் மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் இதில் பெரும் பங்கு வகிக்க வேண்டும்.

மாணவர்கட்குக் கல்வி கற்பது தேர்வில் தேர்ச்சி அடைவதற்காக மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகவும் சூழலுக்கேற்ப தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கக் கூடியதாகவும் கிடைக்கும் வசதிகளை பயன்படுத்தி விருத்தி அடையக் கூடிய தொழிற் பயிற்சியுடன் கூடிய கல்வியே அமைய வேண்டும். இதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கல்விச் சமுதாயத்துடன் பொருண்மியமும் இணைந்து திட்டம் வகுத்து செயல்பட வேண்டும். எனவே ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடந்து யோசித்துச் செயல்பட வேண்டும்.

ஆசிரியர்கள் தமது மாணவர்களையும் கிராமச் சூழலையும் இனங் காண வேண்டும். பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தந்ததும் தலை, பல், உடம்பு, உடை முதலியவற்றை குழு மூலமாக பரி சோதனை முறைமைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மாணவர்கள் கண்பார்வை, கேட்டல், தோல் நிலை போன்றவற்றை கூர்ந்து பரி சீலிக்கப்பட வேண்டும். எனவே இதனை பாடசாலை ரீதியாக ஒரு சுகாதாரக் குழுவை அமைத்து அவற்றின் மூலம் பரிசீலிக்கப்பட வேண் டும். எனவே கிராமப் பாடசாலையுடன் சுகாதாரம், மருத்துவத் துறை இணைந்து செயற்பட வேண்டும்.

கல்வித் திணைக்களம் கிராமியப் பாடசாலைகளை புறக்கணிக் கக் கூடாது. பாடசாலை சிறிதாயினும் அதற்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். பின்தங்கிய பிரதேசமாகக் கருதப் படாது, நகரப்பாடசாலை பெறும் அனைத்து வசதி வாய்ப்புக்களும் இவைகட்கு ஏற்படுத்தப்பட வேண்டும். தினமும் வகுப்பறையில் பாடசாலை கழிவுகள் அகற்றப்படல் வேண்டும். பின் தங்கிய பிரதே சமாகக் கருதப்படாது நகரப்பாடசாலை பெறும் அனைத்து வசதி வாய்ப்புக்களும் இவைகட்கு ஏற்படுத்தப்பட வேண்டும். கிணறுகள் அடிக்கடி இறைக்கப்பட்டு குளோரின் இட்டு தூய்மையாக்கப்பட வேண்டும். கிணற்றில் இலைகள் உதிராத படி மூடிப் பாதுகாக்கப்பட வேண்டும். கிணற்றில் இருந்து குழாய் வழி மூலம் மாணவர்கள் நெருக்கமின்றிக் குடி நீர் பெற வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

மலசலகூட வசதிகளைப் பொறுத்தவரை பாடசாலைகளில் ஒழுங்காகப் பேணப்பட வேண்டும். துர் நாற்றம் எடுக்காத விதத் தில் இது அடிக்கடி கழுவித்துப்பரவாக்கப்பட வேண்டும். இது முடியா விட்டால் குறைந்தது சுயசேவைத்திட்டம் மூலமாக மேலும் அமுல் படுத்தப்பட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியரும் பெற்றோரும் கூட்டாக முயன்று மாணவனுக்கு கீழ்ப்படிவு, பயபக்தி, மதிப்பளிப்பு, விவேகம், வீரம் போன்றவற்றை அடிப்படையில் இருந்தே உருவாக்கி நல்ல கல்வியை பெறப் பக்குவப்படுத்தப்பட வேண்டும். மேலும் பெற்றோர் ஆசிரியர்கள் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு கல்வி ஒரு நீண்டகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு என்பதைப் பெற்றோருக்கு விளங்கப்படுத்த வேண்டும். நீண்ட பொறுமையும் காத்திருப்பின் பின்பே கல்வியின் பயனை பெறலாம் என்பதை அவர்களுக்கு புரியக் கூடிய முறையில் எடுத்து ரைக்க வேண்டும். இது ஆசிரியரதும், சமூக நலன் அக்கறையுடையன் நிறுவனங்களினதும், குழுக்கருத்தரங்கு, கலந்துரையாடல் மூலம் அடிக்கடி வலியுறுத்தப்படல் வேண்டும்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், கணிதம், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது பாடங்களுக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் ஒரு 10 நிமிடத்தையேனும் ஒதுக்கி மாணவர் களின் தன்னம்பிக்கை, முயற்சி, இலட்சியம் போன்றவற்றை வளர்க்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் தம்மை ஏற்கனவே தயார்ப்படுத்தி யிருக்க வேண்டும். உயர் நெறிகளை வாழ்ந்து காட்டியவர்களின் உதாரணங்களை விளக்க வேண்டும். உலக வீரர்களின் வரலாறுகள், விளக்கப்பட வேண்டும். தொழிலதிபர்கள் எவ்வாறு விருத்தி அடைந் தார்கள் என்பது விளங்கக் கூடிய வகையில் விளக்கப்பட வேண்டும். மாணவ இளம் உள்ளத்தில் நம்பிக்கை, இலட்சியம், முயற்சி போன் றன வளர்க்கப்பட வேண்டும். தன்னம்பிக்கை சுதந்திர மனோபாவம் வளர்க்கப்பட வேண்டும்.

எனவே கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பன்முக ஆளுமை கொண்டவர்களாக காணப்படல் வேண்டும். இவர் கள் தமது பாடத்துடன் உளவியல், சமூகவியல், தொழில்துறை, சுகாதாரம் போன்றவற்றில் அடிப்படை அறிவை உடையவர்களாகவும் காணப்பட வேண்டும். அல்லது பயிற்றப்பட்ட சேவை மனப்பாங்குடன் இவர்கள் சேவையாற்ற முன்வரும்போதே தொழிலாளக் குழந்தைகள் கல்வி விருத்தியடையும்.

பாடசாலையும், சமூகமும், வீடும் இவ்விடையத்தில் இணைந்து நிறுவனங்களாகச் செயற்பட வேண்டும். பாடசாலை அனுபவம் வீட்டிற்கும், வீட்டு அனுபவம் பாடசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். வகுப்பறைச் சுத்தம் பற்றிக் கூறும் போதே வீட்டுச் சுத்தமும் வலியுறுத்தப்பட வேண்டும். சூழல் சுத்தம் உறுதிப்படுத்தப் பட வேண்டும். இறந்த நாய், கோழி, பூனை போன்றன காணப் பட்டால் அவற்றைத் துர்நாற்றம் வீசவிடாமல் எடுத்துப் புதைக்கும் சேவை மனப்பாங்கு பாடசாலையூடாகவே உருவாக்கப்படல் வேண்டும்.

எனவே மேற்கூறிய கருத்துக்களை வலியுறுத்தக் கூடியதாகவும் அவற்றின் எதிர்கால சுபீட்ச நிலையும் விளக்கக் கூடியதாக மாணவர் களிடையே பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், வரைதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் போன்றவற்றின் மூலம் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலமும், பெற்றோர்தின நிகழ்வுகள் மாணவர்களது வாழ்வு, அபிவிருத்தி தொடர்பானதாக அமைய வேண்டும். ஆசிரியர்கள் பெற்றோர்களை வகுப்பு ரீதியாக அழைத்து கலந்துரையாடல் நிகழ்த்துவது மிகப்பயன் விளைவிக்கும்.

எனவே கிராமக் கல்வியில் தொழிலாளக் குழந்தைகள் மேற்கூறிய பலன்களைப் பெற்றுக் கொள்ள அவர்கள் பெற்றோர் மீது பொருளாதாரச் சுமை ஏற்படக் கூடாது. எனவே மாணவர்கட்கான அனைத்து வசதிகளையும் (பெருமளவில்) கிராமிய முன்னேற்றச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், இணைந்து நிறைவேற்ற முன்வர வேண்டும். அப்போது மாணவர்கள் இடைவிலகல் குறைக்கப்பட்டு அவர்கள் தொடர்ச்சியான கல்வி ஓரளவாயினும் உறுதி செய்யப்படும்.

தொழில் நுட்ப வளர்ச்சியானது பாடசாலையூடாகவே ஏற்படுத்தப்பட வேண்டும். ''பேர்னாட் ரசல்'' (Bernard Russell) கூறுவது போல் தொழில் நுட்ப வளர்ச்சி மனித சமுதாயம் முழுவதற்கும் நிச்சயம் பயனளிக்கின்றது. ஆனால் சமுதாயத்தில் எந்தப் பிரிவு சார்ந்தவர்கட்கு பயனளிக்கிறது என்பது குறிப்பிட்ட அந்த சமுதாயக் கட்டமைப்பை பொறுத்து அமைகிறது என்றார்.

சமுதாயம் முழுவதும் முன்னேற்றம் அடைய மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் நடவடிக்கைகள் எல்லாம் வசதிகள் கொண்டதாக உயர் வர்க்கத்தினர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள உதவும், சமூகப் பொருளாதார சக்திகள் யாவை? பிரத்தியேகமாக ஏழைகட்கு என மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் கூட ஏழைகள் தாங்கள் பயன் படுத்திக்கொள்ள முடியாத அளவிற்கு தடுத்து நிறுத்தும் சமூகப் பொருளாதார சக்திகள் யாவை? இவற்றுக்கான விளக்கத்தைக் காண உண்மையான கிராம மறுமலர்ச்சியை காணலாம்.

## உசாத்துணைகள்


1. J. B. Chitambar — 'Introductory Rural Sociology', (A Synopsis of Concepts and Principles) Wiley Eastern Limited India : 1973.
2. M. C. Whitby and K. G. Willis — 'Rural Resource Development', Methuen & Co. ltd, 1978.
3. கோரான் ஜூர் ஃபெல்ட் ஸ்டஃ பான் லிண்ட்பாக் - வறுமையின் பின்னணி (ஒரு தமிழ் கிராமத்தின் சமூக உருவாக்கம்) 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிறைவேட் லிமிடெட் 1991'.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியாவில் நகரச்சேரிகள்
# Urban Slums in South Asia

வரதகௌரி வரதராஜப்பெருமாள்
B. A. ( Hons )

நகரமயமாதல் என்ற எண்ணக்கரு கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்து உருவாகியது. இது ஒரு முறைமையான வளர்ச்சியைக் குறிக்கின்றது. சமூகவியளாளரான கின்ஸ்லி டேவிஸ் (Kinsly Davis). 1900 ஆம் ஆண்டுக்கு முன்பு நகரமயமாதல் என்ற பிரச்சனை மேலைநாடுகளில் எழும்பவில்லை. முதலாம் உலகயுத்தத்தைத் தொடர்ந்து 1920ஆம் ஆண்டுக்குப் பின்பே திடீர்நகரங்கள் பெருகின எனக் கூறுவர்- நகரமயமாதல், நவீன தொழில்மயமாதல் என்பன சர்வதேசரீதியான சமூகமாற்றங்களை ஏற்படுத்துகிற காரணிகளாகவும் அமைகின்றன. இவற்றின் பக்க விளைவுகளே நகரசேரிகளாகும். நகரங்கள் உருவாகும் போதே சமூகநன்மைகளும், சமூக எதிர்ச்செயல்களும் உருவாகின்றன. நகரச்சேரிகள் நகரசமூக மாற்றத்தின் எதிர் விளைவுகளை பிரதிபலிப்பவை.

நகரச்சேரிகள் உலகரீதியான தோற்றப்பாடாகவும், சமூகப் பிரச்சனையாகவும் உள்ளன. இவை கைவிடப்பட்ட கட்டங்களிலும் வீதி ஓரங்களிலும் தற்காலிகமான இருப்பிடங்களாக சட்டரீதியற்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பன. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வாறு திட்டமிடப்படாத சேரிகளின் உருவாக்கமானது 40%மாக அமைய, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் திட்டமிடப்படாத சேரிகள் உருவாக்கமானது 61% மாக காணப்படுகின்றது. இந்நிலையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் தென்னாசிய நாடுகளை ஒப்பிடும்போது, நகரச்சனத்தொகை வளர்ச்சி வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றமை நகரச்சமூகவியலின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் மேலும் உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

நகரமயமாதல் செயல்முறை, நகர அமைப்பினுள் நகர வறுமையை தொடர்ச்சியாக வைத்திருப்பதுடன், சமூக சூத்தையையும் (Social decay) கொண்டுவரும். இதனால் நகரச்சேரிகளை '' நகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பின் புற்றுநோயாக '' விளக்குவர். தென்னாசியாவில் மூன்றில் ஒரு பகுதியினர் சேரிகளில் வசிக்கின்றார்கள். பொருளாதார ரீதியில் பின்தங்கிய சனத்தொகை கூடிய நாடுகளில் நகரச்சேரிகள் பாரிய சமூகப் பிரச்சனைகளாக உள்ளன.

நகரச் சேரிகள் பின்வரும் காரணிகளாகி உருவாக்கப்படுகின்றன.

i) நவீன தொழில்மயமாதல் செயல் முறையில் கிராமிய சமூகத்தில் பொருளாதார ரீதியில் வலுக்குறைந்தவர்கள் நகரத்தை நோக்கி அசைதல்.

ii) நகர நிலம் மிகவும் விலை உயர்ந்தது, நகரப்பரப்பில் வீட்டு வசதிகள் கிடைக்காமை.

iii) தொழில் ரீதியான சுதந்திரம்.

iv) வேலையின்மை, வறுமை, சனத்தொகைப் பெருக்கம்.

v) மிகவும் குறைந்த ஊதியத்துடனான தொழில்களில் ஈடுபடுதல்.

vi) போக்குவரத்துச் செலவு இல்லை.

vii) கிராமத்திலும் பார்க்க நகரத்தில் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளலாம் என்ற அபிலாசை.

viii) சுயநல ஆர்வங்கள்.

ix) சேரி உளப்பாங்கு, சமூகவிரோத செயல்களை புரிந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு.

x) தேசிய அரசுகளின் அக்கறையின்மை.

சமூக பௌதிக ரீதியான அம்சங்களை நோக்கும்போது; சுகாதார மற்ற இருப்பிடங்கள், மலசலகூட வசதியின்மை, போசாக்கின்மை, ஓர் அறையில் அல்லது குடிசையில் இரண்டு அல்லது மூன்று தலைமுறையினர் வாழ்தல், குடிநீர்ப்பிரச்சினை, தொற்று நோய்கள், மது பாவனை, போதைப்பொருள் பாவனை, சூதாட்டம், வன்முறை, பாலிய நெறிபிறழ்வுகள், விபச்சாரம், போக்குவரத்திற்கு பாரிய இடையூறாக நடத்தல், கூடிய பாடசாலை இடைவிலகல், சிறுவர் சிறுமியர் தொழிலில் ஈடுபடுதல், கைவிடுதல், ஒழுங்கீனமான பாலியல் வாழ்க்கை என்பன காணப்படும். இவ்வாழ்க்கை முறை ஒரு நியதியாகிவிட்டது. இவ்வாழ்க்கைமுறை பொருள்சார், பொருள்சாரா அம்சங்களை தாக்குகின்றது. இதனால் நகரங்களில் சமூக எதிர் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படும். இவ்வழி சமூகமயமாக்கப்படும் பிள்ளைகளும் அதிகரித்துக் கொண்டே செல்வர், இதனால் சேரிகளை சமூக ஒழுங்கமைவின்மையின் பரப்புகளாக விளங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிச் சமூக அமைப்பில் புதிதாக வருவோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டே செல்வதனால், ஒரு குடும்பம், நண்பர்கள், கிராமத்தவர்கள், உறவினர்களைக் கொண்டதாக அமைந்திருக்கலாம். உதாரணமாக புதுடில்லியில் 75% மான தொழிலாளர்கள், உறவினர்கள், நண்பர்கள், கிராமத்தவர்களுடன் வாழ்கின்றார்கள். மேலும் இங்குள்ள சேரிகளில் 90% மானவை தனிக்குடும்பங்ளாக அவதானிக்கப்பட்ட போதிலும் நேர்காணலுக்குட்படுத்திய பெண்களில் 50% திற்கு மேற்பட்டோர் கூட்டுக்குடும்ப எண்ணத்தையே கொண்டிருந்தனர். குடும்பத்தில் பெரும்பாலும் கணவன், மனைவி தொழிலுக்காக வெளியே செல்வதனால் பிள்ளைகளை பராமரிப்பதற்கான தேவை, கூட்டுக்குடும்ப அமைப்பு சிந்தனையை பிரதிபலிக்கிறது. இங்கு 65% மான பெண்கள் தொழில் செய்கிறார்கள். "சேரி வாழ்வில் பெண்களும் சிறுவர்களுமே பெரிதும் பாதிப்படைகிறார்கள். அவர்களுடைய சீரான சமூக மயமாக்கலுக்கும், ஆளுமை விருத்திக்கும் சேரி வாழ்க்கை தடையாக உள்ளது" என இந்தியச் சமூகவியலாளர் கே. பி. போதன் (K. P. Pothen) குறிப்பிடுவார்.

சேரி வாழ்வோரின் மனப்பாங்குகள் ஏனைய நகரப்பகுதிகளுடன் ஒப்பிடும்போது அசாதாரணமானவை. ஆனால், அவர்களுக்கு சாதாரணமானவையாகும். இவர்களது மனப்பாங்குகள் சமூக நிறுவனங்களின் நிலைப்புத்தன்மையைப் பாதிக்கும். நகரச் சமூகவியலாளர்களான றொபேட் பாக் ஏர்னஸ்ற் பேர்கஸ் (Robert Park and Earnest Burgess) என்பவர்கள் சேரிகளை சமூக பௌதீக சீர்கேடுகளினது பரப்புக்களாக விளங்குவர்.

தென்னாசிய நாடுகளின் சமூகத் தோற்றப்பாடான சாதி அமைப்பின் கீழ்நிலையிலிருந்து வந்த ஒதுக்கப்பட்ட சாதியினர், பழங்குடிகள் (Scheduled castes and tribes) என்பவர்களே தொழில் சார் குழுக்களாக உள்ளனர். சிறுவியாபாரிகள், நகர் சுத்திகரிப்பாளர், மூடை காவுவோர், பாதைவழிச் சிறுகடை சொந்தக்காரர், வீதிகளில் சென்று வியாபாரம் செய்வோர், (Pedlars) ஓரளவு திறனுடைய தொழில் செய்வோர் (Semiskilled Workers) போன்றவர்களாக காணப்படுவர். இவர்கள் குறைந்த வருமானமுடைய, வர்க்க ரீதியிலும் கீழ்நிலையிலிருப்பவர்கள். இவர்கள், நகர சமூக அடுக்கமைவிலிருந்து, அந்நியப்படுத்தப்பட்டவர்களாக பெரிதும் கர்மவினை கோட்பாட்டினை நம்புபவர்களாக உள்ளனர் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களிடையே சமூகவியல் ரீதியான குழு உணர்வு இருப்பதனால் தமக்குள்ளே தலைமைத்துவ குழு உறுதிப்பாட்டை பேணுவர். அத்துடன் அரசியற்கட்சிகளுக்கான வாக்களிப்பு வங்கிகளாக சேரிகள் காணப்படுவதனால் அரசியல் ஆதரவு (Political Patronage) கிடைப்பதுடன் அரசியல் தலைவர்களின் செல்வாக்கினால் தமது இருப்பிடங்களையும் நிலைப்படுத்திக்கொள்வர். நிர்வாகத்தினூடாக நகர நன்மைகளை பெற்றுக்கொண்டுவிடுவர். அரசியல்ஆதரவு, குழு உணர்வு என்பன சமூக பாதுகாப்பை வழங்குகின்றன. எனவே இவர்கள் அரசாங்க நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெரும் சவாலாக விளங்குவர். இவர்களது இருப்பிடங்கள் காலப்போக்கில் சட்டப்படி அங்கீகாரமாகிறது. இதனால் நகரச்சேரிகள் ஒன்றுகூடும் போது பாரிய நகரமாக (Megacity) மாறுகிறது.

தென்னாசியாவில் நகரவளர்ச்சி வீதம் அதிகரித்துக் காணப்படுவதற்கு, தென்னாசிய தோற்றப்பாடான சாதி அமைப்பானது ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் ஊடுருவி இருப்பது, கிராமங்களில் சமூகரீதியில் ஒதுக்கல், பாரபட்சம் காட்டுதல் என்பவற்றுடன் வாழ்பவர்கள், நகரங்கள் நோக்கி இடம்பெயர்வதனால் தொழில் ரீதியான சுதந்திரத்தினை பெறலாம். சமூக அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளலாம் என்ற அபிலாசையும் சமூக கெடுபிடிகளிலிருந்து விடுபடலாம் என்ற உளப்பாங்கும் கூடிய செல்வாக்கை செலுத்துகிறன. இவர்களை கிராமிய சூழல் செல்வாக்கினுக்கு உட்படுத்தினால் அதிகளவில் இடம்பெயர நியாயமில்லை. இவர்கள் நகரம் நோக்கி இடம்பெயர்ந்தாலும் "நகரவறுமை" (Urban Poor) என்ற நிலைமையிலேயே வாழ்கின்றனர். அவர்களிடையே வறுமை இல்லை என்ற உளப்பாங்கு உள்ளது. இந்நிலையில்தான் சேரிவாழ்வோரிடையே நகரச் சூழலின் செல்வாக்கு குறைவாக உள்ளது. இதனால்போலும் இன்று கிராமிய அபிவிருத்தியின் முக்கியத்துவம் மீள உணரப்படுகிறது.

இந்நிலையில், சேரிவாழ்வோரின் முன்னேற்றத்திற்காக, கல்விக்கான விழிப்புணர்ச்சியை உருவாக்குவதன் மூலம் சமூக அசைவினை ஏற்படுத்தமுடியும் எனலாம். சீரான சமூகமயமாக்கலுக்கு தேவையான கல்வி, சுகாதார மருத்துவ, இருப்பிட வசதிகளை செய்தலும், திட்டமிட்ட நகர மயமாக்கத்தினை வழிப்படுத்தலும் அவசியம். முதியோர் கல்வி, குழந்தைகளுக்கான நாளாந்த பராமரிப்புச் சேவைகள், சிறுவர்களுக்கான சமூகநல ஏற்பாடுகளை செய்தல் என்பவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையே பங்குபற்றச் செய்வதன் மூலம் மேம்படுத்தலாம். தேசிய அரசுகளினதும், சமூகத்தினதும் பொறுப்புணர்வு மிகவும் அவசியமானதாகும். தென்னாசிய நாடுகள் பலவற்றினதும் அரசியல் யாப்புக்களுக்கும், அரசியல் யாப்புக்களிலே காணப்படுகிற இலட்சிய உயர் நோக்கங்களுக்கும், அன்றாட வாழ்க்கைக்கும் இடையே காணப்படுகின்ற முரண்பாடுகள், சேரி ஒழிப்புத் திட்டங்களை வெற்றியடையச் செய்யும் என நம்புதலை கடின மாக்குவன. சமத்துவமும் சுதந்திரமும், சகோதரத்துவமும் ஏட்டளவிலே தான்; நடைமுறையில் பாரிய வேறுபாடுகளைக் காண்கிறோம். அர்ப்பணிப்புடனான முறைமை சார்ந்த நகர அபிவிருத்திக்கான நீண்டகால அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் சேரி ஒழிப்பு சாத்தியமாகலாம்.

**உசாத்துணைகள்:**


R. Jayaswal – "Psyche of Slum Dewellers Some Emerging Patterns" Man in India 1993: 73 (2) (Pa: 183-119)

Singh. S. D. & K. P. Pothen – Slum Children of India, Deep and Deep Publication. New Delhi 1982 (Pa: 23-27 13.16)

R. C. Sharma – South as an Urban Experience. Criterion Publication. New Delhi-1100 1988


---

கடற்கரையில் உடைந்து கிடக்கும் மரக்கலங்கள் போன்று காலமென்னும் அலைகளால் சிதறடிக்கப்பட்ட மனிதர்களை நாம் பார்க்கின்றோம். அவர்கள் சிறந்த திறமைசாலிகளாகத்தான் இருந்தார்கள். ஆயினும் துணிவும், தன்னம்பிக்கையும் ஒரு முடிவுக்கு வரும் சக்தியும் இல்லாததினால் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை.

- பாஸ்டர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனப் பிரச்சனை Dowry Problem

சுஜாதா தங்கராசா (B. A.)

தனியுடமைப் பொருளாதார அமைப்பின் தோற்றத்தோடு உருவாகிய பெண்ணடிமை முறையைப் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலை நிறுத்திப் பாதுகாக்க உதவிவரும், பொருளாதார கலாசார நடைமுறைகளுள் சீதனமுறையும் ஒன்று. சமுதாய உழைப்பிலிருந்து பெண்கள் பிரிக்கப்பட்டு, சொத்துக்களோடு சொத்தாக, வீட்டு அடிமைகளாக் கப்பட்ட நிலப்பிரபுத்துவ அமைப்பில் இது பெருவழக்காகியது. யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களைப் பல பிரச்சனைகளுக்கு, பல முரண் நிலைகளுக்கு முகம் கொடுக்க வைக்கும் "சீதனம் கொடுத்தல்" என்ற வழமையானது மிகவும் சிக்கலுக்குரிய ஒரு சமூக நடைமுறையாக அமைந்து விளங்குவதை உணர முடிகின்றது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இச்சீதன வழமையானது, திருமணச் செயற்பாடுகளின் போது பெற்றோரால் மணப்பெண்ணுக்கு அளிக்கப்படும் சொத்துடமையாகவே தோற்றம் தருகின்றது. ஆனால், இன்னும் சிறிது ஊன்றிக் கவனிக்கும் போது தான், அதன் உள்ளார்ந்த சிக்கல்கள் தெரிய வரும். அதாவது, சீதனமுறைமை என்ற இப்பிரச்சனையினது பல பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அடேல் ஆன் கூறுவது போல, பல்வேறு சமூகப் பண்பாட்டு உறவுகளும், பிரச்சனைகளும் பின்னிப் பிணைந்த மிகவும் சிக்கலான வழக்கு முறையாகவே இணைக்கக் காணலாம். சமூக கட்டமைப்பில் நடப்பியலாகவுள்ள சீதனமுறையானது, வரலாற்றுப் பழமையில் ஆழமாக வேர்பதித்து நிற்கின்றது என்பதையும், இலகுவில் வளைந்து கொடாத தன்மையைக் கொண்டது என்பதையும் காணலாம். (Adele Ann, 1994) புறவயமான ஒரு சமூகப் பண்பாட்டு மெய்மை என்பதால், சீதன முறைமையை ஒரு சமூகப்பிரச்சனை என்ற கண்ணோட்டத்தில் நோக்குவது பொருந்தும்.

இம்முறைமை அன்றுதொட்டு ஆளும்வர்க்கத்தினரால் பேணப்பட்டு வந்ததேயன்றி, அடிமை குடுமைகளாக இருந்த உழைக்கும் மக்கள் மத்தியில் பெரிதும் பின்பற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநூறு ஆண்டுகளாக யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பிரத்தியேகமாக நிலவிவந்த சொத்துடமை உறவுகளில் சீதன வழக்குமையமான ஒரு இடத்தை வகித்துள்ளது. திருமணத்தின் போது பெண்களுக்குத் தாய்வழிச் சொத்தைப் பகிர்ந்தளிப்பது பற்றி தேசவழமைச் சட்டம் கூறுகின்றது. சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த திருமண நிறுவனத்துடன் இணைபிரியாதவாறு முதுசம், சீதனம், தேடிய தேட்டம் என்ற மூன்று ரக சொத்துடமைகளைப் பராதீனப்படுத்தும் முறைபற்றியும் தேசவழமை பின்வருமாறு விளக்குகின்றது.

"ஒரு புதல்வியோ/ புதல்விகளோ திருமணஞ் செய்யும் போது அவர்கள் தாயின் சொத்திலிருந்தே சீதனத்தை/ வரதட்சணையைப் பெற்றுக் கொள்கின்றனர். இதன் அடிப்படையில் வழமையாக எப்போதும் மனைவியின் சொத்து பெண் பிள்ளைகளைச் சென்றடையும். கணவனின் சொத்து ஆண்வாரிசுகளிடம் சென்றடையும்."

"பண்டைக் காலத்திலிருந்தே திருமணம் வாயிலாக கணவன், மனைவியால் கொண்டுவரப்பட்டு ஒன்றுசேரும் சகல உடமைகளும் பிரித்து வகைப்படுத்தப்பட்டன. கணவனால் கொண்டுவரப்படும் ஆதனத்தை முதுசம்/ சொத்து என்ற பிரிவாலும், மனைவியால் கொண்டுவரப்படுவதை சீதனம்/ வரதட்சணை என்ற பிரிவாலும், திருமணம் நிலைத்திருக்கும் பொழுது பெறப்படும் இலாபங்களைத் தேடிய தேட்டம்/ சம்பாதனம் என்ற பிரிவிலும் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது"

மூன்றாம் உலகநாடுகளில் - குறிப்பாக ஆசியப் பெண்கள் மத்தியில் ஆணாதிக்க, பொருளியல் அடக்குமுறை அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட கலாசார நடைமுறைகளைப் பொறுமையோடு ஏற்றுச் சகித்து வாழும் நிலை இன்றும் தொடர்கின்றது. பெண் ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்களுள் சீதனமுறை ஒன்றே குடும்ப நிறுவனத்தின் சகல நடிப்பங்குகளையும் பாதித்து வருகின்றது. மண வயதை எட்டியும் மணமாகாத பெண்களைப் போலவே, அவர்களின் சீதனத்துக்காக மணமாகாது உழைக்கும் ஆண்களும் பெருமளவில் உள்ளனர்.

"ஆறு பெண் சகோதரர்களின் அண்ணன் இவர். மரபுவழிக் கலைக் குடும்பம். அன்றாடம் உழைத்துழைத்து தன் ஆறு சகோதரிகளுக்கும் வாழ்வு அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் தனக்கென ஒரு வாழ்வைத் தேட முடியவில்லை. இன்று வாழ்வு கண்ட ஒரு சகோதரியின் நிழலுமின்றி முதியோர் இல்லத்தில் துயரமாகக் கழிகிறது இந்த அண்ணனின் முதுமை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— கைதடி சாந்திநிலைய ஆய்வுத் தரிசனம் அது. (சண்முகலிங்கன், 1995) சீதன முறைமையால் முதலாளித்துவப் போட்டிச் சந்தையில் மனிதன் படைத்த பணத்துக்கு மனிதனே விலைபோகும் பரிதாப நிலையும் ஏற்படுகின்றது. அவனால் படைக்கப்பட்ட பணம் அவனையே அளக்கும் அளவுகோலாக மாறுகின்றது.

சீதன முறைமையைப் பேண விரும்புவோர் ஒரு புதிய குடும்பத்தின் பொருளாதார அடித்தளமாகப் பெற்றோரால் விரும்பி அளிக்கப்படும் அன்பளிப்பாக இதனைக் கொள்ள முனைகின்றனர். இரு பகுதிப் பெற்றோரும் இணைந்து அந்த அடித்தளத்தை இடுவதை விடுத்து பெண்ணின் பெற்றோர்கள் மட்டுமே இதனைச் செய்ய வேண்டும் என்பது ஆணாதிக்க சமூகத்தின் அப்பட்டமான ஒரு நடைமுறையாகும்.

பிள்ளைகளின் நல்வாழ்விற்குச் சீதனம் என்பதைவிட போலி அந்தஸ்தையும், கௌரவத்தையும் வளர்க்கவே சீதனமுறை பயன்படுகின்றது. உழைப்பாளி, வர்த்தகர், உத்தியோகத்தர் என்ற வேறுபாடுகளுக்கு ஏற்ப ஏற்ற இறக்கமான விலைப்பட்டியல் இங்கும் உண்டு. அரச ஒடுக்கு முறையில் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவு, இளைஞர் தலைமுறை ஒன்றின் பெருமளவிலான நாடுபெயர்வு என்பன சீதனக் கொடுப்பனவுகளில் ''டொனேசன்'' என்ற ஒரு புதிய அம்சத்தைத் தோற்றுவித்துள்ளன. சீதனத்தோடு இணைந்த பிரச்சினையின் இன்னொரு பரிமாணம் இது.

சமூக உளவியல் ரீதியாக நோக்கும் போது தனிக்குடும்ப நிறுவனத்தின் அந்தஸ்த்தை உயர்த்திக் கொள்ளும் நோக்கில் பெண்களின் உளப்பாங்கு இச் சீதன முறைமையை அங்கீகரிப்பதாக அமைந்துள்ளது. படித்த பெண்கள்/ ஆண்கள் மத்தியிலே கூட இப்பழமைவாதக் கருத்துக்களுக்கு எதிரான உணர்வலைகள் இன்றும் அதிகம் எழவில்லை.

உலகெங்கும் உள்ளது போல் இங்கும் பெண்கள் புரியும் வீட்டு வேலையின் பெறுமானம் கருத்தில் கொள்ளப் படுவதில்லை. பணத்தின் மேலுள்ள மோகம், இதனை உணர்ந்தும் உணராத நிலைக்கு சமூகத்தைத் தள்ளிவிட்டு, சீதனம் என்ற நெருப்பிற்கு எண்ணெய் வார்க்கத் தூண்டுகிறது. நமது திருமண முறைகளில் நாம் சிறப்பித்துப் பேசிக் கொள்ளும் ''மன இணைவு'' ''மன ஒட்டல்'' என்ற அம்சங்களைவிட '' பண இசைவு '' என்ற நிலைமையே மேலோங்கி நிற்கக் காணலாம். (பரராஜசிங்கம் & சண்முகலிங்கன், 1988)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாரிய ஒரு சமூகப் பிரச்சனையாக விளங்கும் சீதன முறைமையை ஒழிப்பதற்கு பரந்துபட்ட சமூகத்தில் இருபாலாரின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சீதன முறையைப் பேண விரும்புபவர்களும், அதனால் பாதிப்படையாதவர்களும் சமூகத்தின் மன மாற்றத்தைப் பற்றியே உரக்கப் பேசுவர். இவர்கள் கூறுவது போல தானாகவோ / பிரச்சாரத்தாலோ மனமாற்றம் ஏற்படுவதில்லை. போராட்டத்துக்கூடாகவே பெரும்பாலான மக்களின் மனங்கள் மாற்றமடைவதை வரலாற்று அனுபவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால் அத்தகைய மாற்றத்திற்கான போராட்டம் சடுதியாக ஏற்படாது. சரிபாதித் தொகையினரான இளம்தலைமுறையினரின் பெண்கள் ஒடுக்குமுறைக்கெதிரான விழிப்புணர்வின் நகர்வே முன்நிபந்தனையாகின்றது.

சட்டத்தினால் இதனைப் பூரணமாக ஒழிக்க முடியாவிட்டாலும் ஓரளவேனும் குறைக்க முடியும். இந்தவகையில் அமுலுக்கு வந்த மணக்கொடைத் தடைச்சட்டம் அர்த்தமிழந்து போனது கவலைக்குரியது. சீதன ஒழிப்பு தொடர்பான சீர்திருத்த அமைப்புக்கள், இன்றைய எம் தேவை.

இளம் தலைமுறையினர் உணர்வு பூர்வமாகச் செயற்பட்டால் ஓரளவேனும் இதன் பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

## உசாத் துணைகள்


1 — Adele Anne — 'Unbroken Chains', 1993.

2 — வித்யா — 'சீதனமும், பெண்ணடிமையும்', தாயகம் தேசிய கலை, இலக்கியப் பேரவை, 1994 (ஆவணி, புரட்டாதி)

3 — பரராஜசிங்கம் எஸ். கே. — 'இதயரஞ்சனி, சமூக பண்பாட்டுக் சண்முகலிங்கன் என். கோலங்கள்'. காந்தளகம், 834, அண்ணாமலை, சென்னை.

4 — சண்முகலிங்கன் என். — 'முதுமையில் தனிமை'–நான்-இதழ்-1995




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவைகள் பிரச்சினை

## —ஒரு சமூகவியல் நோக்கு

# Widow's Problem

## —A Sociological Approach

பி. குயின் ஜெயமேரி

கணவன் இறந்தவுடன் சமூகத்தின் ஒரு அங்கமான பெண்கள் 'விதவைகள்' என்ற மற்றுமொரு பகுதிக்குள் சேர்க்கப்பட்டுவிடுகிறார்கள். விதவை எனும் சொல் மிகவும் காத்திரமானது. பெண் விரும்பியோ, விரும்பாமலோ இதனை ஏற்கவேண்டியிருக்கிறது.

> "கணவன் இறந்து போதல் என்பது இயற்கையிலே ஏற்பட்டுவிடுகின்ற ஒரு விபத்து. இதற்கு எந்த விதத்தில் பெண் காரணமாவாள்? ஒரு பெண் எதற்காக விதவையாக இருக்கவேண்டுமென்பதற்கு இதுவரை யாராவது காரணம் சொன்னார்களா?" என்றார் ஈ. வே. ரா. பெரியார்.

ஒரு ஆண் இறந்ததற்காக உயிரோடு இருக்கின்ற பெண் எதிர்கொள்கின்ற உளவியல் சிக்கலைவிட, சமூக மட்டத்தில் எதிர் நோக்கும் புறவயமான பிரச்சினைகளே பலவாகும். இதற்கு சமூகத்தில் நிலவுகின்ற ஆண் — பெண் என்ற பாலின வேறுபாடே பெருமளவிற்கு தூண்டுகோலாக அமைந்துவிடுகிறது.

சமூகத்தில் ஆண்— பெண் என்பது பிறப்பால் பெறப்பட்டது. சமூகத்தை சமூகமாக இயங்க வைக்கும் செயற்பாட்டில் தனிநபர் ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும் பங்களிப்பு பிறப்பிலேயே ஏற்பட்டுவிடுகிறது. ஆண்— பெண் வேறுபாடு என்ற இந்த அமைப்பில் அங்கத்துவம் தவிர்க்க முடியாதது. சந்தேகமற்ற விதிகளின்படி இது விபரிக்கப்பட்டுள்ளது. மாறுவேடம் போடும் அங்கத்துவத்திற்கு இங்கு இடமில்லை. பிறப்பினால் பெறப்பட்ட சமூகப் பங்கிலே அசௌகரியங்களை உணர்பவர்களுக்கு எதுவித மாற்று முறைகளும் இல்லை. ஆண்—பெண் பாகுபாட்டில் சமூகப் பங்கு எவை எவை என ஒதுக்கப்பட்டுள்ளமை, இப்பங்களிப்பை இலம்காண எடுக்கப்பட்ட முறைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைச் சமூகத்தில் நிலையாக ஆக்கிக் கொள்ள எடுக்கப்பட்ட முறைகள் என்பன ஆண்— பெண் பாகுபாடு எனும் அம்சங்களின் படிநிலை அமைப்பின் நிலைப்பாட்டைக் காட்ட உதவுகிறது. இந்த உயிரியல் வேறுபாடு சமூக, பொருளாதார முறைகளில் வேறுபாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது ஆண்களுக்கு சுதந்திரமாக நடமாட உரிமையும், சுய ஆதிக்க உரிமையும் இருக்கும்போது, பெண்களுக்கு ஒதுங்கி வாழும் நிலையும், தங்கிவாழும் நிலை, சுயசிந்தனையின் மையும் இன்றைய சமூக நிலைகளாக உள்ளன. மாக்கிறெட் மீட் முழுமையான வெளிக்கள ஆய்வை அடிப்படையாகவைத்து நியூகினி யாவின் வேறுபட்ட கலாசாரத்தில் மேற்கொண்ட 'ஆண் — பெண் மனோபாவம்' என்ற நூலில் ஆண்— பெண் பாகுபாடு விதிவசமா னது என்ற கட்டுக்கதையை உறுதியாக ஆட்சேபித்துள்ளார். முழு மையாக இல்லாவிட்டாலும் ஆளுமைக்குரிய விசேட பண்புகளிற் பல அதாவது ஆண் அல்லது பெண் என அழைக்கப்படுவது உடை, பழக்க வழக்கங்கள், மற்றும் ஒவ்வொரு பாலினருக்கும் அக்காலகட்டத்தில் சமூகத்தினால் வழங்கப்பட்ட தலைமுக்காடு, ஆணங்கி என்பன மேலோட்டமாக ஆண்— பெண் பாலாருக்கு பால் அடிப்படையில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டவையாக உள்ளன என்று கூறுகின்றார் அவர்". எவ்வாறாயினும் எந்தவொரு கலாசார அமைப்புக்குள்ளும் ஆண் — பெண் பலரிடம் காணப்படும் மையப்பண்புகள் இயற்கை யானவையாகவும், இயற்கையான விளைவுகளைக் கொண்டுள்ளவை யாகவும் கணிக்கப்படுகின்றன. சாதி போன்ற ஏனைய சமூக வடி வங்களைவிட ஆண்— பெண் பாகுபாடே ஒழுக்கம், உரிமை என்ப வற்றை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணியாகும். இவ்வேறுபாடு மக்களிடையே உரிமைகளையும், வாய்ப்புக்களையும் சமனற்ற முறை யில் கொண்டிருப்பதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றது. பெண் என்ற காரணத்திற்காக அவளுக்கு ஆணைக்காட்டிலும் குறைந் பட்ச உரிமைகளும், வசதிகளும் வழங்கப்பட வேண்டுமென்பதற்கு அவளின் உடலமைப்பில் குறையேதுமில்லையென்பது தர்க்கரீதியான தும், அறிவியல் ரீதியானதுமாகும். ஆனால் பெண்ணினது பின்தங் கிய நிலையை, உடலமைப்பை வைத்தே நியாயப்படுத்தப்படுகிறது. ஏதோ காரணத்திற்காக வரலாற்றில் நிலைகொள்ளச் செய் யப்பட்ட இந்த வேறுபாடு தொடர்ந்து செயற்படுகின்றது. பாலியல் பிரிவுமுறை ஒரு முறைநிலை கொண்டதால் அதன் தாக்கத்தை விரி வுபடுத்தி சமூகத்தின் ஏனைய ஒடுக்கு முறைகளின் சேர்க்கைக்கு ஒரு களத்தை அமைத்துக் கொள்கிறது. பெண்களுக் கெதிரான பல்வேறு பட்ட அடக்குமுறைகளின் சங்கமத்திற்கு இடமளிப்பதாக அமைகின் றது. இவை சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலும், ஸ்தாபனங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழையோடியுள்ளது. கணவன் இறந்த பின்னர் பெண்ணொருத்தி பல்வேறு வழிகளிலும் ஒதுக்கப்படுவதானது ஆணினுடைய இவ்வுலக அத்தியாயம் முடிந்த பிறகும் அவனுக்கு கொடுக்கப்படும் முக்கியத்து வத்தையும், பால் வேறுபாட்டின் உச்ச நிலையையுமே காட்டுவதாக அமைகிறது. இவ்வாறாக பால் வேறுபாடானது எப்படியான வகை களில் கணவன்மார்களை இழந்த பெண்களை பாகுபடுத்துகின்றது என்பதை ஆராய்ந்தால்......

தமிழர்களின் சமூக வாழ்வில் உள்ளூர ஊறி உறைந்து காணப் படும் பழமைவாதம், இனம், மொழித்தொன்மை, பாரம்பரிய கலா சாரம், பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற பல் வேறு பேர்களிலும், போர்வையிலும் இன்றுவரை கட்டிக்காக்கப்பட்டு வருகின்றது. தமிழர் பழமைவாதத்தின் அம்சங்களை மிக எளிதில் அடையாளம் காண்பதற்குரிய தளமாக செயற்படுவது தமிழர் கலா சார முறையாகும். பிறப்பு — திருமணம் — இறப்பு போன்ற பிர தான சடங்குகளிலும் ஆக்க முயற்சிகளிலும் — நாள் — நட்சத்திரம் — சகுனம் — சாஸ்திரம் போன்ற மூடநம்பிக்கைகளை சாதாரண அன்றாட கருமங்களிலும் கடைப்பிடிப்பதனை மதக் கலாச்சார முத் திரைகள் பவிச்சிட்டு நிற்கின்றன. மனித நேயம், மனச்சாட்சி, மனி தர்களின் வாழ்வியற் கடமை என்பவற்றுக்கு மேலாக பழமைவாய்ந்த வழக்காறுகள் என்பதற்காக மட்டுமே அவை முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு கணவன் இறந்த மரணவீட்டில் மனைவிக்கு நடத்தப்படும் கலா சார நடைமுறைகளை தமிழர் பழைமைவாதம் இன்றும் கைவிடுவ தாக இல்லை. கட்டியதாலியைக் கழற்றி இறந்த கணவனின் மார் பிலே வைக்க வேண்டும், பின் வெள்ளைச் சேலையுடுத்தி கணவனின் உடலுக்கு மாலையிட்டு பலதடவை தொட்டு வணங்க வேண்டும். இறந்தவரின் வலதுகைப் பெருவிரலால் தனது நெற்றியிலுள்ள குங் குமப் பொட்டை அழிக்க வேண்டும். அதன்மூலம் தான் 'தாலி அறுந் தவள்', 'அறுதலி' என்ற பட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண் டும். அன்றிலிருந்து குடும்பத்தின், சமூகத்தின் நற்காரியங்கள் யாவற் றிலும் இருந்து வெள்ளைச் சேலையுடுத்திய விதவைப் பெண்ணாக ஒதுக்கி வைக்கப்படுகிறாள். தனது பிள்ளைகளின் நற்காரியங்க ளுக்குக்கூட அவள் முன்நிற்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இயற்கையாகவே பெண்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்ள விரும்புபவர்கள். ஆனால் இறுகப்பிடித்துள்ள பண்பாட்டு விதிகளுக் கமைய அவளை சமூகமயமாக்கிவிடுகின்றார்கள். இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற பண்பாட்டு முற்சாய்வுக்கேற்ப பூ, பொட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறவுடைகளை அணியத் தடுக்கப்படுகிறார்கள். அதனால்தான் இவை கள் நிலைக்க வேண்டுமென்பதற்காக பெண்கள் சுமங்கலிப் பூசை செய் கிறார்கள், ஏனெனில் கணவனை இழந்து பின்வரும் நிகழ்வுகளுக்கு பெண் பயப்படுகிறாள். ஒரு பெண்ணின் மஞ்சள் — குங்குமம் போன்ற மங்கலச் சேர்க்கையின் முக்கியத்துவம் கணவனைச் சார்ந்தே கணிக்கப்படுகின்றது. மேனியழகைப் பராமரிக்கக் கூடிய சில பொருள் கள் கணவனுடன் வாழும் மேன்மைக்குரிய மங்களச் சின்னங்களாக 'சக்தி'யேற்றப்பட்டு அவனைக் கவ்விப்பிடிக்கும் பிணைப்புக்களாக மாறிவிடுகிறது. விதவைப் பெண்கள் திருமணம் செய்து கொள்வது பிரச்சினையற்றதல்ல. குடும்பத்தினது இறுக்கமான நிபந்தனைகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. இதற்கு மேலாக பண்பாட்டு சமூக பொருளாதார நலன்களே முதன்மைப்படுத்தப்படுகிறது. கண வன் இறந்தவுடன் அவளது பாலுறவிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படு கிறது. மிகுதி வாழ்நாட்களை கணவன் நினைவில் கழிக்கவேண்டி யதாகிவிடுகிறது. அல்லது தனது குழந்தைகளுக்காக வாழவேண்டி யவளாகிறாள். இவைபோன்ற கட்டுப்பாடுகள் ஓர் ஆணுக்கில்லை.

ஒரு பெண் பிறந்து வளருகின்ற ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத் திலும் பெற்றோர், குடும்பம், சமூகம் என்பன பெண்ணுக்குரிய இலக் கணங்களை அவள்மீது சுமத்தி அதனைச் சமூகநீதி — நடைமுறை யாக்கி விடுகின்றனர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குணங்களுக்குரியவள் பெண் என்ற வரையறைக்குட்படுத்தி அவள் நிலத்தையே பார்த்து நடக்க வேண்டுமென்று சிறுவயதிலி ருந்து சிந்தனையில் ஊட்டப்படுகிறது. ஆணுக்கு சமமாக நீதி நியா யம் பேசினால் பெண்ணுக்குரிய வரையறைகளை மீறியவள் என்று நிந்திக்கப்படுகிறாள். இந்த பின்னணியில் திருமணமாகிய ஓர் பெண் ணிடம் கீழ்படிவு, தியாகம், கடின உழைப்பு என்பன அவளின் கட மைகளாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு கணவனின் கடமை சமூக பொருளாதார ரீதியில் தனது குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு உழைத் தலாகும். அதனால் வீட்டிலேயே ஊதியம் பெறாத உழைப்பாளி யாக பெண் மாறிவிடுகின்றாள். ஆரம்பத்தில் பெற்றோரில் சார்ந் திருந்து, திருமணத்தின்பின் முற்று முழுவதுமாக கணவனிடத்தித்தில் சார்ந்திருக்கின்றாள். அனேக பெண்கள் வீட்டிற்கு வெளியே சென்று வேலை செய்வதை விரும்புவதில்லை, சார்ந்திருத்தலையே விரும்பு கின்றனர். இவ்வாறான பல காரணங்களினால் பெண்கள் கூட்டத் தினரில் அனேகர் ஆண்களைவிட குறைந்த அதிகாரம், அந்தஸ்து, பணவலிமையைப் பெற்றுள்ளனர். இந்நிலையில் கணவனை இழந்த பின்னர் சமூகத்திலே தானாகவே சமூக பொருளாதார ரீதியில் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

னேற முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறாள். மேலும் குடும்பத்தின் மூலந்தான் பெண்ணுக்கு ஆதரவும், பாதுகாப்பும் கிடைக்கும் என்ற நிலையுண்டு. குடும்பம் அளிக்கும் பாதுகாப்பு அவளுக்குத் தேவையாக இருக்கின்றது. அதிலிருந்து விடுபடுகின்றபோது தொல்லைகள் ஏற்படுகின்றன. அனேக பெண்களுக்கு குடும்பம் என்ற அமைப்புக்குள்தான் உயிர்வாழ்வதற்கான அல்லது தனிப்பட்ட முன்னேற்றத்துக்கான வழிவகைகள் வகுக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது.

மேலைத் தேயங்களில் பெண்ணடிமைக்கெதிராக குரல் எழுப்பியவர்கள் சமூக, பொருளாதார ரீதியில் ஆராய்ச்சி செய்து பெண்ணடிமைக்கான காரணங்கள் யாவும் சமுதாயப் பின்னணியில்தான் உள்ளன என்றும், குடும்பம், சட்டம், மதம்...... போன்றவற்றை ஆராய்ந்து காரணங்களை முன்வைத்து, பாரம்பரியங்கள் சமூகச்சட்டங்கள் மாறவேண்டுமென வற்புறுத்தினார்கள். ஆனால் எமது சமுதாயத்தில் காலம் காலமாக சமுதாய அங்கீகாரம் பெற்று ஏற்று ஒத்துக்கொள்ளப்பட்ட பாரம்பரியங்களைத் தகர்க்க பெண்கள் பின்நிற்கின்றார்கள். அவையெல்லாம் தர்க்க ரீதியானவையல்ல என்பதை உணர்வதில்லை. மதம்— கலாச்சாரம் போன்றவற்றில் இருக்கும் காலத்துக்கு ஒவ்வாத முரண்பட்ட பழமைவாதங்களைச் களைந்தெறிய விரும்புவதில்லை. அறியாமை, பழைமையை, மூடத்தனங்களை, எழுதாத சமூகச் சட்டங்களை ஆண்களைவிட அதிகம் பேணுவோர் பெண்களாகவே உள்ளனர். இவைகளை இவர்கள் மீறமுடியாத சமுதாய விதிகளாகவே கருதுகின்றனர். அதனால்தான் பாலியல் சித்தாந்தத்தை (ஆண்—பெண் பாகுபாடு) அன்றாட வாழ்வில் விருத்தி செய்வதில் பெண்கள் முக்கியமானதோர் பாத்திரத்தை வகிக்கிறார்கள்.

சமுதாயத்தில் பெண்கள் பின்தள்ளப்பட்ட நிலையை மதங்கள் ஏற்றுக் கொண்டதுமன்றி, மதக்கோட்பாடுகள் இவற்றை வற்புறுத்தத் தொடங்கின. ஒரு மத அந்தஸ்தைக் கொடுத்து மதங்களில் பெண்களது கடமைகள் தர்மங்கள் ஆக்கப்பட்டுவிட்டன. பெண் தன் கணவனை கடவுள் நிலைக்கு உயர்த்தி பூசை செய்ய வேண்டுமென்ற கொள்கையை அவள்மீது திணித்தது.

"பெண்ணே உனக்கு கொழுநன்தானே வாழ்வு? அவன் உயிரோடு இருப்பதில்தானே உன்னுடைய வாழ்க்கையே தொங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் அவனையே தெய்வமாகத் தொழு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஓர் ஆணைச் சார்ந்த நெறியாக உலகப் பொதுமறை நூலில் வலியுறுத்தப்படுகின்றது. ருக் வேதத்தில் காணப்படும் பாடல்களில் பெண்ணை அடிமைப்படுத்தும் பாடல்கள் இல்லை. உண்மையில் பெண்ணுக்கு வாழச் சகல உரிமைகளையும் கொடுக்கும் பாடல்களாகத்தான் அதில் காணப்படுகின்றது.

—"ஓ பெண்மணியே ! நீ இன்னும் இவ்வுலகில் வாழவேண்டியவள், அவன் உயிர் போய்விட்டது. நீ இங்கே வா இன்னொரு கணவனைத் தேர்ந்து கொண்டு தாயாக வாழ்வாய்......" என்று

அழைக்கும் பாடல் இருக்கிறது. இவைகள்தான் பின்னர் வேதங்களில் மட்டுமல்ல பின் எழுதப்பட்ட கோட்பாடுகளிலும் பெண்களை ஒதுக்கும் கூறுகள் தந்திரமாகப் புகுத்தப்பட்டன.

இத்தகைய பெண்களுக்கெதிரான பண்பாட்டு பின்னடைவு. பாரபட்சம், முற்சாய்வு நிலைமைகளுக்கெதிரான புரட்சிகரமான பண்பாட்டு மாற்றங்களை பலர் எதிர்க்கின்றனர். அவை சமுதாயக் கோட்பாடுகளைத் தகர்த்தெறிந்துவிடும் என எண்ணுகின்றனர். இந்த அடிப்படை சமூகமாற்றங்களை சாதாரண பெண்களால் நினைத்துப் பார்க்க முடியாதுள்ளது, ஏனென்றால் அவள் பெற்ற சமூகமயமாக்கம் அந்தளவுக்கு வலுவுள்ளதாக இருக்கின்றது. அதிலிருந்து விடுபட முடியாதுள்ளது.

விதவைகளின் உருவாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது, ஆனால் அவர்களைப் பாதிக்கின்ற காரணிகளை இனங்கண்டு அவைகளைக் குறைத்தாக வேண்டிய கட்டாயத் தேவையுண்டு

1. உளவளத்துணையினூடாக வலுவூட்டலை வழங்குதல்

2. மறுமணத்தை அங்கீகரித்தல்

3. பெண்களை பூ, பொட்டு, நிற உடைகளை அணியச் செய்தல் (விதவைகள்)

4. தங்கியிருத்தல் என்ற நச்சு வளையத்திலிருந்து வெளிப்பட, தமது நிலையை உறுதிப்படுத்த, சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஓர் தந்திரமாக, சமூக பொருளாதாரத்தில் மேன்நிலைக்கு வரவேண்டும்.

5. சமூகச் சூழலில் பெண் தனக்கென அறிவுருவாக்கத்தில் ஈடுபடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சமூகம் விதவைகள் மட்டில் வைத்திருக்கின்ற முற்சாய்வு பராபட்சக் கருத்துக்களை மாற்றுதல், அவர்களை அந்நியப்படுத்தாது சடங்குகளில் பங்கெடுக்க அனுமதித்தல்.

7. தமிழர் கலாச்சாரத்தின் ஒவ்வொரு அம்சமும், சமகாலத் தேவையின் அடிப்படையில், எதிர்கால சமூக வளர்ச்சியின் தேவையைப் பொறுத்தும் முற்றான ஆய்வுகளுக்கும் பரவலான பரிசீலனைக்கும் உள்ளடக்கப்படல் வேண்டும். அப்போது பழம்பெரும் காலாச்சாரத்தின் தேவையற்றவற்றையும், பிற்போக்கானவற்றையும் இனங்காணப்பட்டு நிராகரிக்க முடியும். ஏனெனில் பெண்களைப் பாகுபடுத்தி, மனித நேயத்தை மறந்து, அறிவியல் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தி, மூடநம்பிக்கைகளையும், முட்டாள் தனங்களையும் பாதுகாக்க முற்படும் பிற்போக்கு கலாச்சார நடைமுறைகளை நிராகரித்து ஒதுக்கப்பட வேண்டியவையே. ஒட்டுமொத்தமாக நோக்கின் தீவிர சமூக மாற்றமே பெரும் தீர்வாக அமைய முடியும், ஏனென்றால்

"நமது கலாச்சாரத்தால் பிரபஞ்ச உண்மைகளென முன்வைக்கப்படுகின்ற அனைத்து மதிப்பீடுகளையும் நம்மால் சாத்தியமான அனைத்து வழிகளிலும் எதிர் கொண்டாக வேண்டிய தருணம் வந்துவிட்டது" யூலியா கிறிஸ்தவா%

## உசாத்துணைகள்


1. ஸ்யோன்ஸ் பெர்க், (எல்ஸெ) — இன்னுமொரு ஜாதி ? இலங்கைத் தமிழ்ப் பெண்கள், பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்ப்பாணம் 1989.

2. ராஜம் கிருஷ்ணன் — 'காலந்தோறும் பெண்', தாகம் வெளியீடு; சென்னை — 1989.

3. செல்வி திருச்சந்திரன் — 'பெண்ணுரிமையின் பரிமாணங்களும், பெண்ணடிமைக்கான விளக்கமும்,' பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 1993.

4. செந்தில்வேல், சி. கா. -- சமகால சமூகப் பார்வைகள். புதிய பூமி & சவுத் ஏசியன்ஸ் புக்ஸ், சென்னை, 1991.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் சமூக விளைவுகள்
# Social Effects of War

ஆர். எம். ஜே. ரவிராஜபுத்திரன்
B. A. (Hons)

சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியாக, யுத்தமானது, யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பினரை மாத்திரம் எச்சந்தர்ப்பத்திலும் பாதித்தது கிடையாது. மாறாக, சண்டையில் ஈடுபடும் இரு தரப்புக் குழுக்கள் சார்ந்த பொது மக்களையே பெருமளவு பாதிப்புக்கள் சென்றடைகின்றன. சண்டையில் ஈடுபடும் படைகளும் பொதுமக்களை மையமாகக் கொண்டே தமது ஆயுதங்களை முக்கியமாக பிரயோகிக்கின்றனர். ஏனெனில் எதிர்த்தரப்புச் சார்ந்துள்ள பொதுமக்களைத் துன்பத்திற்குள்ளாக்குதல், அவர்களது பொருளாதாரத்தை நாசமாக்குதல், கலை பண்பாட்டு அம்சங்களை சிதைத்து அழித்தல் என்பதன் மூலம் அவர்களது இருப்புக்களை, ஆதாரங்களை இல்லாதொழித்தல் மற்றும், தமது தரப்பின் மனவலிமையைப் பாதுகாத்தல் எனும் யுத்த தந்திரங்களை கொண்டிருக்கின்றனர் என்பது கசப்பான உண்மை.

**உயிர் இழப்புக்கள்**

அண்மைய ஆண்டுகளில் செக்குடியரசுகளான சேர்பியா, குறொசியா என்பன பெரும் யுத்தத்தில் ஈடுபட்டன. இந்த நிலையில் யுத்தப் பிரதேசங்களில் இருந்த மக்கள் ஆயுதப்பிரயோகம் காரணமாக ஆயிரக்கணக்காக கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயங்களுக்குள்ளாகி, நூற்றுக்கணக்கானோர் அங்கவீனமடைந்தனர். கைது செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள் ஆயிரக்கணக்கில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெண்கள் இனச் சுத்திகரிப்புக்குள்ளாக்கப்பட்டனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன, அல்லது சூறையாடப்பட்டன. மக்கள் இலட்சக்கணக்கில் இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர். [2]

ஆபிரிக்க நாடான றுவாண்டாவில் டுட்சி—ஹீட்டு இனமக்களுக்கிடையேயான கலவரத்தில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்த நாடான ஸயர் நோக்கிச் சென்றனர். ரஷ்ய மாநிலமான செச்சன்யாவில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள், யுத்தத்தில் ஈடுபடாத சாமான்யர்கள் கொல்லப்பட்டனர். இதே போன்று இலங்கையில் இனரீதியான யுத்தத்தில் இதுகாறும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான யுத்தத்தில் ஈடுபடாத பொதுமக்கள் பலியாகியுள்ளனர். இவ்வாறான பொதுமக்கள் படுகொலை என்பது யுத்தத்தின் போது சாதாரண ஒன்றாக நடைமுறையில் உள்ளது. இலட்சக்கணக்கானோர் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டுத் துரத்தப்பட்டனர்.[3] கொக்கட்டிச் சோலை படுகொலை,[4] நாகர்கோவில் படுகொலை, நவாலித் தேவாலய படுகொலை என பல்வேறு கால கட்டங்களில் மக்கள் (தமிழர்கள்) நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.[5]

இவ்வாறாக இடம் பெறும் படுகொலைகளின் போது பெரும் பாலும் இளைஞர்கள், குடும்பத் தலைவர்கள் என்ற வட்டத்தில் வைத்து ஆண்களே கொல்லப்படுகின்றனர். இங்கெல்லாம் குடும்பத் தலைவர்களும் இளம் ஆண்களுமே வருமானம் ஈட்டுவோராக இருக்கின்றனர். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஆகவும் குறைந்த மதிப்பீடாக 10.000 திற்கும் மேற்பட்ட விதவைகள் உள்ளதாக தொண்டர் ஸ்தாபனம் ஒன்றின் அண்மைய அறிக்கை கூறுகின்றது.[6] இதில் இடம்பெயர்ந்து சென்றோர் மறுமணம் செய்தோர் போன்றோர் இடம் பெறவில்லை. எனவே இந்த 10000 விதவைகளில் கணிசமானோர் தமது குடும்பத்தின் பாரத்தை சுமக்க வேண்டிய நிலையில் உள்ளனர்,

பொருளாதார அழிவு

யுத்தத்தின் அழிப்பு இலக்கில் மற்றொரு முக்கியமான இலக்காக பொருளாதார அழிவு இடம் பெறுகின்றது. ஒரு சமூகம் பல வருடங்களாக உழைத்து சேமித்து உருவாக்கிய பொருளாதார அம்சங்கள் யுத்தத்தின் காரணமாக சில மணிநேரங்களில் அழிக்கப்படுமாயின் அச்சமூகம் அந்த அழிந்த அம்சங்களை மீண்டும் புதுப்பிக்க இன்னும் பல நூறு வருடங்கள் தேவை. எனவே அந்தச் சமூகம் திடீரென மீண்டும் பின்னோக்கித் தள்ளப்படும். 2ஆம் உலக மகா யுத்தத்தில் ஜேர்மன் படைகள் தாம் படையெடுப்பை மேற்கொண்ட நாடுகளின் பொருளாதார அம்சங்களை அழித்தபடியே முன்னேறின. தொழிற்சாலைகள், அணைக்கட்டுக்கள், விளைச்சல் நிலங்கள், பயிர்கள் இயற்கை வளங்கள் என்பன அழிக்கப்படும் இலக்குகளில் முதன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானவை—குடியிருப்புக்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பனவும் இடம்பெறும். ஓர் குடும்பத்தின் சொத்தாக வீடு, நிலம் பயிர்கள் சேமிப்புக்கள் என்பன அழியுமாயின் அந்தக் குடும்பம் ஆதரவு எதுவும் அற்ற நிலைக்குத் தள்ளப்படும். ஜெர்மன் படைகள் மொஸ்கோவை முற்றுகையிட்டு கைப்பற்றிய தருணம் மிகவும் பனிக் காலமாகும். ரஷ்யமக்களும், படைகளும் நகரிலிருந்து பின்வாங்கும்போது தமது நகரத்தின் வளங்கள் அனைத்தையும், விளைபயிர்கள், எரிபொருட் கிடங்குகள், குடியிருப்புக்கள் அனைத்தையும் அழித்துவிட்டே பின்வாங்கினர். இதன் காரணமாக ஜேர்மன் படைகளுக்கு தேவையான எரிபொருள், உணவு, உறைவிடம் என்பன கிடைக்காத காரணத்தால் அப்படைகளின் பெரும்பாலானோர் அழிந்துபோயினர். இறுதியில் ஜேர்மன் தோற்கடிக்கப்பட்டது,[7]

குடியிருப்புக்கள் எனும்போது வெறுமனே சடப் பொருட்களின் ஒழுங்கமைப்பாக கருத முடியாது. மக்களின் விருப்பு வெறுப்புக்கள் மகிழ்ச்சி, நம்பிக்கை, இன்பம், துன்பம் என்பன கலந்த ஓர் உயிரோட்டமான அமைப்பாகும். இந்தக் குடியிருப்புக்களை அடிப்படையாகக் கொண்டே மக்கள் தமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர். எனவே இந்தக் குடியிருப்புக்கள் அழிக்கப்படும் போது மக்களின் நம்பிக்கைகளும் சேர்ந்தே அழிகிறது. இத்தகைய அழிவுகளால் மக்கள் முன்னொருபோதும் இல்லாத வகையில் பெரும் உளவியல், பொருளாதார பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர்.

## பண்பாட்டு அழிவு

மக்கள் குழுக்களை வேறுபடுத்திக் கூறுவதற்கு பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. மக்களின் உருவமைப்பு, மொழி, நிறம், பண்பாட்டு அம்சங்கள், அவர்களுக்குரிய கலை கலாசார பண்புகள் என்பன வேறுபடும், முறைகளை கருத்திற் கொண்டே ஆய்வாளர்கள் மக்களை வேறுபடுத்துகின்றனர். ஒவ்வொரு இனப் பாரம்பரியங்களைக் கொண்ட மக்கட்கெனவும் தனித்துவமான கலை கலாச்சார ஊடகங்கள் உண்டு. இவைகளே ஏனைய குழுக்களிடம் இருந்து ஒவ்வொருவரையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது.[8]

இந்நிலையில் ஓர் இனத்தின் அழிவு அல்லது அவர்களின் நீண்டகால இடப்பெயர்வு என்பது அவர்களுக்குரிய பண்பாட்டு அம்சங்களில் பாரிய அழிவுகளை கொண்டுவரும். மேற்குலகு நோக்கி இடம்பெயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர்கள் மேலைமயமாக்கலில் தமது சுயத்தை பெரு மளவு இழந்து போயுள்ளனர் என்பது எமது கண்ணுக்கு தெரியும் மிகவும் சிறிய உதாரணமாகும்.

யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்வுக்கு உள்ளாக நேரிடும்போது அவர்கள் சார்ந்துள்ள பண்பாட்டு. கலை, கலாசார, பொருளாதார பண்புகள் என்பன மக்களுடன் இடத்துக்கிடம் கொண்டு செல்ல முடியாத காரணத்தால் படிப்படியாக அழி வுக்கு உள்ளாக நேரிடுகிறது. எம்மண்ணின் வடக்கு மாகாணத் தீவுப்பகுதியில் ஏற்பட்ட நீண்டகால இடப்பெயர்வுக்குப் பின்னர் மக்கள் தமது இல்லங்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்றபோது தமது ஊர்களையோ, இல்லங்களையோ, அல்லது கோயில் குளங்களையோ அடையாளம் காணமுடியாதவாறு எல்லாம் சிதைந்தும் மரங்கள் கொடிகளால் மூடப்பட்ட காடாகக் காட்சி தந்ததையும் நினைவு கூரமுடியும். கிழக்கு மாகாணத்தில் மக்கள் இடப்பெயர்வுக்கு உள் ளான பின்னர் குளங்கள் தூர்ந்துபோய் உள்ளதையும் பல நூற் றாண்டுகள் பழமை வாய்ந்த ஆலயங்கள் சிதைந்து அழிவுக்குள்ளாகி இருப்பதையும் காணமுடியும்.

யுத்தம் காரணமாக மக்கள் இடப்பெயர்வுக்குத் தூண்டப்பட்டு வெளியேறுதல் என்பது அவர்களின் பண்பாட்டு அம்சங்களில் பெரும் பாதிப்புக்களைக்கொண்டுவரும். பிற மக்களின்பழக்கவழக்கங்ளில் எதுவித கலப்புமில்லாத தூய்மையான தனித்துவம் மிக்க மக்கள் கூட்டம் இடப்பெயர்வுக்குப் பின்னர் பல இடங்களில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களை தம்மகத்தே கொண்டும் வரும். சென்ற இடங்களில் உறவு ரீதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வர். இதன் காரணமாக இவர்களுக்கிருந்த தனித்துவம் அங்கே மறைகின்றது. யுத்தத்தில் ஈடுபடும் தரப்புக்களும் இதனையே பெரிதும் விரும்புகின்ற னர். பல்வேறு நாடுகளில் நிலவும் இனரீதியான யுத்தங்களில் பலம் மிக்க ஆயுதக்குழுக்கள் பலமிழந்த குழுச்சார்ந்துள்ள பண்பாட்டு அம் சங்களை அழித்துவிடுவது வழமை. இலங்கையில் வடக்கு, கிழக்கு யுத்தத்தில் தமிழர்களின் தனித்துவம் மிக்க யாழ்-நூல்நிலைய எரிப்பு இந்தியாவின் பாபர் மசூதி ஹர்ரத்பல் பள்ளிவாசல்களின் அழிப்பு, சீக்கியரின் பொற்கோவில் மீதான இராணுவ நடவடிக்கை என்பன இவ்வகையில் அடங்குதலே.

இனங்களுக்கிடையிலான போராட்டம் எந்த நாடுகளில் ஏற்பட் டாலும் போராட்ட வடிவம் உருப்பெறுவதற்கு முக்கிய காரணியாக இன அழிப்பு, பொருளாரத்தை சிதைத்தல், பண்பாட்டு அம்சங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகளில் இனங்களின் பண்பாட்டு அம்சங்கள் அழிக்கப்பட்ட தன் காரணமாக பல்வேறு இன மக்கள் தமது இனம் என்னும் பதத்தை பிரயோகிக்க முடியாதவாறு சுயம் இழந்து உள்ளனர். அமெரிக்காவுக்கு தூண்டப்பட்ட இடப்பெயர்வுக்குள்ளான கறுப்பர்கள் தமது இனத்தின் தொன்மை நாகரிகம் என்பன மறுக்கப்பட்ட நிலையில் இன்று உள்ளனர். [10] அமெரிக்க மண்ணில் பூர்வீக குடிகளான செவ்விந்தியர்கள் தமது இருத்தலுக்கான ஆதாரங்களை இழந்துவிட்டனர். இவ்வாறு இவர்களது தனித்துவமான வரலாறு அழிக்கப்பட்டதற்குப் போரும், பலாத்காரமுமே மிகவும் முக்கியமான காரணமாகும். இந்தச் சமூகங்கள் போரிலிருந்து நேரடியாக விடப்பட்டாலும் போரின் தாக்கங்கள் இன்றுவரை தொடரவே செய்கின்றன.

போரின் காரணமாக நேரடியான பாதிப்புக்களை எதிர் கொண்டவர்களது நடத்தைகள் காலப்போக்கில் நோயாளிக்குரிய தன்மையைக் காட்டுவதாக வைத்திய ஆய்வுகள் கூறுகின்றன. போரின் நேரடியான உயிரழிவு, உடமை அழிவுகளை எதிர்கொண்ட பொது மக்கள் நாளடைவில் உளவியல் ரீதியான பாதிப்புக்களைக் கொண்டிருக்கின்றனர். பயம், நித்திரையில் சிறுநீர் கழித்தல், நரம்புத்தளர்ச்சி, இருட்டிற்குப் பயம், இரத்தத்தினைக் கண்டால் மயக்கம், பெரும் சத்தங்கள் அதிர்வுகளுக்கு நடுக்கம் என ஈடுகொடுக்க முடியாதவாறு மனநோயாளியாக மாறுகின்றனர். பலர் மனச்சிதைவு நோய்க்குள்ளாகி (Mental Disorder) இருப்பதனையும் காணமுடியும். அங்கவீனமுற்றோர், விதவைகள் என பல்வேறு தரப்பினர் குழந்தைகள் உட்பட இவற்றினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. வளைகுடா யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்கப் படையினர் மத்தியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பல இராணுவத்தினர் மனச்சோர்வு, விரக்தி, காரணமில்லாத சிந்தனைகளினால் ஆட்பட்டிருப்பதாக ரைம்ஸ் (Times) சஞ்சிகை கூறுகின்றது. இதற்கு ஆதாரமாக அமெரிக்க இராணுவ வைத்திய நிபுணர்களினதும் இராணுவ உளவியல் நிபுணர்களினதும் அறிக்கையை காட்டுகிறது

இதைத்தவிர யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் தமது வருமானத்திற்கான வளங்களை இழந்ததன் காரணமாக சமூக ஒழுங்கமைவிற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். விபச்சாரம். போதைவஸ்து கடத்தல், குற்றச்செயல்கள், தடைசெய்யப்பட்ட மது உற்பத்தி, (கசிப்பு) [11] விறகு வெட்டுதல் மூலம் காடழிப்பு, பிச்சையெடுத்தல், சமூகங்களில் ஒழுக்கம் என பாதுகாக்கப்பட்டவற்றில் இருந்து விலகுதல் போன்ற விலகல் நடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஈடுபடுகின்றனர். இடம்பெயர்ந்தவர்களுக்கென அமைக்கப்பட்ட முகாம்களில் ஒழுக்க நடத்தைகள் பெருமளவு மீறப்பட்டு வருகின்றதை எமது பிரதேசங்களில் காணலாம்.

இவ்வாறான விலகல் நடத்தைகள் போர்க்காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. யுத்த நிலையில் இவை பெரிய பிரச்சனைகளாக உணரப்படாதபோதும் போர் ஓய்விற்குப் பின்னர் நீண்ட கால ஓட்டத்தில் பெரும் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும்,

## அடிக்குறிப்புக்கள்

1. An Kssay - Times. (Magazine), 1994, June
2. பத்திரிகைச் செய்திகள். பிரதேசவார வெளியீடு தினகரன் வாரமலர்
   Sunday Times, Sunday Obsewer Daily News. 1995.
3. மேற்படி
4. பத்திரிகைச் செய்தி – ஈழநாடு, 1987.
5. பத்திரிகைச் செய்தி – ஈழநாடு, 1993.
6. பத்திரிகைச் செய்தி – EHED மானாட்டில் காணப்பட்டதாக 1990. 8. 3. வீரகேசரியில் பிரசுரமானது.
7. மெல்ட் யோவ்ஸ்கி. – வெற்றி வரலாறு மனித முன்னேற்றப் பதிப்பகம் மொஸ்கோ, 1973.
8. Ragavan. M. D. – Tamil Culture in Ceylon A General Introduction Kalai Nilaiyam Limited.
9. கள அவதானிப்பு – அகதிமுகாம்கள்

---

மகத்தான மனிதர்கள் கருத்துகளைப்பற்றி விவாதிக்கிறார்கள்;
சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப்பற்றி விவாதிக்கிறார்கள்;
மட்டமான மனிதர்கள் நபர்களைப்பற்றி விவாதிக்கிறார்கள்;

— சீனபழமொழி

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை — ஒரு சமூகவியல் அணுகுமுறை
# Suicide — A Sociological Approach

க. சிவச்செல்வி

மனிதன் கிடைக்கக்கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தி தனது உடல்நலத்தைக் காத்து வாழ்வை நீடிக்க விரும்புகிறான். தன் சக்தியையும் செல்வத்தையும் செலவழித்து நீண்ட நாள் வாழ முயற்சி செய்கிறான். சாவை வென்றிட ஆசைப்படுகிறான், கனவும் காணு கிறான்.

இந்த உண்மை ஒருபுறம் இருந்த போதிலும் சிலர் தங்கள் வாழ்விற்கு அவர்களாகவே ஒரு முடிவைத் தேடிக்கொள்கின்றனர். தற்கொலை நிகழாத ஒரு சமுதாயமோ ஒரு குறிப்பிட்ட காலமோ கிடையாது. தற்கொலை என்பது ஒரு தனியாள் தொடர்பான சம் பவமாக இருந்த போதிலும் ஒரு சமுகச் சிக்கலாகவே உணரப்படுகிறது.

அதிகளவில் தற்கொலை செய்து கொள்ளும் நாடுகளுள் இலங் கையும் ஒன்றாகும். ஆண்டு தோறும் 10 000 பேர் வரையில் தற் கொலை செய்து கொள்வதாக (ஒரு மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற ரீதியில்) ஹாவாட் மருத்துவக் கல்லூரியின் அறிக்கை ஒன்று கூறுகின்றது. இலங்கையில் தற்கொலை செய்ய முயற்சிப்பது தண்ட னைக்குரிய குற்றமாக இருப்பதால் தோல்வியில் முடிவடைந்தவை பற்றி தெரிவிக்கப்படுவதில்லை. எனவே உண்மையான எண்ணிக்கை 10,000 க்கு அதிகமாக இருக்கலாம்.

புள்ளிவிபரங்களுக்கு ஏற்ப 30 – 60 வயதுக்கு இடைப்பட்டவர் களே இலங்கையில் அதிகமாக தற்கொலை செய்து கொள்கிறார்கள். இடம்பெறும் தற்கொலைகளில் 75% மானவை கிராமப்புறங்களிலேயே இடம் பெறுகின்றன. நவீன வாழ்வுதரும் பிரச்சனைகள் காரணமாக குழம்பிப்போகும் இவர்கள் தமது குடும்பத்தின் பெரியவர்களுடன் கலந்துரையாடுவதற்கு தயாரக இருப்பதில்லை. மரபுவழி பண்பாடும் இதை அனுமதிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரப்புறங்களில் தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பதன் காரணம், தனிமைக் கொடுமையாகும். இயற்கையாகவே சமூக ரீதி யான உயிரினமாக மனிதன் நிரந்தரமான மானிடத் தொடர்புகளை வைத்துக் கொள்வது அத்தியாவசியமான விடயமாகும். எனினும் வேலைப்பழுமிக்க நகரப் பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு யாருக்காக வும் தமது நேரத்தை செலவிட அவகாசமில்லை. நகரப் பிரதேசத் தில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்வது எளிதான தற் கொலை முறையாக காணப்படுகிறது.

டுர்கைமின் கோட்பாடு.

தற்கொலை ஒரு சிக்கலான பிரச்சினை ஆகும். தற்கொலை பற்றி பல்வேறு அறிஞர்கள் எண்ணற்ற ஆய்வுகளை மேற்கொண்டுள் ளனர். இவர்களில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற சமூக வியல் அறிஞரான எமில் டுர்கைம் குறிப்பிடத்தக்கவர். தற்கொலை என்பது "சமூக உண்மை" என வரைவிலக்கணம் செய்வார் டுர்கைம். ஏனைய சமூக உண்மைகளோடு சமூக அமைப்புகள், சக்திகளை தொடர்புபடுத்தியே சமூக உண்மைக்கு விளக்கம் அளிக்க முடியும் என்பது அவர் கருத்து. விடயக்களை ஆய்வு முறை மூலம் ஒரு தனி நபரின் தற்கொலைச் செயலுக்கு சிறந்த முறையில் விளக்கம் வழங்க முடியும் என்கிறார் டுர்கைம். இம் முறை மூலம் சாதகமான சந்தப் பங்களில் தற்கொலையாளியின் மனநிலை, நோக்கங்கள், உந்துதல்கள் பற்றிய போதிய சான்றுகள் கிடைக்கலாம்.

தற்செயலாக நிகழும் மரணத்திற்கும் தற்கொலைக்கும் இடை யிலான வேறுபாட்டை அவர் ஏற்றுக்கொண்டார். தற்கொலையாளி குறித்த பலனைத் தரும் என அறிந்த நிலையில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அவரின் செயலால் நிகழும் எல்லா மரணங்களை யும் தற்கொலை எனும் பதம் குறிப்பதாக குறிப்பிடுகின்றார். தன் ஆய்வினடியாக 3 வகையான தற்கொலை நிலைமைகளை இனம் காட்டுகிறார்.

i) தன்முனைப்புசார் தற்கொலை (Egoistic)

ii) பொதுப்பண்புசார் தற்கொலை (Altruistic)

iii) முரண்பாட்டு நிலைசார் தற்கொலை (Anomic)

தன்முனைப்புசார் தற்கொலை என்பது தற்புகழ்ச்சிக்கும் சுய மரியாதைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பவரின் தற்கொலையைக் குறிக்கும். யாருடனும் பிரியமில்லாது தனியாக வாழ்பவர்கள்தான் தற்கொலை செய்து கொள்ளும் தன்மையுடையவர்கள். அதே போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து மனைவி பிள்ளைகளுடன் வாழ்பவர்களை விட திருமணம் செய்யாது தனியாக இருப்பவர்கள், விதவைகள், தபுதாரர்கள் தான் அதிகளவில் இவ்வகைத் தற்கொலையைச் செய்கின்றார்கள்.

பொதுநலப் பண்புசார் தற்கொலை என்பது ஒரு குழுவுடனோ அல்லது சமுதாயத்துடனோ நெருங்கிய தொடர்புள்ள ஒருவர் அந்தக் குழுவின் நன்மைக்காகவோ அல்லது அந்தச் சமுதாயத்திற்காகவோ தற்கொலை செய்வதாகும். உ+ம் போர்வீரர்களது இறப்பு, உடன் கட்டை ஏறுதல்.

முரண்பட்ட நிலைசார் தற்கொலை என்பது சமூகச் சீர்குலைவுடனும் பதட்ட நிலையுடனும் தொடர்புபட்ட வாழ்க்கையில் நிலவுகின்ற எதிர்பாராத பிரிவின் விளைவால் நிகழ்வது. பொருளாதார நிலையில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளை வைத்து இவ்வகைத் தற்கொலையை விபரிக்கின்றார். இலட்சாதிபதியாக இருந்த ஒருவனுக்கு திடீரென பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டால் அவன் தற்கொலை செய்ய முடிவு செய்கிறான். இதற்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரம் அன்று. அவனுக்கு ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தின் விளைவாக சமுதாயத்தில் அவன் பெற்றிருந்த மதிப்பு, அதன் உறவுமுறை ஆகியவற்றை இழந்துவிடுவதால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்கின்றான்.

இந்த அனைத்து விதமான தற்கொலைக்கும் முக்கிய காரணி சமூக முறிவு. ஒருவனுடைய தனிப்பட்ட குணத்திற்கும் சமூகத் தேவைக்கும் ஒவ்வாமையும் தவறான பொருத்தமும் ஏற்படும் போது ஒருவன் தற்கொலை செய்து கொள்கிறான். எப்பொழுது ஒருவன் சமூகத்தில் வாழத் தகுதியில்லாதவன் என்று எண்ணுகிறானோ அப்பொழுது அவன் தற்கொலை செய்யத் தூண்டிவிடப்படுகிறான்.

உளவியல் அறிஞரான சிக்மன் புரொய்ட் என்பார் தற்கொலை பற்றிக் கூறும் போது, மனிதனின் மனதில் உயிர்வாழ வேண்டும் என்ற ஆசையும் சாக வேண்டும் என்ற விருப்பமும் அடிப்படை உணர்ச்சிகளாய் இவை மனிதனை எதிரெதிர்த்திசைகளில் இழுத்துக் கொண்டும் ஒன்றையொன்று ஆதிக்கம் செய்யச் சண்டையிட்டுக் கொண்டும் உள்ளன. ஏதேனும் சில காரணங்களினால் சாக வேண்டும் என்ற விருப்பம் மேலெழுந்து முடிவாகிறபோது தற்கொலை நிகழ்கின்றது என்கிறார். தற்கொலையை உணர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் விளங்குகிறார் புரொயிட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சில அறிஞர்கள் தற்கொலைக்கு உளவியற் காரணிகள் பொருளாதாரக் காரணிகள், சமூகக் காரணிகள், பருவகாலம் போன்ற பல்வேறு காரணிகளை மையப்படுத்தி விளக்கங்களை தந்துள்ளமை யையும் குறிப்பிடலாம் அடிப்படையில். இவையாவும் எமில் டுர்கைமின் கருத்தியலுள் விளங்கப்படுத்தக் கூடியன.

**என்ன செய்யலாம்?**

1. தற்கொலைக்கான மிக முக்கியமான காரணியான, சமூக சீர் குலைவுகளையும் பிரிந்துபோன சமூக அமைப்புகளையும் சரி செய்ய அனைத்து நாடுகளும் எல்லா விதமான வழிகளையும் பின்பற்றி சமூகத்தில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். சமூகத்திலுள்ள போதைப்பொருள் பாவனை, மது பானப் பாவனை, பலாத்காரம் போன்ற சமூக சிக்கல்களுக்கு முடிவு கட்ட வேண்டும்.

2. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை இல்லாதொழித்தற்கான வழி வகைகளைக் காணவேண்டும்.

3. தற்கொலைக்கு வழிவகுக்கும் பண்பாட்டு அம்சங்களை களைந் திடவும், புதிய மாற்றுப் பண்பாட்டு ஏற்பாடுகளைக் காணவும் வழிகள் காண்பதும் அவசியம்.

4. கேட்பதற்கு ஒருவர் இருப்பின் அனேகமான அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஆமாம்! வளமான உறவு உளத்திணைக்காக்கும்.

**உசாத்துணை**

Durkheim, E - 'Suicide' - Routledge and Kegan Paul, 1952.

---

தனி மனிதன் தன்னை உயர்த்தும் சாதனத்தைத் தேடிப் பெற் றுத், தன் வாழ்வு தன் கையில் உள்ளது என்ற முடிவை அறியும் போது, அவனது கௌரவம் சிறந்து விளங்கும்,

— மாட்டின் லூதர் கிங்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய யாழ்ப்பாண மக்களின் சமூக மனம்
# Social Mind of the People of Jaffna Today

பகீரதி ஜீவேச்வரா

"சமூகம்" என்ற பத முகிழ்ப்பினுள்ளேயே, அதன் அடிக்கட்டு மானத்தில் ஒரு குழுமம் மனித மனங்களின் ஏதோ ஒரு வடிவிலான ஒத்த ஓட்டங்கள் அத்திவாரமிடப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கிளம்பும் சமூகக் கட்டமைப்பு, சமூக இயக்கம் என்பன நிர்ணயிக்கப்பட்டுகின்றன என்ற உண்மை உள்ளடக்கப்படுகிறது.

'சமூக மனம்' என்ற கருத்துருவாக்கத்தினுள் பல தனிமனித மனங்களின் ஒத்த படிமங்கள் பதியப்படுகின்றன என்ற வெளிப்படை உண்மையும், அவற்றின் ஒட்டுமொத்தமான ஒத்த படிமங்களே 'சமூக மன'த்தைத் தோற்றுவிக்கும் என்ற மறுதலையும் புரிந்துகொள்ளக் கூடியதொன்று.

இப் பின்புலத்தில் யாழ்ப்பாண மக்களின் சமூக மனத்தின் இன்றைய இருக்கை எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்வதும், அதனை மதிப்பிட்டு ஆவணப்படுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆனால் 'மனதை அறியும் ஒரு கருவி' கண்டுபிடிக்கப்படும் வரை, மனம் தொடர்பான (தனிமனித மனமாயினும், சமூகமனமாயினும்) எந்த வெளிப்பாடுகளினதும் உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை என்பனவற்றை வாய்ப்புப் பார்ப்பது கடினம் என்பதையும் இக் கட்டுரை முன்னரேயே குறிப்பிட விரும்புகிறது.

தொடர்ந்து யுத்த அழுத்தங்களின் மத்தியில் அமுங்கி இருந்த யாழ்ப்பாணத்துச் சமூக மக்களுக்கு, அண்மையில் நிகழ்ந்து முடிந்த பெருத்த இடம்பெயர்வு, ( Mass Exodus ) அச் சமூக மனங்களில் பெருத்த, எதிர்பாராத மாற்றங்களை உள்வாங்கும் மனப்பாங்குகளை வெவ்வேறு ஆழங்களில் பதித்து, முன்னர் நிலவிய சமூகப் பண்பிலும் ஒழுங்கமைப்பிலும் பெருத்த கட்டமைவு மாற்றங்களை உள்வாங்கி ஒரு புதிய சமூக உருவாக்கத்தைத் (A New Social Formation) தோற்றுவித்துள்ளதோ? என்று உங்களிடம் வினவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத் தமிழன் குணவியல்பு பற்றிக் கூறிய ஜேன் ரஸ்ஸலின் புறநிலை நோக்கு (Etic Perspective) இன்று முற்று முழுதாக மீள் அமைப்புச் செய்ய வேண்டியதாகி விட்டது. "............ யாழ்ப்பாணத் தமிழன் தீவிரமான பழமை வாதியாகவும், குடாநாட்டுடனான ஈர்ப்பு, தனது மொழி வழக்கங்கள், மூதாதையர்களின் நம்பிக்கைகள் தொடர்பாக ஒரு அக்கறை சார்ந்த ஆர்வமுடையவனாகவும் உள்ளான் - இது குடாநாட்டு மனோபாவம் ...................."

ஒரு உள்ளாளன் நோக்கில் (Emic Perspective) தோன்றும் பக்கச்சார்புகள் புறநிலை நோக்கில் தோன்ற வாய்ப்புக்கள் குறைவு என்ற எடுகோளினடிப்படையில், அன்றிருந்த யாழ்ப்பாண மக்களின் சமூக மனக் கோலங்களை, அவற்றின் இருக்கையை உள்ளவாறே வெளிப்படுத்திய ஜேன் ரஸ்ஸல், இன்று களப்பணியில் இங்கு ஈடுபட்டுக் கருத்து வழங்க இருப்பின், இவற்றின் எதிர்ப்பதங்களைத் தேடியிருப்பார் என்பது உண்மை.

இச் சமூகம் தொடர்ந்து தவிர்க்க முடியாதபடி போர்ச் சூழலினுள் சிக்கியிருப்பதும், நிகழ்ந்து முடிந்த பெருத்த இடம்பெயர்வும் இப் புலம் வாழ் மக்களின் சமூகமனங்களில் இரு ஆழமான, வலுவான பதிவுகளை வழங்கியுள்ளது.

(I) தொடர்ச்சியான மரணம் பற்றிய பயம். (Constant Fear of Death)

(I) இதுவரை காலமும் 'இழக்க முடியாது' என்று கருதியவைகளையும் 'இழந்து வாழலாம்' என்ற முன்னெதிரான மனப்பாங்கு மாற்றத்தை உள்வாங்கும் உளப்பாங்கு.

இன்று யாழ் சமூகத்தில் அமைப்பு நீதியாக, இரு முக்கிய - 'முக்கிய' என்பது இங்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது - முரண்படு குழுக்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஒன்று தன்னைப் பெருமனவில் சமூகத்திற்கு அடையாளம் காட்டியும், மற்றையது தம் நோக்கங்களின் நிறைவுப்பாடு, தம்மை இனம் காட்டிக்கொள்ளாமல் இருப்பதிலேயே தங்கியுள்ளதால் சாதாரண மக்கள் போலவும் இருந்து இயங்கி வருகின்றன. சமூக மக்களின் நாளாந்த இயக்கமும், இவ்விரண்டு அமைப்புக்களின் நோக்கம் கொண்ட இயக்கமும் ஒன்றையொன்று சந்தித்து இடைவெட்டும் போது உருவாகும் முரண்பாடு. சமூக மனங்களில் திடீர் அதிர்ச்சியையும், நிகழ்வு பற்றிய முன் கூட்டிய தொடர்ச்சியான திகிலையும் பதித்துள்ளது. இந்நிகழ்வைத்

தொடர்ந்து இடம்பெறும் வழிமறிப்புக்களும், கைதுகளும், காணாமல் போதல்களும், தண்டனைகளும், காட்டிக்கொடுப்புக்களும் ஒவ்வொரு சமூக மனங்களிலும் அவர்களது அனுபவ உள்வாங்கல்களுக்கு ஏற்ப வெவ்வேறு ஆழங்களில் தன் பதிவுகளை வழங்கிச் சென்றுள்ளது. இன்று இங்கு வாழும் ஒவ்வொரு தனிமனித மனமும் கணணிகள் போல், எந்தக் கணம் தனது உயிர்பிரியும், தான் ஊனமாவேன் என்பதையோ, தனக்குத் தெரிந்தவர் இறப்பார், ஊனமாவார் என்பதையோ முன் கூட்டியே பதிந்து வைத்து தமது வாழ்தலை இழுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அனைவராலும் உணர்ந்து கொள்ளக் கூடிய தொன்றாக இருக்கிறது.

புலம் பெயர்ந்த போதே யாழ்ப்பாண மக்களின் மனங்கள், தமது சந்தோஷ ஊற்றெடுப்பு மையங்களைத் தொலைத்துவிட்டு, புகுந்த பின்னும் அதன் தேடலில் அக்கறை கொள்ளாது தமது நாளாந்த வாழ்தலை அமைத்து விட்டதுகள் போலும், சமூகத்தின் பெரிய ஒன்று கூடல் மையங்களாகிய வழிபாட்டு நிறுவனங்களிலும் பெரும்பாலான மனங்கள் தமது திரண்டமைந்த சோகங்களை ஒப்புவிப்பவர்களாகவும், 'சமாதானம்' என்பது ஒரு காலங்கடத்தும் எதிர்பார்ப்பு, மங்கிக்கொண்டு போகும் நம்பிக்கை என்பதை அறிந்தும் இரந்து சமாதானத்தை வேண்டுபவர்களாகவும் காணப்படுகிறார்களே அன்றிச் சடங்குகளிலோ, களியாட்ட நிகழ்வுகளிலோ முன்னர் போன்று அதிகம் அக்கறை செலுத்துவதைக் காணமுடிவதில்லை. உண்மை என்னவெனில், சந்தோஷத்தைத் தேடி மனம் ஓட ஏவுகின்ற அளவிற்கு சமூக இருப்பின் சட்டகம் இடம்விடுவதில்லையென்பதே விழாக்கள், சடங்குகள், கொண்டாட்டங்கள் எல்லாம் முன்னரை விட நேரத்தால் குறுக்கப்பட்டு சந்தோஷ மட்டுப்பாடுகளை வழங்கும் சடங்குகளாக மாற்றப்பட்டு விட்டது. இன்று யாழ் சமூகத்தின் ஒட்டு மொத்தமான ஆதிக்க வெறியர்களாக நம்மை ஆள்பவை நேரமும், அடையாள அட்டையுமே. சமூக மனங்களை இவை இரண்டும் இன்று அதிகளவில் ஆட்டிப்படைப்பது அனைவரும் உணர்வதே. போர் என்பதே சமூக இதயங்களை இயந்திரங்களாக்கி அவ்வச் சூழலில் ஊறி மீண்டுவரும் அதிவேகமாற்ற ஆளிகளை வழங்கி விடுகிறதோ என்று எண்ணும் அளவிற்கு மனதின் வேகம்; அதன் செயற்பாடு எல்லாமே.

இச் சமூக மக்களின் வாழ்வு இதுவரை பெரும்பாலும் வெளிநாட்டில் தங்கியிருந்து, இப்புலம் பெயர்வின்பின், ஜோன் ரஸ்ஸலின் 'குடாநாட்டுடனான ஈர்ப்பு' வெளிநாட்டுடனான ஈர்ப்பாக மாறிச் சமூக மனங்களைச் செயற்படத் தூண்டியுள்ளது. இவ் வெளியேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் முனைசாலிகளினதாக அமைந்துவிட்டதால் சமூக மனங்கள் மேலும் பின்னடைய ஊக்கியாகின்றது. குறிப்பாகக் கல்வி நிறுவனங்களிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் உள்ள சமூக மனங்களில் அறிவியல் சார்ந்த, உணர்வு சார்ந்த ஒரு ஆழமான, வலுவான பதிலை வழங்கியுள்ளது. படித்தலில், படிப்பித்தலில் 'ஏனோ தானோ' எனும் பிடிப்பற்ற விரக்தி உணர்வு தோன்றியுள்ளது போல் தென்படுகிறது. இவையும் சமூக இருப்பு, கட்டமைப்பு, வளர்ச்சி என்பனவற்றில் முக்கிய தாக்கம் செலுத்தும் காரணியாகின்றது.

இழப்புக்களை உள்வாங்கும் பதிவுகளில் பொருளிழப்பு, உயிரிழப்பு, ஊரிழப்பு என்பன உள்ளடக்கப்பட்டும், இப் பெருத்த இடம் பெயர்வு மக்களின் மனங்களில், வாழ்தலில் ஒரு வலுவான பிடிப்பை விதைத்துச் சென்றுள்ளமை சமூக இயக்கத்திற்கு வாழ்வுக்கு வேண்டியதொன்றே. முன்னர் தமது முற்றத்து மாவின் மகிமை பற்றி, ஏன் மொத்தத்திலுள்ள உடமைகள் பற்றியெல்லாம் வர்ணிக்கும் அளவு பற்று வைத்தவர்கள், இன்று அவற்றையெல்லாம் இழந்து வேறு புலங்களில் வாழ்ந்து வரும் மனப்பாங்கைப் பெற்றுள்ளமை வரவேற்கப்படவேண்டியது. இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது, இடம் பெயர்வின் முன் வாழ்ந்தது போன்ற மனச் சமநிலையைப் பெற்று மக்கள் (ஓரளவு) வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதே. இதனால் இக் கட்டுரை முற்றாகவே "உடைமைகள் மீதான பற்று" (Possessiveness) இப் புல மக்களின் சமூக மனங்களில் இல்லாது போய்விட்டது என்பதைக் குறிக்கவில்லை. ஏனெனில் உ—ம் புலம் புகுந்தோர் ஏனையோரின் உடைமைகளை அனுமதியின்றி, எடுக்கின்றார்கள், களவாடுகின்றார்கள் என்பது உடைமைகளின் மீதான பற்றையே வெளிக்காட்டி நிற்கிறது.

மாறாக இதுவரை இருந்துவந்த சமூக மனப்பாங்கு ஒரு தன்னமை வாக்கலைப் (Accomodation) பெற்று சமூக உள அமைப்பை, அதன் அனுபவத்திரளமைப்பை மாற்றி அமைத்துள்ளது. இவ் உளமாற்றம், இப் புலம்பெயர்வால் ஒரு சமூகத்தின் இருக்கைக்கு, இயக்கத்திற்கு மிக வேண்டியதொரு நேர்முகமான முன்தாவுகை என்றே (Positive Improvement For Social Existence & Social Dynamics) சமூகவியல் நோக்கில் கொள்ளப்பட வேண்டும். இப் பெருத்த மனப்பாங்கு மாற்றம் — புலம்பெயர்ந்த கணத்திலிருந்து சமூக மனங்களில் ஆழப்பதிக்கப்பட்ட தொடர்ச்சியான மரணம் பற்றிய பயமும், புலம் புகுந்த சமூக வாழ்தலில் உள்வாங்கிய உளமுரண்பாடுகளின் வடுக்களும் அடிமனங்களிலேயே பதிக்கப்பட்டமையால், இவ் விரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகளுக்கும் இடையே உள்ளத்தை நெருட வேண்டி ஆனால் நெருடாமலேயே, அல்லது இவ்விரண்டு பதிவுகளுக்கும் இடையே தன்னியல்பாகவே தனது இழப்பின் இருப்பைப் பதித்துச் சென்றுள்ளதோ?. இழப்பின் பதிவில், இதுவரை, 'இவற்றை இழந்தால் எம்மால் வாழ முடியாது' என்ற மனப்பதிவு அகன்று, 'இழந்தாலும் வாழுவோம்' என்ற உள்ளீடு ஒன்று புகுந்திருப்பது இன்று யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற, புலம் பெயர்வின் முன் வாழ்ந்து இன்று வெளியேறியுள்ள அனைத்துச் சமூக மனங்களும் வெவ்வேறு பெறுமானங்களிலாவது உணர்ந்திருக்கும் என்பது மறுக்கப்பட முடியாதது.

யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒவ்வொரு சமூக நிறுவனங்களின் (குடும்பம், பாடசாலை, தேவாலயம், கோயில், ஏனைய அமைப்புக்கள்) சமூக மனங்களையும் தொலை நோக்கியினூடு பார்த்தால், தெற்றெனத் தெரிவது பயம், விரக்தி, அதிர்ச்சி, சோகம் எனும் உணர்வுத்தளங்களே. இவ் வுணர்வுகள் கூட உளவியல் ரீதியில் உரிய வெளிப்படுத்தல்களுடன் அடிமனங்களில் பதிக்கப்பட்டுள்ளதா ? அல்லது முழுமையான வலுவுடன் 'உயிருடனேயே புதைக்கப்பட்டுள்ளதா'? என்பதோ, திடீர் அதிர்ச்சிகளை நாளாந்தம் சமூக மனங்கள் எவ்வாறு உட்பதித்து தமது நாளாந்த நிகழ்வுகளில் ஈடுபட்டுக் கொள்கின்றன? என்பதோ அறியமுடியாததாகவே உள்ளது. இதற்கான விடை சமூக உளவியல் அடிமன ஆய்வின் மூலம் பெறப்பட வேண்டும். இன்று இங்கு சமூக மனங்களின் உணர்வுச் சட்டகம் இறுக்கப்பட்டு சமூக இயக்கம் நடைபெறுகிறது.

1994 அக்டோபர் 02-ல் வெளிவந்த Sunday Times ல் 'யுக்திய' என்ற சிங்களப் பத்திரிகையின் உதவி ஆசிரியர் அவர்கள் நேர்காணல் ஒன்றில் பகர்ந்தவற்றில் சில பகுதிகள் இங்கு அவற்றின் தாக்கம் பிரதிபலிக்குமாறு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மீள் பதிவு செய்யப் படுகிறது.

" ......... போர் காரணமாக, வடக்கில் சிறுவர் முதல் பெரியவர்வரை தொடர்ச்சியான மரணபயத்துள் வாழ்கிறார்கள். இது ஒரு உளவியல் படுகொலை. இச் சிதைந்த மனநிலை ஒருவித முரட்டுத் தன்மைக்கு வழிநடத்திச் செல்கிறது. இங்கே தமிழர்கள் தமிழர்களைக் கொல்கிறார்கள், மற்றவர்களையும் ........ வடக்கில் உள்ள அனைத்து மக்களும் உணர்ச்சி உடைந்தவர்களாக, (அழிந்தவர்களாக) இருக்கிறார்கள்." .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சமூக உருவாக்கத்தினுள்ளும் ஒரு கருத்துநிலை (Ideology) மேலாதிக்கத்துடன் விளங்கும். இது சமூக – இலக்கிய வரலாற்று உண்மை, ஆனால் அக் கருத்து நிலை தன்னைத்தானே வெளியிட்டுக்கொள்ளும் முறையில் வேறுபாடுகள் இருக்கலாம். புலம் பெயர்ந்த பின் மீளக் குடியமர்ந்த யாழ் சமூக மக்கள் மனங்களில், புதிதாக சமூக உருவாக்கத்தினுள் ? மேற்கிளம்பியிருக்கும் பிரதான கருத்து நிலை தனிநாட்டுப்போரோ, இனப்போரோ, சம உரிமைப் போரோ, அல்ல மனிதர்களைக் கூர்ப்பு நிலைப் படியமைப்பில் வைத்துக் கூறிய டார்வினின் 'வாழ்தலுக்கான போராட்டமே.' (Struggle For Existence) அதன் விளைவான வலியது வாழுகின்றது. (Survival Of The Fittest)

இக் கட்டுரை, இன்று நாம் ஒரு சமூகஉருவாக்க வட்டம் பூர்த்தியடைந்து, புதிய சமூக உருவாக்கத்தின் ஆரம்பத்தில் இருக்கிறோம் என்று எடுகோளிட முயலுகையில், அப் புதிய சமூக உருவாக்கத்தின் வீழ்ச்சியோ, சிதைவோ இங்கு இன்று வாழும் ஒவ்வொரு சமூக மனங்களிலும் ஓர் ஆழமான உண்மையை விளங்கிக் கொண்ட சிதைவாக, ஓர் வலுவான ஆற்றுப்படுத்தலை உள்வாங்கிய வீழ்ச்சியாகப் பாதிக்கப்பட்ட சமூக உளவியல் சார்ந்த கருத்துரை ஒன்று யுனெஸ்கோ கூரியரில் இருந்து மீள் பதிவு செய்யப்படுகிறது.

> ''மனிதர்கள் மனதில் போர்கள் தொடங்குகின்றன. எனவே அமைதிக்கான தற்காப்புக்களும் மனிதர் மனதில்தான் அமைக்கப்பட வேண்டும். அரசின் அரசியல், பொருளாதார ஏற்பாடுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட அமைதி, உலக மக்கள் அனைவரின் ஒரு மனதான ஆதரவினைப் பெற்ற நிலையான உளமார்ந்த அமைதியாக இருக்க முடியாது. எனவே மனித மனத்தின் அறிவார்ந்த அறிவியல் ஒருமைப்பாட்டின் மீது அதனை ஏற்படுத்த வேண்டும்.''

## உசாத்துணைகள்


1. சமூக விஞ்ஞானிகள் சங்கம் – இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், கொழும்பு, 1984.
2. முத்துலிங்கம், ச – கல்வி உளவியல், கொழும்பு.
3. Sunday Times – 02-10-94 Colombo
4. யுனெஸ்கோ கூரியர் – பெப்ரவரி, 1995.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகல் நடத்தை என்ற எண்ணக்கரு பற்றிய மீளாய்வு

# An Evaluation of the Concept of Deviant Behaviour

ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை
M. A, M phil, Dip. in. Ed

விலகல் நடத்தை கொண்டவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கப் பட்டவர்களாகக் குறியிடுதலை ஆழ்ந்து பார்க்கும்போது பொருத்த மற்ற ஒரு செயற்பாடாகவே தோன்றுகின்றது. சமூகத்தினால் ஏற் றுக்கொள்ளப்பட்ட செல் நெறிகளிலே இருந்து விலகிச் செல்வோர் களைப் பொதுவாக விலகல் நடத்தைகொண்டோர் என அழைக்கின் றனர். ஆனால் இக்கருத்து அனைத்து நிலைகளுக்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தமானது அன்று.

விலகல் நடத்தைக்காரர்கள் தொடர்பான பிரதிபலிப்புக்கள், சமூகத்திலே மூன்று வகையாகக் காணப்படுகின்றன. அவையாவன :

(1) வெகுமதி அளித்தல்
(2) தண்டனை வழங்கல்
(3) சகித்துக் கொள்ளல்.

எடுத்துக்காட்டாக ஒரு போர்வீரன் ஒழுங்குகளை மீறி எதிரி களைத் தாக்கி வெற்றி காணும்போது அவனுக்கு வெகுமதி கிடைக்க லாம். ஒருவன் சட்ட ஒழுங்குகளை மீறி சமூக விரோதச் செயலில் ஈடுபடும்போது அவன் தண்டிக்கப்படலாம். மேலும் சிறுவர்கள் சமூகம் ஏற்றுக்கொள்ளாத செயல்களைச் செய்தாலும் அவர்களைச் சகித்துக் கொள்கின்றது.

பொதுவாக மேற்குறித்த இரண்டாவது வகையான விலகல் நடத்தை தொடர்பாகவே சமூகவியல் மாணவர்கள் நாட்டங் கொள் கின்றனர். சமூகவியலில் விலகல் நடத்தைபற்றிய பின்வரும் மார்ஷல் கிளினாட்டின் மேற்கோள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ''சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளத்தக்க சகிப்பு எல்லையை தாண்டிவிடும் நிலையில் உள்ள நடத்தையும் அதனை உருவாக்கின்ற சந்தர்ப்பங்களும் விலகல் பண்புடையதாகக் கருதப்படுகின்றது.'' விலகல் என்பது சார்புடைய ஓர் எண்ணக்கருவாகும். திட்டவட்டமாக அதனை வரையறை செய்வது கடினமானது. உதாரணமாக மேலே குறிப்பிட்ட மேற்கோளில் சகிப்புத்தன்மையின் எல்லையென்பது வரையறை செய்ய முடியாததொன்று. மேலும் விலகல் பற்றிய எண்ணக்கரு, சமூகத்திற்குச் சமூகம், இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபட்டுக் காணப்படுகின்றது. மேற்கூறிய கருத்தை விளக்குவதற்கு மேலும் ஒருசில உதாரணங்களைத் தரலாம். மது விலக்கு நடைமுறையில் உள்ள பண்பாட்டில் மது அருந்துதல் ஒரு விலகல் நடத்தை ஆகும். ஆனால் மது விலக்கு அற்ற பண்பாட்டில், மது அருந்துதல் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நடத்தையாக விளங்குகிறது.

அடுத்ததாக, 1969 க்கு முன்னர் பிரித்தானியாவில் தன்னினச் சேர்க்கை ஒரு குற்றச் செயலாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று சட்டரீதியாக அது ஒரு குற்றச் செயலாகக் கருதப்படுவதில்லை.

**உள - உயிரியற் கோட்பாடு**

இக்கோட்பாடு விலகல் நடத்தையினை ஒருவரின் பாரம்பரிய இயல்புகளுடன் தொடர்புபடுத்தி விளக்க முற்படுகிறது. அதாவது ஒரு கொலையாளி சமூகத்தால் உருவாக்கப்படுவதில்லையென்றும் அவன் பிறப்பினாலே விலகல் நடத்தைக்குரிய அம்சங்களைக் கொண்டுள்ளான் என்றும் வலியுறுத்துகிறது. 1876 இல் சீசார் லொம்புறோசோ என்ற உயிரியலாளர் எழுதிய நூலிலே இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். மேலும் தன் நிலையை வலியுறுத்த உடற்கூற்றுயல் அம்சங்களையும் சுட்டிக் காட்டுகின்றார். ஒரு கொலையாளியின் தாடைகள் அகன்றும், காது பருத்தும், கன்னை எலும்பு பெரிதாகவும், மேலதிகமான கை, கால் விரல்கள் காணப்பட்டும், நோவிற்குரிய உணர்வுகள் குன்றியும் இருக்குமென இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இக்கோட்பாடு சமூகவியலாளர்களால் முற்றாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் விலகல் நடத்தைக்குரிய உயிரியல் பண்புக் கூறுகளை சமூகவியலாளர்கள் முற்றாக நிராகரிக்கவும் இல்லை. பிரபல பிரித்தானிய உளவியலாளரான ஹான்ஸ் ஐஸ்நக் உயிரியலை அடிப்படையாகக் கொண்ட ஆளுமைப் பண்புகளுக்கும் விலகல் நடத்தைக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதாகக் கூறியுள்ளார். இக் கோட்பாட்டினை ஆதரிக்கும் தற்காலச் சிந்தனையாளர்கள் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கையுடன் செயற்படுகின்றார்கள். அதாவது ஒருவன் தனது பாரம்பரிய இயல்புகளுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட ஓர் அடிமை அல்ல என்பது அவர்களின் நிலைப்பாடு.

ரெயிலர், வால்ரன் போன்ற சமூகவியலாளர்கள் இதன் தொடர்பில் ஒரு மாற்றுவகைக் கருத்தினை முன்மொழிகின்றார்கள். தாழ்ந்த வருமானம் கொண்ட தொழிலாளர் வர்க்க சிறுவர்கள் மத்தியில் நெறி பிறழ்வுகள் கூடுதலாக இருப்பதற்குக் காரணம், மாளாத வறுமையும், பசியும், பிணியும், கூடுதலான உடல் உழைப்பும், சீரிய பொழுதுபோக்கு இன்மையுமாகும். அவ்வாறாயின் உயர்ந்த சமூக வர்க்கத்தினரிடையே காணப்படும் நெறி பிறழ்வுக்கு எவ்வாறு விளக்கங் கொடுக்க முடியும்?

சமூக விழுமியங்கள் உயிர்ப்பாரம்பரிய அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. அவை எந்தச் சமூக வகுப்பினராலும் கற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட நடத்தையானது முற்றுமுழுதாக உயிர்ப்பாரம்பரியத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை திட்டவட்டமாக நிரூபிக்க முடியாது. ஓர் உயிர்ப்பாரம்பரிய அலகினை முழுத் தொகுதியிலிருந்தும் வேறுபடுத்தி அதுவே குறிப்பிட்ட நடத்தை மீது செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை நிறுவுதல் சாத்தியமற்ற ஒரு செயலாகும்.

உயிரியற் கோட்பாடுகளுக்கும், உளவியற் கோட்பாடுகளுக்குமிடையே சில பொதுப்பண்புகள் காணப்படுகின்றன. ஒரு நியமமான மக்கள் தொகுப்பில் விலகியோராகக் காணப்படுபவர்கள் சாதாரண நிலையிலிருந்தும் பிறழ்வு கொண்டோராகக் காணப்படுகின்றனர். உளவியற் கோட்பாடுகள் விலகல் நடத்தை என்பதைக் ''கற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை'' என்றே வலியுறுத்திக் கூறுகின்றன. சமூகமயமாக்கல் செயல் முறையில் நிகழும் தவறுகளே பிறழ்வுநிலைகளுக்கு இட்டுச் செல்கின்றன. இவ்வகையான ''பழுது கொண்ட சமூகமயமாக்கல்'' மனவெழுச்சிக் குழப்பங்களை ஒருவரிடத்து உண்டாக்குவதுடன், சீராகப் பிறழ்வு கொண்ட ஆளுமைக் கோலங்களையும் அவரிடத்து ஏற்படுத்தி விடுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பவுல்லிஸ் என்ற உளவியலாளர் மேற்கொண்ட ஆய்வு குறிப்பிடத்தக்கது. அவர் பாலியத் திருட்டுக் குற்றம் புரிந்த 44 சிறுவர்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார். தாய் – பிள்ளைத் தொடர்புகளில் நிகழ்ந்த மனவெழுச்சிப் பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமான அளவிலே கிடைக்கப் பெறாத அவல நிலையினால் உருவான உளத்தாக்க ஆளுமையின் விளைவாக, பலாபலன்களைக் கருதாது செயற்படும் நிலைகள் அவர்களிடத்தே உண்டானது. பொதுவாக அவர்கள் குற்றவுணர்ச்சி கொண்டவர்களாகவும், தண்டனைகளுக்குக் குறைந்தபட்சத் துலங்கல் கொடுப்பவராகவும் காணப் பட்டனர்.

சமூகவியல் ஆய்வாளர்கள் விலகல் நடத்தையினை சமூக பண்பாட்டுக் காரணிகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றனர். உளநலத்தில் எவை உள்ளடங்குகின்றது என்பது பற்றியும், ஆளுமையை எவ்வாறு அளவிடு செய்தல் என்பது பற்றியும் உளவியலாளர் குறைந்தளவு விளக்கம் தருதலையும் சமூகவியலாளர் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தகைய குறைபாடுகள் காணப்பட்ட பொழுதும் உளவியல் சார்ந்த எமது சமூகம் ஏற்றுக் கொள்ள முடியாத செயல்கள் சமூகக் கட்டுப்பாட்டு முகவர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. (உ+ம்) மூளைச்சலவை, போதை மருந்து, மின் அதிர்ச்சி வைத்தியம், பல்வேறு வடிவிலான உள மருத்துவ முறைகள் நமது நாட்டிலும் நடைமுறையிலுள்ளன.

தொழிற்பாட்டுவாதம்

தொழிற்பாட்டுவாதம் தனிமனித நோக்கினைக் கைவிட்டு, சமூகத்தை முழுமையாக நோக்குகின்றது. விலகல் என்பது பயனுள்ள நேர்நிலையான தொழிற்பாடுகளையும் புரிவதனால் எந்த ஒரு சமூகத்துக்கும் அது தேவையாகக் கருதப்படுகின்றது. ''எந்த ஓர் ஆரோக்கியமான சமூகத்தினதும் ஒன்றிணைந்த பகுதியாக விலகல் நடத்தைகள் இருக்கும்'' என்பது எமில் துர்க்கைம்மின் கருத்தாகும். சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் சமூகத்தின் பொதுவான திரட்டிய ஆழ்பற்றுக்கள் (Collective Sentiments) என்பதற்குப் பங்குதாரர்களாக இருக்கும் வேளை, அனைவரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும் என்பது இயலாத செயலாகும் என அவர் மேலும் குறிப்பிடுகின்றார். தொழிற்பாட்டுவாதத்தினரது கருத்துப்படி குற்றச் செயல் என்பது தவிர்க்கமுடியாததொன்று மாத்திரமல்ல அது சமூகத்தொழிற்பாட்டுடன் இணைந்த செயலுமாகின்றது. குற்றச் செயல்கள் அளவுக்கு மீறிய உயர் நிலையை அடையும் பொழுது அவை தொழிற்பாட்டுக் குறைவாகக் (Dysfunctional) மாற்றமடையும்.

எல்லாவிதமான சமூகமாற்றங்களும் ஒரு வித விலகல் வடிவில் ஆரம்பிக்கும். கடந்தகால விலகல் நடத்தை நிகழ்காலத்தில் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத்தக்க நடத்தையாகவும் மாறலாம். உதாரணமாக சுபாஸ் சந்திரபோஸ், நெல்சன் மண்டேலா முதலியோர் ஒரு காலத்தில் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டனர்.

காலவோட்டத்தில் அவர்கள் விடுதலை வீரர்களாகவும், வியத்தகு வீரர்களாகவும் கருதப்படுகின்றனர். மாற்றம் ஒன்று நிகழ்வதற்கு திரட்டிய ஆழ் பற்றுக்கள் அதிக வலுவுள்ளதாக இருத்தலாகாது. அவ்வாறு இருக்குமாயின் தொடங்கும் ஆற்றல்கள் புத்தாக்கங்கள் முதலியவை முறியடிக்கப்பட்டுவிடும். திரட்டிய ஆழ்பற்றுகள் அதிக வலுவுள்ளதாக இருந்திருப்பின் ஜேசு, காந்தி, புத்தர், மாட்டின் லூதர் கிங், அன்னை திரேசா முதலியோரை உலகம் கண்டிருக்க முடியாது. விலகல் நடத்தைகளை மேற்கொண்ட அவர்கள் பிற்காலத்தில் தமது நடத்தைகள் நியமமான நடத்தைகளாகக் கருதப்படும் என்ற கருத்தையும் முன்மொழிந்தனர்.

எமில் துர்க்கைம் இக்கருத்துக்களை விளக்கும் பொழுது தண்டனை முறைமை பற்றியும் குறிப்பிட்டார். குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கும் பொழுது சமூகத்தில் அவற்றை நீக்குவதை நோக்கமாகக் கொள்ளக்கூடாது. ஒரு குறிப்பிட்ட வலுமட்டத்தில் திரட்டு ஆழ் பற்றினைப் பராமரிக்கும் வகையில் தான் தண்டனைகள் வழங்கப்படல் வேண்டும். இது பற்றி ரூசோ குறிப்பிடும் பொழுது ''சுதந்திர சித்தம்'' என்ற தொடரில் விலகல் நிகழும் போது ''சுதந்திரம்'' தோன்றும் என்று குறிப்பிட்டார். ஒரு ஆரோக்கியமான சமூகத்தில் குற்றமும் தண்டனைகளும் வேண்டப்படுகின்றன. இரண்டும் தவிர்க்க முடியாதனவாயும் தொழிற்பாட்டுக்கு இன்றியமையாதனவாயும் கருதப்படுகின்றன. ஆனாலும் ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது குழு மாத்திரம் ஏன் விலகலை ஏற்படுத்துகின்றார்கள் என்ற அடிப்படை வினாவுக்குரிய விடையை துர்க்கைம் அணுகவில்லை.

## றொபேற் மேற்றன் – சமூகக்கட்டமைப்பும் தனியமும் (Social Structure and Anomie)

சமூகக்கட்டமைப்பின் வழியாகவும், பண்பாட்டுக் கோலத்தின் வழியாகவும் பிணிசார் ஆளுமைப்பண்புகள் தோன்றுகின்றன என்று மேற்றன் கருதினார். சமூகமும் பண்பாடும் அந்தக் கட்டமைப்பில் உள்ளோர் மீது அழுத்தங்களைக் கொடுத்து விலகல் நடத்தைகளை வருவிக்கின்றன. தனது கருத்தை விளக்க அவர் அமெரிக்க சமூகத்திற் காணப்படும் ''வெற்றியின் இலக்குகளைப் பகிர்ந்து கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னல்'' என்பதைச் சான்றாதாரமாகக் காட்டினார். அமெரிக்க சமூகத்தில் கல்விசார் அடைவுகள், கடின உழைப்பு, ஆற்றல், விருப்பு, முயற்சி முதலியவற்றால் ஒருவர் வெற்றிகளைப் பெறமுடியும் என்பது அங்கீகரிக்கப்பட்ட வழிகளாகும். அங்கு வெற்றியீட்டலுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் அவற்றை அடையும் வழிகளுக்குக் கொடுக்கப்படவில்லை.

## விலகல் பற்றிய இடைவினை நோக்கு:

மேற்கூறிய அணுகுமுறைகளில் இருந்து இடைவினைக் கோட்பாடு வேறுபடுகின்றது. விலகியோர்மீதும், விலகலை விளக்கும் வரைவிலக்கணத்தின் மீதும் இது கவனத்தைக் குவிக்கின்றது. ''சமூகக் குழுக்கள் விலகலுக்குரிய வரைவிலக்கணத்தை வகுக்கின்றன, அவற்றைக் குறிப்பிட்ட மக்கள் மீது பிரயோகிக்கின்றன. அவர்களைக் குறிப்பிட்ட வரையறைக்குள் அடங்காதவர்கள் என முத்திரையிடுகின்றன என்று ஹொவார்ட் பெக்கர் குறிப்பிடுகின்றார். அதாவது ஒரு சாரார் இன்னொரு சாராரை ''விலகியோர்'' என மதிப்பிடுகின்றனர்.

வறுமை நிலையிலுள்ள ஒரு சிறுவன் ஒரு குற்றத்தைப் புரியும் பொழுது அவன் ''பாலிய குற்றவாளி'' என்று பணம் படைத்தோரால் பட்டம் சூட்டப்படுகின்றான். அதே செயலை பணம் படைத்த ஒரு சிறுவன் புரியும்பொழுது அவன் ''இளமையின் வீரதீர உணர்வுகளால் அதனை மேற்கொண்டான்'' என்று புகழ்ந்துரைக்கப்படுகின்றான். அதாவது, விலகியவருக்கும், விலகலுக்கு துலங்குபவருக்குமிடையே ஏற்படும் இடைவினை வாயிலாகவே ''விலகல்'' பற்றிய விளக்கம் முன்மொழியப்படுகின்றது என்று அவர் குறிப்பிடுகின்றார்.

ஆனாலும் விலகல் எவ்வாறு ஊற்றெடுக்கின்றது என்பதை இடைவினைக் கோட்பாட்டாளர் விளக்கத் தவறிவிடுகின்றனர். விலகல் நடத்தைகளை ஏற்படுத்தும் சிலர் பெரும் சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிய முயல்கின்றனர். சிலர் தாம் விலகியோர் என்பதை உணராது தமது நடத்தைகள் பற்றிப் பெருமை கொள்கின்றனர். மேலும் குருக்கள் செய்தால் குற்றமில்லை எனவும் கூறப்படுவதுண்டு. அரச சொத்துக்களை மறைமுகமாகப் ''பெரியவர்கள்'' கொள்ளையடிப்பதை தமது நிறுவனத்துக்காகச் ''சேவை'' செய்வது என்று கூறிக் கொள்பவரும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து நோக்கும் பொழுது, விலகல் பிரச்சினை தொடர்பான எதிர்நோக்கலை ஆழ விளங்கிக் கொள்வதற்கு பின்வரும் வினாக்களுக்கு விடைகாண வேண்டியுள்ளது.

1. சட்டத்தை உருவாக்குபவர் யார்?
2. சட்டத்தால் யார் நன்மை பெறுகின்றனர்?
3. சட்டத்தை மீறி உடைப்பவர் யார்?
4. அகப்பட்டுக் கொள்பவர் யார்?
5. தப்பிக் கொள்பவர் யார்?
6. சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர் யார்?
7. சட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தல் வேண்டும்?
8. இலஞ்சம் என்பது என்ன?
9. வெகுமதி என்பது என்ன?

எவ்வாறாயினும் விலகல் நடத்தையை விளங்கிக்கொள்ள தனியொரு கோட்பாடு மட்டும் போதாது. பரம்பரையும் சூழலும் ஒருவரின் ஆளுமை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்:


1. Aronson. S – 'The Social Animal,' Freeman & Co, Sanfrancisco, 1980.
2. Haralambos. M and R. M. Heald – Sociology, Themes and Perspective, oxford University Press, New Delhi, 1992.
3. Kumar – 'Advanced Sociological Theories', Lakshmi Navain Agarwal Educational Publishers Agra - 3, 1994.
4. Piaget, J – 'The Moral Judgement of a child, The Free Press, Newyork, 1965.
5. Parson. T – 'Social Structure and Personality, The Free Press Collier & Macmillan Ltd, London, 1964.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட மேம்பாட்டின் சமூகவியல்
# Sociology of Human Development

என். சண்முகலிங்கன் M. A.

எங்கு பார்த்தாலும் மேம்பாடு ( Development ) என்பதே பேச்சாகவிருக்கின்றது. அரசியல்வாதிகளிலிருந்து ஆய்வாளர்கள்வரை, வலதுசாரிகள், இடதுசாரிகள், கீழை – மேலை தேயத்தவர் என எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் ‘அவரவர் அவர் வழி’ என்ற விதமாய் பொருள் கொள்ளப்படுகிறது. இதனால், இந்தப் பதம் தனக்குரிய அறிவியல் அந்தஸ்தை இழக்க நேரிடுகிறது. இந்நிலையில் தான், சமூகவியலின் புதிய கிளையாக முகிழ்த்துள்ள மேம்பாட்டின் சமூகவியல் ( Sociology of Development ) கைகொடுக்கின்றது. மேம்பாடு தொடர்பாக நிலவும் வேறுபட்ட கருத்தியல்களை விளங்கிக் கொள்ளவும், அவற்றினை ஒழுங்குபடுத்தி, அந்தப் பதத்திற்கு உரிய அர்த்தம் காணவும், சமூகவியலின் முழுதளாவிய அணுகுமுறை ( Holestic Approach ) துணையாகிறது. இந்த அறிவின் வழி, நிலவும் மேம்பாடுபற்றிய கருத்தியல்களை பகுப்பாய்வு செய்வதும், அர்த்தமுள்ள விளக்கம் காண்பதுமே இந்தக் கட்டுரையின் நோக்குமாகும்.

நிலவும், மேம்பாடுபற்றிய அத்தனை கருத்தியல்களையும் இரண்டு முக்கிய சிந்தனைக் குழுமங்களுக்குள் அடக்கிவிடமுடியும்.

i. மாக்ஸியர் அல்லாதோர் ( Non - Marxist)
   மாக்ஸிய எதிர்ப்பாளர் ( Anti - Marxist )

ii. மாக்ஸியவாதிகள் ( Marxist )

சில அறிஞர்கள், முதல்வகையினரை முதலாளித்துவ அல்லது சமூக நலநோக்கினராகவும், இரண்டாம் வகையினரை சமூக சமத்துவ நோக்கினராகவும் குறிப்பிட விரும்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாக்ஸியர் அல்லாதோர் பார்வையில்:**

சமூகமேம்பாடு என்பது வாழ்க்கைத்தர வளர்ச்சியாகவே இவர்களால் பெரிதும் கருதப்படுகிறது. உதாரணமாக வாணர் ( Warner, 1971 ) 'சமூகத்தில் மக்கள் வாழ்விற்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதே மேம்பாடு' என்பதனை குறிப்பிடலாம். வாழ்க்கை வாய்ப்புக்கள் பற்றிய அர்த்தம் விரிந்தது. மக்ஸ் வெபரிலிருந்து ( Max Weber ), இன்றைய ஐக்கிய நாடுகள் சபை வரைவிலக்கணம் வரை இந்தப் பொருள் விரிவு புலப்படும்.

> மேம்பாட்டின் இறுதி இலக்கு, அனைத்து மக்களுக்குமான வாய்ப்புக்களை அதிகரிப்பதாகும்; இதற்காய் கல்வி, உடல்நலம், சத்துணவு, வீட்டுவசதி, சமூக நலம்சார் வாய்ப்புக்களை விரிவாக்குதல், மற்றும் சூழல் வாய்ப்புக்கான ஏற்பாடுகளைக் காணல் வேண்டும். (U. N. O. 1975)

என்பது ஐ. நா. வின் எதிர்பார்ப்பு. மேம்பாட்டின்வழி சமூக ஒழுங்கு ( Social Order ) பேணப்படல் வேண்டும் என்பது, இவர்களின் கருத்தியல் குவிமையம்.

**மாக்ஸியவாதிகள் பார்வையில் :**

மேம்பாடு என்பது, இவர்கள் கருத்தியலில், நவீன சமத்துவ விழுமியங்களினடியானது. சமூகமேம்பாடு தொடர்பான கிம் ( Kim 1973 ) தரும் வரைவிலக்கணம், இவர்களை நன்கு பிரதிபலிக்கும்.

> வாழ்வின் அனைத்துத் தளங்களிலும், குறிப்பாக சமூக — பொருளாதார நீதி, பொருளாதார செழிப்பு, அரசியல் சுதந்திரம், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினை பெறமுடியாதவாறு மறுக்கப்பட்ட மக்கள், எந்தளவிற்கு அவற்றினைக் கேட்கவும், பெறவும் முடிகிறது என்பதனை பொறுத்தே சமூக மேம்பாடு.

என்பார் கிம். இங்கு சுரண்டல்வழி சமூக ஒழுங்கினின்றும் விடுதலை காண்பதே, மேம்பாட்டின் இலக்காகிறது. மாற்றத்துக்கான இயங்கியல், இவர்கள் கருத்தியலின் குவிமையம்.

மேம்பாடு தொடர்பான பரந்த இந்த அணுகுமுறைகளில் ஒன்றை தத்தமது கருத்தியல்களினடியாக ஆய்வாளர்கள் தெரியவேண்டியிருந்தது. ஆய்வாளர்கள் மட்டுமன்றி அனைத்துத் தரப்பினர் நிலையும் இதுவாகவேயிருந்தது. இங்கும் இரு வகையினர், ஒரு வகையினர் குறித்த கருத்தியல்களை அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்படுபவர்கள்; மற்றவர்கள் விமர்சன வழி செயற்படுபவர்கள்.

இந்த இருவேறு சிந்தனைக் குழுமங்களின் முரண்பாடுகளையும் ஆக்க பூர்வமான முறையில் தர்க்கித்து பொருத்தமான முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை இணைத்து, புதிய சிந்தனைகளைக் காணும் திசையிலும். சில ஆய்வாளர்கள், 'வாழ்க்கைத் தரம்' என்பதனை வாய்ப்பாடாகச் சொல்லி, தலாவீத வருமானக் கணக்குகளுக்குள் — மேம்பாட்டைக் காண்பது சாத்தியமானதா? எல்லாத் தலைகளையும் இந்தவளம் சேர்கிறதா? அப்படி எல்லாத்தலைகளுக்கும் கிடைத்தபோதும் தனியே 'பொருள்வளம்' மட்டும் மேம்பாடாகிவிடுமா? நவீனமயமாக்கத்தின் வழி மேம்பாடு; நவீனமயமாக்கலின் வழிதான் மேம்பாடு என்றெல்லாம் பேசப்படும். ஆனால் நவீனமயமாக்க, தொழில்மயமாக்க, சமூகங்கள், 'இயற்கை மனிதனுக்கு' அந்நியப்பட்டுப் போயினவே: சமூக ஒழுங்கமைவின்மையும், தனிமனித குழப்பங்களும் தானே மேம்பட்டன, என கை நீல்சன் ( Nielson, 1981 ) போன்றோர் விமர்சிப்பார்கள்.

'மேம்பட்ட மனிதனை' — 'நவீன மனிதனை' தேடும் ஆராய்ச்சி, வெறும் சந்தை ஆராய்ச்சியாக, சந்தையை மையமாகக் கொண்ட நுகர்வோரைத் தேடும் முயற்சியாகவே முடிந்து போனது உண்மைதான்.

மேம்பாட்டின் பெயரால் இப்படி மானுடம் விலை போவதா? மாக்ஸியவாதிகளிலிருந்து பின்நவீனத்துவவாதிகள் வரை (Post Modernist) கேட்பது, நியாயமாகத்தான் இருக்கின்றது. சமூக ஆய்வானது, நடைமுறைப்பயன்பாடும், ஒழுக்கநிலை சார்பும் கொண்டதாக அமைய வேண்டியதன் அவசியம் இன்றையசமூக சிந்தனையில் முதன்மை பெறுவதும் இந்த பின்னணியில்தான் (Sudman & Wagner 1992)

கோட்பாடு ஒன்றாக, செயற்பாடு பிறிதொன்றாகிப் போகின்ற நிலைமையில், மாக்ஸியவாதிகளும் விமர்சனத்துக்குள்ளாவது தவிர்க்க முடியாததே. அதிகாரமற்ற, ஆதிக்கமற்ற எல்லோர்க்கும் வாழ்வென்ற சமூகமமைத்து - புதிய சமூக உறவுகளைக் காண்பது என்ற தமது இலக்கிலிருந்து விலகி, புதிய அதிகாரத்தினை நிறுவ முற்படும் இடங்களில், இவர்களும் இடறிப்போவது இயல்பே. மிகுந்த தூரதரிசனத்துடன் விமர்சன கோட்பாளர்கள் (Critical theorist) எழுப்பிய வினாக்களை (Held, 1980), இன்று மாக்ஸியவாதிகள் கருத்திலெடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இவ்வாறு நீண்ட விவாதங்கள், விமர்சனங்களின்வழி வெறும் பொருள்சார் கூறினுள் குறுகிப்போன 'மேம்பாடு', இன்று பரந்த பொருவில் வாழ்வின் அனைத்து சமூக பண்பாட்டு கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்க்கப்பட்டுள்ளது. 3ம் உலக நாடுகளின் மேம்பாட்டின் சமூகவியலை வரையறுக்க முற்பட்ட போட்ஸ் (Portes, 1981) உருவாக்கிய செயற்பாட்டு வரைவிலக்கணம், இன்றைய நிலையினை நன்கு பிரதிபலிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருளாதார உருமாற்றம்:

தேசிய உற்பத்தியில் நிலைபேறான துரித அதிகரிப்பு; உற்பத்திசார் முடிவுகளை எடுக்கும் மையங்களை ஆட்கொண்டு, நாட்டின் எதிர்கால விருத்தியை நோக்கி அவற்றினை இயங்கச் செய்தல்.

2. சமூக உருமாற்றம்:

வருமானத்தினை சமத்துவமான திசையில் பகிர்தல்; சமூகப் பொருட்களான ('Social goods') கல்வி, சுகாதார சேவைகள், போதுமான ளவு வீட்டுவசதிகள், பொழுதுபோக்கு வாய்ப்புக்கள், மற்றும் அரசியல்சார் முடிவுகளை எடுப்பதில் பங்குபற்றுதல் என்பன அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் திசையிலான செயற்பாடு.

3. பண்பாட்டு உருமாற்றம்:

தேசிய அடையாளங்களை, மரபுகளை மீள் உறுதி செய்தல்; மேட்டுக் குடி-பொதுமக்கள் (Elite - Masses) என்ற வேறுபாடு அகன்ற, புதியதொரு சுயபிரதிமையுடன் (Self Image), நாம் யார்க்கும் குடியல்லோம், 'இரண்டாம் தர பிரஜைகள் அல்ல' என்னும் நிலையினை எய்தல்.

மேம்பாட்டின் இந்த சமூகவியல் தரிசனம், பிரிக்க முடியாதபடி இணைந்துள்ள சமூக பொருளாதார பண்பாட்டு கூறுகளை தன்னகத்தே கொண்டு,மேம்பாட்டுக்குமுழுமையானதோர் அர்த்தத்தினை தருகின்றது. இந்த மூன்றினதும் வளர்ச்சியில்தான் மேம்பாட்டில் மக்களின் அர்ப்பணமும் சாத்தியமாகும். தமது தேசிய தனித்துவம் – சுயபிரதிமையை காணும் ஆர்வமே அவர்களை மேம்பாட்டு பணியில் இணைய வைக்கும் தூண்டல் கருவியுமாகும் எனும் ஹொரேவித்ஸ் (Horowitz, 1970) கூற்று மிகவும் அர்த்தமுள்ளது. எங்களது இன்றைய நிலமையில் மிக மிக அர்த்தமுள்ளது.

இவ்வாறாக 'மேம்பாடு' என்பது புதிய பரிமாணம் பெற்று புதிய கருத்தியல் வடிவம் பெற்ற போதிலும், அதன் நடைமுறை, அதனை யார் கட்டுப்படுத்துகிறார்கள்'? என்ற கேள்வியிலேயே போய் முடிகிறது. இன்று தேசிய அரசுகளே இறுதி மேம்பாட்டு அலகுகளாக இருக்கின்றன. அவற்றின் கொள்கை, திட்டமிடல் வழியேதான், மேம்பாட்டின் தன்மையையும் தீர்மானிக்கப்படுகின்றது. மேம்பாட்டு தொடர்பான தெளிந்த - அது சார்ந்த அனைத்து அம்சங்களையும் ஒன்றிணைந்த பார்வையும் நீதியான நடைமுறையும் இணையும் போது மேம்பாடு இயல்பாய் கைவசமாகிறது. அல்லாத போது நீதியான தேசிய அரசுகளை காணும் வரை மேம்பாடு என்பது தனக்குரிய அர்த்தத்தை பெற முடியாமல் போவது தவிர்க்கமுடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டின் சமூகவியல் எமக்குச் சொல்லும் பாடம் இதுதான். இந்த பாடத்தை படிப்பதற்கும், விளங்குதற்கும் பல்துறைசார் - ஒன்றிணைந்த அறிவு அவசியம் என்பதும் கூடவே வலியுறுத்தப்பட வேண்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக மானுட சமூக மேம்பாடு என்பது வெறுமனே தலைசார்ந்த அறிவினால் மட்டும் கிட்டிவிடாது; செயலில், இதயம் சார் உணர்வும் கலந்திட வேண்டும். அப்பொழுதுதான் சமூகம் மேம்படும்; மானுடம் வாழும்.

## உசாத்துணைகள்:


Held, David
1980 — An Introdaction to critical Theory : Horkheimer to Herbermas, Hutchinson & Co. (Publishers) Ltd.

Horowitz, Irving Louis
1970 — Three Worlds of Development; The Theory and Practice of International Stratification, London Oxford Univ. Press.

Kim, Kynog Dong
1973 — Toward A Sociological Theory of Development, Rural Sociology Vol. 38, No. 4

Nielson, Kai
1981 — Impediments of Radical Egalitarianism, American Phylosophical Quartely, Vol 18, No 2. pp 121 - 29

Portes, Alejandro
1976 — The Sociology of National Development - Theories, & Issues, American Journal of Sociology, Vol. 82, No 2. pp 55 - 85

Sudman, Steven & David Wagner
1992 — Post Modernism and Social Theory, Blackwell, Cambridge


11045.5.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNO 1975 – **Poverty, Unempolyment and Development Policy,** Newyork. pp. iv

Warner, W. Keith 1971 – Structural Matrix of Development in G. M. Beal R. C. Powers & E. C. Colward, Jr (ed), **Sociological Perspetive of Domestie Development,** Ames: Iowa : State Univ. Press.

---

**கொட்டுமுரசே !**

பாருக்குள்ளே சமத்தன்மை - தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமை செய்யாது - புவி
யெங்கும் விடுதலை செய்யும்

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்த
பாரை உயர்த்திட வேண்டும்

ஒன்றென்று கொட்டு முரசே - அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே - இந்த
நானில மாந்தருக் கெல்லாம்

— பாரதி


---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pioneers in the Field of Sociology

## Faculty of Arts - University of Jaffna



Stand ( L-R ) : Mr. M. Uthayakumar, Miss. T. Annet Vini Baby, Mr. R.M.J. Ravi Raja Puththiran, Miss. B. Priyatharshini, **Mr. K. Jaseetharan, Miss V. Varathagowry, Mr. A. Robinson**

Seated ( L-R ): Mr. S. Kirupananthan, Mr. N. Shanmugalingan ( Senior Lecturer - Sociology ), Prof. N. Balakirishnan ( Head-Dept. of Economics ), Prof. K. Gunaratnam ( Vice - Chancellor ), Prof. P.Balasundarampillai ( Dean - Faculty of Arts ), Mr.G.M. Sebestaiampillai ( Senior Lecturer - Sociology ), Mr. S. Thillainathan.

**In Absentia : N. Manoranjithan.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில்
அழகான புடவைகளின் இளவரசி

★

## இளவரசி புடவையகம்

இல. 57, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

---

மங்கையர்க்கான
எழில் கொஞ்சும் அழகு சாதனங்கள்
சிறுவர் பரிசுப் பொருட்கள்
உன்னதமான 'கொலோன்' வகைகள்
மற்றும் அனைத்து ஃபான்ஸி வகைகளுக்கும்

## நியூ பிரகாஸ் ஃபான்சி பலஸ்

63 A, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடம் சிறக்க

மனதார வாழ்த்துகின்றோம்.

# லிங்கன் கிறீம் ஹவுஸ்

இல. 119, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் அனைத்து சுபமுகூர்த்தங்களுக்குமான
பட்டு, பருத்தி புடவைக் கடல்

# சீமாட்டி

பனாரஸ், காஞ்சிபுரம், மைசூர் சில்க்
பெங்களூர் சில்க், பட்டு வேட்டிகள், சேட்டிங்
சூட்டிங் அனைத்து வகைப் புடவைகளுக்கும்

சீமாட்டி புடவைக் கடல்
இல. 122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*We thank those who donated their Heartiest Contribution towards 'Maanudam' publication with Sheer dedication by deeds not words.*

எண்ணம் போல
புடவை வகைகளுக்கு

**மலர்**
**புடவையகம்**
18, 67. A பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.

**சமுத்திரா**
**கடல் உணவு**
**ஏற்றுமதியகம்**

இல. 25, மாட்டின் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் 22 கரட் தங்க நகைகட்கு
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்



# நியூ சோபிதா நகைமாடம்

74/1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

நவ நவமான
ஆடைகள் தைத்திட

# நவம் தையலகம்

இல. 23, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

கிளை :

## வெல்பிFற் தையலகம்

10, பெரிய கடை வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொயலாஸ்

திருமண வைபவங்களுக்கான
வாடகைப் பொருட்கள்

பிளாஸ்ரிக் கதிரை, குசன் கதிரை, இரும்புக் கதிரை, தகரப்பந்தல், சிங்கப்பூர் சோடனைகள், சிங்கப்பூர் பாய், திருமணக் கார், வான் முதலியன வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**இல. 195, பிரதான வீதி**
**4 ம் குறுக்குத் தெரு**
**யாழ்ப்பாணம்.**

---


# ANNAT PHARMACY

*Dealers in*
Pharmaceutical,
Groceries & Milk Foods Etc.

114, Main Street
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Place Is Rich In Ornament
Adorn Yourself With Gold
Beauty Is A Joy Forever......




**New Lalithaa Jewellers**

**165, Sea Street,**
**Colombo 11.**
**Tel : 332948**

---

அழகே என்றும் ஆனந்தம்
தரமே எங்கள் தாரக மந்திரம்
அழகை அங்கத்தில் அணிந்து
வாழ்வு வளமாக......




**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**

170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Beauty is Power - Capture the Memories*

அழகு என்றும் ஆனந்தம் - ஆனால்
நிரந்தரம் அல்ல.
காலம் கடந்து கோலங்கள் மாறலாம்
காலத்தால் அழியா கோலக்காட்சிகளை
கவர்ச்சிகரமாக ஆக்கி அமைத்து
ஆனந்தம் கொள்ள




# சத்தியாஸ் போட்டோ

648, நாவலர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

---

## TIME FLIES - KEEP IT

" காலம் பொன் போன்றது
கடிகாரம் அதன் மகத்துவம் காப்பது "
கண்கவர் கடிகாரங்கள்
நியாயவிலை உத்தரவாதம்
புத்துயிர் ஊட்டல்
தேவைகள் பல
பூர்த்தியாகும் இடம் ஒன்று



# யாழ் வோஜ் வேக்ஸ்

55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் சமூகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org